Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

பொழிவு - 10
குவிப்பு - 12
பக்கங்கள் - 20

விலை ரூபா 25.00
டிசம்பர் - 2007

(ISSN 1800-2641)

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, St. Sebastian's St., Mannar, Sri Lanka.
Telephone No : 023-2222377/ 060-2233276, Fax No - 023 - 2222377, E-mail - nesanmn@yahoo.com

# கிறிஸ்மஸ் புதுவருட சிறப்புப் பொழிவு



**இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போர்க்கு ஒளிதரவும், நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும், நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும், இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடிவருகிறது**
(லூக். 1:78-79)

### மடுத்திருப்பதியின் பாதுகாப்புத் தொடர்பாக

## அதிகரித்துவரும் அதீத அக்கறை

மடுத்திருப்பதியின் பாதுகாப்புத் தொடர்பான அச்சம் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் நிலையில் மடுத்திருப்பதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி மன்னார் மறைமாவட்டக் குருக்கள் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர். (இந்தக் கடிதத்தின் முழு வடிவத்தை பக்கம் 17இல் காணலாம்)

இதேவேளை கொழும்புப் பேராயர் ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்களும் இவ்விடயம் தொடர்பாக விசேட கோரிக்கையை ஜனாதிபதிக்கு விடுத்துள்ளார்.

மடுத்திருப்பதியின் பாதுகாப்பை மனதிற்கொண்டு செபிக்கும்படி மன்னா பத்திரிகை அனைத்து இறைமக்களிடமும் வினயமாக வேண்டுகோள் விடுக்கின்றது.



### இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின்

## கிறிஸ்மஸ் செய்தி

"அமைதியின் அரசருடைய பிறப்புவிழாவைக் கொண்டாடும் இந்தப் புனிதமான காலத்தில் நாம் இறைவனின் பெயராலும், எமது மக்களின் பெயராலும் எமது அரசியல் தலைவர்கள் அனைவரிடமும் இரந்து கேட்பது யாதெனில் சுயநலம்மிக்க, இலாப நோக்கைத் தவிர்த்து, தொடரும் அழிவுகளிலிருந்து எமது நாட்டைப் பாதுகாத்து, ஒற்றுமைப் படுத்துவதற்கான செயற்பாடுகளில் தைரியத்துடனும், நம்பிக்கையுடனும் ஈடுபடுங்கள் என்பதே." (இச்செய்தியின் முழு விபரத்தை பக்கம் 17இல் காணலாம்)

# *A Joyous and Peaceful Season*



## மன்னா அன்பு நெஞ்சங்களே!

உங்களை நெஞ்சார நினைக்கின்றோம்.

அன்போடு நன்றி கூறுகின்றோம். கடந்து செல்லும் இந்த ஆண்டில் மன்னாவின் வளர்ச்சிக்காக நீங்கள் கைகொடுத்து உதவியுள்ளீர்கள். இனிவரும் புதிய ஆண்டிலும் உங்கள் பணியை நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றோம். அமைதியின் அரசராம் இயேசு கொண்டுவந்த அமைதி உங்கள் உள்ளங்களில் நிலைக்க வாழ்த்துகின்றோம், ஆசிக்கின்றோம், செபிக்கின்றோம். உங்களுக்கு எமது அன்பும், அருளும், சமாதானமும் நிறைந்த 2008 புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

நிறைந்த ஆசியுடன்
அருட்பணியாளர் நேசன், பதிப்பாசிரியர், மன்னா

## அருட்பணியாளர் மேரி பஸ்ரியனின்
# 23வது நினைவு தினம்
## 06.01.1985 - 06.01.2008



# வாசகர் எண்ணங்கள்

அருட்பணியே – எங்கள் கண்மணியே – அழகான குருமணியே - அறிவான அருள் மணியே – நிறைவான அருள் மொழியே!

ஈர்பத்து மூன்று ஆண்டுகள் கடந்தாலும் இதயத்தின் இன்ப நினைவலைகள் மறந்திடுமா? நடையில் நீவிர் மானின் நடையழகன், வனப்பில் வண்ணமயில் வடிவழகன், குரலோசையில் கருங்குயிலின் ஓசையழகன், சுறுசுறுப்பில் எறும்பின் விரைவழகன், மறக்கமுடியுமா மனிதருள் மாணிக்கத்தை!

இளவாலை ஈன்றெடுத்த முத்தே, வங்காலையில் பணிசெய்ய வந்த வலம்புரிச் சங்கே, நீர் இறந்த மாயமென்ன? நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைக்கையிலே. உம் இறப்பு செவிகளில் பட்டவுடன் துடியாய்த் துடித்தோம், பதறினோம், கதறினோம், கலங்கினோம், பொன்மயமான மேனியின் பூதவுடலைக்கூட காணமுடியவில்லையே! சண்டாளப் பாதகர்கள் சதிசெய்திட்டனரே. சரமாரியாய்க் குண்டுகள் துளைத்திடத் தீர்த்திட்டனரே துப்பாக்கி வேட்டுக்களை!

பாசத்தின் வதனம் தேசிழந்து விட்டதே! அம்மா என்ற அலறலுடன் ஆறாய் இரத்தவெள்ளம் பெருக்கெடுத்ததே! அநியாயமாக மாசற்ற மகனை மரிக்கச் செய்தனரே!

செயற்றிறன் உள்ள செம்மல் ஐயா நீவீர். சீரிய பண்பாட்டாளன் ஐயா நீவீர். யாழ் மறைமாவட்டத்திலிருந்து மன்னார் மறை மாவட்டத்திற்கு வந்த மாண்புமிகு நல்ல அமைச்சன் ஐயா நீவீர்.

இளைஞர் மேய்ப்புப் பணியை பணியாகக் கொண்டீர். வாழமுடியாத இளநெஞ்சங்களுக்கு வாழ்க்கைப் பாதையினை வழிசமைத்துவிட்ட வள்ளல் ஐயா நீங்கள்.

ஆயிரத்தித் தொளாயிரத்தி எண்பத்திரெண்டு சொல்லும் மடுப்பதியில் உங்கள் வரலாற்றை!



அருட்பணி. எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் தலைமையில் இளைஞர்களுக்காய் மாபெரும் ஒப்புரவு மகாநாட்டைக் கூட்டினீர். அதை மறக்கமுடியுமா? நெஞ்சம்தான் நினைவிழந்து செல்லுமா?

எம்மவரை இளைஞர் மேய்ப்புப் பணியில் இணைத்திட்டீர், வகை வகையாய் அளித்திட்டீர் செயலமர்வுகள் பல. சிலாவத்துறை தொடக்கம் - தலைமன்னார் வரை தலைமைத்துவப் பயிற்சிகள் பல தரமாகத் தந்திட்டீர். எம் ஆளுமைகளை, ஆற்றல்களை வளர்த்திட்டீர், வள்ளல் போன்று வாழ்ந்திட்டீர். நாளெல்லாம் நன்றியுடன் நினைக்கின்றோம், கதறுகின்றோம், கலங்குகின்றோம் உங்களை நினைத்து கண்ணீர் வடிக்கின்றோம். காத்திடுவீர் நித்தமும் நற்பரணை வேண்டுவீர்.

திருமதி பெப்பி. விக்ரர் லெம்பேட்,
(ஆசிரியை ஆலோசகர்),
வங்காலை - 10

## இன்னலுறும் மக்களின் அவலக் குரலை
## உலகிற்கு வெளிப்படுத்தும் கத்தோலிக்க பத்திரிகை மன்னா!

1997ம் ஆண்டு 'மன்னா' என்ற நாமத்தில் பத்திரிகை வடிவத்தில் மன்னார் மறை மாவட்டத்தின் அழியாப் புகழுக்குரிய மன்னா உருவெடுத்தது. இப்பத்திரிகையில் உயிரூட்டம் நிறைந்த இறையியல் செய்திகள், அகில உலகத் திருச்சபைச் செய்திகள், இலங்கைத் திருச்சபைச் செய்திகள், மன்னார் மறைமாவட்டச் செய்திகள், பங்குத்தளச் செய்திகள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், கண்ணீர் அஞ்சலிகள், போன்றவையும் சிறியோர் முதல் முதியோர் வரை படிக்கும் ஆவலைத்தூண்டும் பல்வேறு அம்சங்களும் இதில் வெளிவருகின்றன.

மன்னார் மறைமாவட்டத்தின் முத்து என அனைவராலும் போற்றப்படும் இந்த மன்னாப் பத்திரிகையை பக்குவமாய் வடிவமைத்து எமது கரங்களில் தவழவிடும் மன்னாப் பத்திரிகையின் ஆசிரியர் அவர்களின் கடின உழைப்பும், அர்ப்பணிப்பும் அளப்பரியது. ஆசிரியருக்கு எனது சிரம் தாழ்த்திய நன்றியையும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைய காலகட்டத்தில் எமது நாட்டில் ஏற்பட்டுள்ள போர் காரணமாக அமைதி இழந்து அகதிகளாக்கப்பட்டு இன்னலுறும் மக்களின் அவலக் குரலையும், உண்மை நிலையினையும் உலகிற்கு அவ்வப்போது வெளிப்படுத்தும் கத்தோலிக்க பத்திரிகை எமது மன்னாப் பத்திரிகையாகும்.

உண்மை, நேர்மை, பகிர்வு ஆகியவற்றை உள்ளடக்கி மாதா மாதம் இலங்கையிலும் வெளிநாடுகளுக்கும் சென்றடைந்து மக்கள் மத்தியில் உயிரூட்டமுள்ள செய்திகளை வழங்குவது மன்னா பத்திரிகையே.

வெளிநாட்டில் உள்ள நம்மவர்கள் தாகத்துடனும்

திரு. ஏ. ஏ.சிறிஸ்,
ஓய்வு பெற்ற தபால் அதிபர், மன்னார்



ஆர்வத்துடனும் மிக மகிழ்ச்சியுடனும் படித்துப் பயன்பெறும் ஒரே பத்திரிகை மன்னா என்று சொன்னால் அதை எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

படகு செல்வதற்கு சுக்கான் முழு உதவி செய்வதுபோல் மன்னாவின் தொடர் பயணத்திற்கு முழுமூச்சுடன் பணியாற்றும் உடன் பணியாளர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களும் செபங்களும் உரித்தாகுக!

மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்த பத்திரிகையான மன்னா என்றும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் வளமும் பெற்று மக்கள் மத்தியில் அன்பின் ஊற்றாக தொடர்ந்து பயணிக்க எல்லாம் வல்ல இறைவனிடம் உருக்கமாக வேண்டுகின்றேன்.

வாழ்க பல்லாண்டு! வளர்க உங்கள் பணி! என வாழ்த்தி விடைபெறுகின்றேன். நன்றி.

## மன்னார் மறைமாவட்டத்தின்
# 2008ம் ஆண்டிற்கான அருட்பணித் திட்டங்கள்

மன்னார் மறைமாவட்டத்தின் 2008ம் ஆண்டிற்கான அருட்பணித் திட்டமிடல் மகாநாடு கடந்த நவம்பர் மாதம் 22ம், 23ம், 24ம் திகதிகளில் மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது. எதிர்வரும் புதிய ஆண்டு (2008) இறைவார்த்தை ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மன்னார் மறைமாவட்டத்தில் இறைவார்த்தையை வாசிக்க, வாழ, பகிர பல்வேறு செயற்றிட்டங்கள் இம்மகாநாட்டில் தீட்டப்பட்டன. முன்னுரிமைப்படுத்தப்பட்ட மாநாட்டின் தீர்மானங்களை இங்கே தருகின்றோம்.

**தீர்மானம் : 01 தனிநபர் வாழ்வில் இறைவார்த்தை**

அ) ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் தமக்கென திருவிவிலியத்தைப் பெற்று, தினமும் (அரைமணி நேரமாவது) ஒரு குறிப்பிட்ட இறைவார்த்தைப் பகுதியை உரிய முறையில் வாசித்து இறைபிரசன்னத்தில் அதை உள்வாங்கிக்கொள்ளப் பயிற்சி அளித்தல்.

பங்கு அருட்பணியாளர்களும் பங்கு மேய்ப்புப்பணிச் சபையும் இவ்விடயத்தில் அதிக அக்கறைகொண்டு, பங்கிற்குத் தேவையான விவிலியப் பிரதிகளை வாங்கி, மக்கள் இலகுவில் பெற உதவிசெய்தல் வேண்டும்.

ஆ) ஒவ்வொருவரும் தினமும் வாசித்து, தியானித்து, செபிக்கின்ற இறைவார்த்தையின் அடிப்படையில் தங்களது நாளாந்த செயற்பாடுகளை அமைத்து கிறிஸ்துவுக்குச் சான்று பகர்தல்.

*இதற்கு திருவிவிலியப் பகிர்வின் :-*

1. ஏழு படிமுறைகள்
2. விவிலியக் கண்ணாடி முறை
3. பார், செவிமடு, செயற்படு முறை
4. ஆமோஸ் நிகழ்ச்சித்திட்டம் - போன்றவற்றை மக்களுக்கு சிறப்பாக விளங்கப்படுத்தி, தனித்தனியாக அதன்படி திருவிவிலியத்தை வாசித்து, தியானித்து, செபித்து அதனை வாழ்வாக்கி சான்று பகர வழிகாட்டலாம்.

இ) பங்கு அருட்பணியாளர்கள் தமது மறையுரைகளில் இறைவார்த்தை வாழ்வை ஆழப்படுத்தக்கூடிய செயலாக்கச் சிந்தனைகளை இவ்வாண்டு முழுவதும் மக்களுக்கு வழங்கல்.

ஈ) திருவிழாக்கால மறையுரைகளில், *"இறைவார்த்தை வாழ்வை"* முக்கிய கருப்பொருளாக் கொண்டு அதனைச் செயற்படுத்தக்கூடிய சிந்தனைகளையும், செயல்முறைகளையும் மக்களுக்கு வழங்குதல்.

**தீர்மானம் : 02 குடும்பத்தில் இறைவார்த்தை**

அ) அனைத்து இல்லங்களிலும் திருவிவிலியம் அரங்கேற்றம் செய்யப்பட்டு, இறைவார்த்தையை மையப்படுத்தி குடும்பச் செபம் செபிக்க வேண்டும்.

2008ம் ஆண்டு தவக்காலம் தொடங்குவதற்கு முன்னர் எல்லா வீடுகளிலும் விவிலிய அரங்கேற்றம் செய்யப்பட பங்குத்தந்தையர் முயற்சி எடுத்துச் செயற்பட வேண்டும். இதற்கு பங்கு மேய்ப்புப்பணிச் சபையினரும் இணைந்து பணியாற்ற வேண்டும்.

ஆ) இல்லங்களில் நடைபெறும் திருவருட்சாதனக் கொண்டாட்டங்கள், ஏனைய விழாக்கள் (புதுமனை குடிபுகல், பூப்புனித நீராட்டுவிழா, அடிக்கல் நாட்டுதல் போன்ற) முக்கிய நிகழ்வுகளிலும் (பிறந்தநாள், திருமண நினைவு நாட்கள், இறந்தோர் நினைவு நாட்கள் போன்ற) நிகழ்வுகளிலும் இறைவார்த்தையை மையப்படுத்தி குடும்பமாகச் செபித்தல்.

இ) பங்குத் தந்தையர்கள், குடும்பத்தில் இறைவார்த்தைப் பயன்பாட்டை ஊக்கப்படுத்த திருப்பலி, மறையுரை, பொது ஒன்றுகூடல்கள், ஏனைய வழிபாடுகள், இன்னும் சாத்தியப்படக்கூடிய எல்லா வழிகளிலும் விழிப்புணர்வை ஊட்டுதல்.

**தீர்மானம் : 03 பங்குச் சமூகத்தில் இறைவார்த்தை**

அ) பங்குகள் இறைவார்த்தையின் தனித்தன்மையையும், முக்கியத்துவத்தையும் மக்கள் உணர்ந்து அதனை வாசித்து, செபித்து வாழ்வாக்க:

- ❖ திருவிவிலியம் சம்மந்தமான கருத்தமர்வுகளை நடாத்துதல்.
- ❖ விவிலியத் தியானங்களை ஒழுங்குபடுத்தல்.
- ❖ சுவரொட்டிகளைத் தயாரித்து காட்சிப்படுத்தல்.
- ❖ கலை பண்பாட்டு நிகழ்வுகளைத் தயாரித்து வழங்குதல்

போன்ற நிகழ்ச்சித் திட்டங்களோடு தங்கள் பங்கில் வேறெந்த வழிகளில் இறைவார்த்தை வாழ்வை ஆழப்படுத்த முடியுமோ அவ்வழிகளையும் பின்பற்றுதல்.

ஆ) பங்கு மட்டத்தில் திருப்பலியிலும், ஏனைய வழிபாடுகளிலும் இறைவார்த்தையைத் தகுந்த முறையில் அறிவிக்கக் கூடியவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சி வழங்குதல்.

இ) பங்கு மேய்ப்புப்பணிச் சபையின் ஓர் அங்கமாகிய இறைவார்த்தைப் பணிக்குழுவானது தங்களுடைய பங்கின் பரப்பெல்லைக்குள் தோழமைக் குழுக்கள், தன்னார்வப் பணியாளர்கள், பக்திச்சபைகள், பொதுநிலையினர் கழகங்கள் போன்ற பணியாளர்கள் இறைவார்த்தையின் ஒளியில் வாழவும், நற்செய்தியை அறிவிக்கவும் வேண்டிய வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்துதல்.

ஈ) ஏற்கனவே சில பங்குகளில் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்ற தோழமைக்குழு உறுப்பினரின் இறைவார்த்தை அனுபவத்தை பகிரச்செய்து பங்கில் இறைவார்த்தைக் குழுக்களை வளர்த்தெடுத்தல்.

**தீர்மானம் : 04 அன்பியங்களில் இறைவார்த்தை**

அ) அன்பியக் குழுக்கள் இல்லாத இடங்களில் அவற்றை ஆரம்பித்தலும், இயங்கும் அன்பியங்களில் தோழமை உணர்வையும், செயற்பாட்டையும் இன்னும் ஆழப்படுத்தி, இறைவார்த்தையில் ஆர்வம் உள்ள மனிதரைக்கொண்ட குழுக்களாக அன்பியங்களை உருவாக்குதல்.

ஆ) அன்பிய ஒன்றுகூடல்களுக்கு அனைவரும் திருவிவிலியத்தை எடுத்துச் செல்வதை இவ்வருடத்தில் பழக்கப்படுத்திக் கொள்ளுதல்.

இ) அன்பிய இணைப்பாளர்கள் தாமே தம் மத்தியில் இறைவார்த்தையை மையப்படுத்தி பகிர்வை மேற்கொள்ள வழிகாட்டுதல்.

ஈ) பக்திச் சபைகளின் ஒன்றுகூடல்களில் இறைவார்த்தையை மையப்படுத்திச் செபித்து, தோழமை உணர்வை வலுப்படுத்த, நற்செய்திப் பகிர்தல் செபவழிபாட்டை (ஏழு படிமுறை) விதிவிலக்கின்றிச் செயற்படுத்துதல்.

உ) ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பங்குகளில் சமாதானம் வேண்டி நடைபெறும் உபவாச நற்கருணைத் தியானத்தில், இறைவார்த்தையை இன்னும் அதிகமாகப் பயன்படுத்தி குழுவாகச் செபிக்கும் செயற்பாட்டை அதிகரிக்க ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களை வகுத்துச் செயற்படுத்துதல். உ+ம்: குழுக்களாக நற்கருணையைச் சந்தித்து இறைவார்தையோடு செபிக்கத் திடமான திட்டங்களைச் செயற்படுத்துதல்.

ஊ) உப மறைக்கோட்ட மட்டத்தில் இரு வாரங்களுக்கு ஒரு முறையென்றாலும் குருக்கள் துறவிகள் ஒன்றுகூடி திருவிவிலிய நற்செய்திப் பகிர்விலும், இறைவார்த்தைப் பணி மீளாய்விலும் ஈடுபடல். மறைக்கோட்ட மட்டத்திலும் மாதம் ஒரு தடவை இதைச் செய்தல்.

எ) பங்கு மட்டத்தில் பணியாற்றும் குருக்கள், துறவியர் சேர்ந்தும், மேற்சொல்லப்பட்ட செப முறையை முன்னெடுத்துச் செல்லலாம்.

ஏ) ஒவ்வொரு திருப்பலிக் கொண்டாட்டமும் உள்ளத்தைத் தொடுவதாய் அமைந்து, அவை இன்னுமொரு எம்மாவுஸ் அனுபவம் மிக்கதாய் அமைய வழிசெய்தல்.

(தொடர்ச்சி 19ம் பக்கம்...)

## மன்னார் மறைமாவட்ட அருட்பணித் திட்டமிடல் மகாநாடு - 2008

# புதிய ஆண்டில் இறைவார்த்தைப் பணியை முதன்மைப்படுத்த திடசங்கற்பம்!

## இறைவார்த்தையை வாசித்து, வாழ்வாக்கி, பகிர பல்வேறு நிலைகளில் செயற்திட்டங்கள்

### கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய நீண்ட பயணத்தில் அனைவரையும் அணிதிரள அழைப்பு!

2008ம் ஆண்டிற்கான மன்னார் மறைமாவட்ட அருட்பணித் திட்டமிடல் மகாநாடு கடந்த நவம்பர் மாதம் 22, 23, 24ம் திகதிகளில் மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. *"அன்பிய வாழ்வினூடாக கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கி...."* என்ற பொதுத்தலைப்பில் இறைவார்த்தையை மையப்படுத்தியதாக இம்மாநாடு அமைந்திருந்தது.

முதல் நாள் அமர்வு மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகியது. அருட்பணித் திட்டமிடல் குழுவின் உறுப்பினர் - வங்காலைப் பங்கைச் சேர்ந்த திரு. எஸ். சூசைநாயகம் றெவல் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். மாலை 6.30 மணிக்கு முதல் அமர்வு ஆரம்பமாகியது. *மன்னார் மறைசாட்சியர் அரங்கு* எனப் பெயர் சூட்டப்பட்ட இந்த முதல் அமர்விற்கு மன்னார் மாவட்டச் செயலகத்தின் திட்டப் பணிப்பாளரும், மன்னார் கத்தோலிக்க பணியாளர் ஒன்றியத்தின் தலைவருமான திரு. அ. பத்திநாதன் அவர்கள் தலைமைதாங்கினார். தொடக்கவுரையை மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணியாளர் அ. விக்ரர் சோசை நிகழ்த்தினார். மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் ஆசியுரை வழங்கினார். முதல் அமர்வின் சிறப்புரையை மன்னார் மறைக்கோட்ட முதல்வரும், மன்னார் பேராலயப் பங்குத்தந்தையுமான அருட்பணியாளர் எஸ். தேவராஜா கொடுதோர் நிகழ்த்தினார். அதன் பின்னர் கடந்த ஆண்டு அருட்பணித் திட்டங்களின் பங்கு மீளாய்வு அறிக்கையை மாநாட்டின் செயலாளர் அருட்பணியாளர் அந்தோனிதாஸ் டலிமா தொகுத்து வழங்கினார். இரவுணவுடன் முதல் நாள் நிகழ்வுகள் நிறைவுற்றன.

2ம் நாள் நிகழ்வுகள் காலை 6.15 மணிக்கு காலைச் செபத்தோடும், காலைத் திருப்பலியோடும் ஆரம்பமாகியது. காலையுணவைத் தொடர்ந்து 8.30 மணிக்கு மடுமாதா அரங்கு என்ற பெயரில் முதலாவது அமர்வு ஆரம்பமாகியது. முசலிப் பிரதேச செயலாளர் திரு. க. அகஸ்ருஸ் சந்திரையா அவர்கள் இந்த அமர்விற்குத் தலைமைதாங்கினார். இவ்வமர்வின் சிறப்புரையை இலுப்பைக்குளம் பங்குத்தந்தை அருட்பணியாளர் ஜெயபாலன் குரூஸ் வழங்கினார். *கிறிஸ்தவ வாழ்வில் இறைவார்த்தையின் இன்றியமையாத்தன்மை* பற்றியதாக இந்த உரை அமைந்திருந்தது.







*அருளாளர் யோசப்வாஸ் அரங்கு* என்று பெயரிடப்பட்ட 2வது அமர்வின் சிறப்புரையை பள்ளிமுனைப் பங்குத்தந்தை அருட்பணியாளர் எஸ். கிறிஸ்ரியன் வாஸ் வழங்கினார். *எமது மறைமாவட்டத்தின் வாழ்வில் இறைவார்த்தை* என்ற தலைப்பில் இந்த உரை அமைந்திருந்தது.

*அருளாளர் அன்னை திரேசா அரங்கு* என்று பெயரிடப்பட்ட 3வது அமர்விற்கு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி யூட் றதனி அவர்கள் தலைமைதாங்கினார். இந்த அமர்வின் சிறப்புரையை *மறைமாவட்டத்தில் இறைவார்த்தைப் பணி* என்ற தலைப்பில் அருட்பணியாளர் ஸ்ரனி அன்ரனி (அமதி) அவர்கள் வழங்கினார்.

ஒவ்வொரு அமர்வின் சிறப்புரையைத் தொடர்ந்து குழு ஆய்வும் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் நிகழ்வும் நடைபெற்றது.

3ம் நாள் நிகழ்வுகள் காலை 6.15 மணிக்கு காலைச்செபம் மற்றும் திருப்பலியோடு ஆரம்பமாகியது. தூய பவுலடியார் அரங்கு எனப் பெயரிடப்பட்ட முதல் அமர்வில் குழு ஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட அருட்பணித் திட்டங்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டன. தொடர்ந்து மறைமாவட்ட ஆணைக்குழுக்களின் கடந்த கால அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. பொது அமர்வில் சில முக்கிய கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.


திருமதி. ஜெசி அரியரெட்ணம் அவர்களின் நன்றியுரையைத் தொடர்ந்து ஆயருடைய ஆசீர் இடம்பெற்றது. மதிய விருந்துடன் இம்மாநாடு நிறைவுபெற்றது.

இம்மாநாட்டில் அனைத்துப் பங்குகளிலும் இருந்து வருகை தந்திருந்த பங்குத்தந்தையர்களும் பங்கு அருட்பணிப்பேரவையின் செயலர்களும் மற்றும் மறைமாவட்டத்தில் உள்ள துறவற சபையினர், பக்திச் சபையினர், ஆணைக்குழுக்கள் ஆகியோரின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். முன்னுரிமைப்படுத்தப்பட்ட மாநாட்டின் இறுதி தீர்மானங்களை [illegible] 02ல் காணலாம்.

---

### இறைவனின் இரக்கத்தாலும், புனித ஆட்சிப்பீடத்தின் ஆதரவாலும்
### மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆகிய நான்
### மறைமாவட்ட இறைமக்களுக்கு எழுதும்

# திருவருகைக்காலத் திருமடல்



*கிறிஸ்து இயேசுவின் அன்புமிக்க சகோதர, சகோதரிகளே!*

**முன்னுரை**

"இறைவன் நம்மை எவ்வளவு அன்பு செய்தாரென்றால் நாம் வாழ்வு பெறும் பொருட்டுத் தம் ஒரே பேறான திருமகனை உலகிற்கு அனுப்பினார்" (1யோவான் 4:9) எனும் யோவான் நற்செய்தியாளருடைய திருக்கூற்றுக்கொப்ப நமக்கு வாழ்வளிக்கவந்த இறைமகன் இயேசுவின் பிறப்பு விழாவைக் கொண்டாட நாம் ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறோம். சமகாலத்திலே சமாதானத்தில் நாம் கொண்ட நம்பிக்கை பொய்த்துப்போனதுபோலத் தென்பட்டாலும், அமைதியின் அரசாகிய இயேசுவின் பிறப்பு விழா நமது தளர்வினைப் போக்கி நம்பிக்கையில் நம்மை ஆழ வேரூன்ற வைக்கின்றது.

**மனித அவலங்கள் :**

நமது மறைமாவட்டத்தில் என்றும் இல்லாத வகையில் மனித அவலங்களை இவ்வாண்டு நாம் சந்தித்துள்ளோம். நூற்றுக்கணக்கான உயிர் இழப்புக்கள் மத்தியில் முசலி, மடு, மாந்தை மேற்கு ஆகிய பகுதிகளின் இடப்பெயர்வுகளும், இவற்றைத் தொடர்ந்துவரும் அவலங்களும் எம் மக்களிற் பலரை வாட்டி வதைத்துக்கொண்டிருக்கின்றன. தொடர்ந்து முன்னெடுக்கப்படும் ஓர் அவசியமற்ற யுத்தத்தின் கொடூரமும் எமது மக்களை அன்றாடம் பாதிப்புகளுக்கு உள்ளாக்கி வருகின்றது.

இவ்வேளையிலே சர்வதேச சமூகமும் சமாதான விரும்பிகளும் இதய சுத்தியோடு செயற்பட்டு மனித உயிர்களை எண்ணற்ற வகையில் காவுகொள்கின்ற போருக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வரவேண்டுமென்றும், நாகரீகமான முறையிலே தீர்வைக் காணுவதற்காக அரசியல் பேச்சுவார்த்தையின் பாதைகளைத் திறந்துவிட வேண்டுமென்றும், *நம் சமாதானமாகிய* இயேசுக் கிறிஸ்துவின் பெயரால் அழைப்பு விடுக்கின்றேன்.

சமாதானத்திற்காக நாம் எடுக்கின்ற முயற்சிகளின் முக்கிய அம்சமாக அமைவது சமாதானத்திற்காக இடைவிடாது இறைவனிடம் வேண்டுதல் செய்வதாகும். அதன்பொருட்டு பங்குகளிலே வெள்ளிக்கிழமைகளில் இடம்பெறுகின்ற உபவாச நற்கருணை ஆராதனையும், ஒவ்வொரு சனிக்கிழமைதோறும் எல்லாக் குடும்பங்களிலும் மாலை ஏழு மணிக்கு இடம்பெறும் திருச்செபமாலை வழிபாடும் பற்றி மீளவும் வலியுறுத்தி இப்புனித நோக்கத்திற்காகத் தொடர்ந்து செபிக்குமாறு கேட்டுநிற்கின்றேன்.

நமது மறைமாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து அல்லலுறும் இவ்வேளையில், நாம் கூடியளவு நத்தார்க் கொண்டாட்டங்களை மட்டுப்படுத்தி, இடம்பெயர்ந்து இன்னற்படுகின்ற சிறுவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவது, மாட்டுத் தொழுவத்திலே தீவனத் தொட்டியிலே கிடத்தப்பட்ட இறைமகன் கிறிஸ்துவுக்கு கரம் கொடுத்த நிகழ்வாக அமையும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இதற்காக, உங்கள் தியாகத்தின் காணிக்கைகளைப் பணமாகவோ அல்லது புதிய உடை போன்ற பொருளாகவோ திருவருகைக்கால 3ம், 4ம், ஞாயிறு பலிவேளையில் காணிக்கை ஆக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். இந்த விடயத்திலே அன்பிய ஊக்குவிப்பாளர்கள் தத்தம் பகுதியில் வசிக்கும் குடும்பங்களுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**ஐந்தாண்டுத் திட்டம்:**

"நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை, துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை, வீழ்த்தப்பட்டாலும் அழிந்துபோவதில்லை" (2 கொரி.4:8-9) எனும் புனித பவுல் அடிகளாரின் மனநிலையில் எமது முன்னோர்களால் எமக்கு அளிக்கப்பட்ட விசுவாசத்தைப் பாதுகாக்க இறைவன் நமக்குச் சக்தியைத் தந்து வருகின்றார்.

எமது இந்த விசுவாசப் பயணத்திலே *"கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய பயணம்"* என்ற தரிசன நோக்கின் அடிப்படையில், ஐந்தாண்டுத் திட்டத்தை நாம் இவ்வருடம் முன்வைத்ததை நீங்கள் அறிவீர்கள். இதற்கமைய இவ்வாண்டு செபவாழ்வின் ஆண்டாக அமைந்திருந்தது. வரவிருக்கும் புதிய ஆண்டு இறைவார்த்தையை வாழ்வாக்கும் ஆண்டாக அமையவுள்ளது.

செப ஆண்டிலே தனி, குடும்ப சமூக, செப வாழ்வை ஆழப்படுத்தப் பல பங்குகள் ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டதையிட்டு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேவேளை கடந்த செப ஆண்டுத் திட்டங்கள் சில பங்குகளில் செயலிழந்து நின்றதையும் காணக்கூடியதாக இருந்தது. இத்தகைய நிலைக்கு இடப்பெயர்வு, சமகால சூழல் என்பன புறக்காரணிகளாக அமைந்தாலும், அக ரீதியாக நம்மை நாம் ஆய்வுக்குட்படுத்துவது வரவேற்புக்குரியதாகும். *"இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள். எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள். உங்களுக்காகக் கிறிஸ்து இயேசு வழியாகக் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே"* (தெசலோ 5:17,18) எனும் இறைவாக்கு நாம் தொடர்ச்சியாக செபவாழ்வை ஆழப்படுத்த வேண்டுமென்ற உண்மையை நமக்கு நினைவூட்டி நிற்கின்றது.

**இறைவார்த்தை ஆண்டு:**

எமது மறைமாவட்டத்தில் இவ்வாண்டு இறைவார்த்தை ஆண்டாக அமையும். இதற்கு ஆயத்தமாகச் சென்ற கார்த்திகை மாதம் மேய்ப்புப்பணித் திட்டமிடல் மகாநாடு மூன்று நாட்கள் இடம்பெற்றது. இந்த மகாநாட்டில் தனித்தும், குடும்பமாகவும், அன்பியமாகவும், பங்கு ரீதியாகவும் முன்னெடுக்கப்படவேண்டிய இறைவார்த்தைப் பணியை அடிப்படையாகக் கொண்ட மேய்ப்புப்பணித் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. இதற்கு மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டமிடல் குழு இறுதி வடிவம் கொடுத்து பங்குத் தந்தையருக்கு இத்திட்டத் தொகுப்பை அனுப்பிவைத்துள்ளது. இதன் அடிப்படையில் ஒவ்வொரு பங்கும் ஒரு பங்கு மேய்ப்புப் பணி மகாநாட்டைப் பங்கு மட்டத்தில் கூட்டுவித்து அந்தந்தப் பங்கிற்கேற்ற வகையில் இறைவார்த்தை வாழ்வை மையமாகக் கொண்ட மேய்ப்புப்பணித் திட்டத்தை வகுக்க வேண்டுமெனவும் இத்திட்டத்தை இந்த மாதம் 25ம் திகதிக்கு முன்பு எனது பார்வைக்கு அனுப்பி வைக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றேன். இப்பங்கு மேய்ப்புப்பணித் திட்டத்தை நிறைவேற்றுவதிலே மறைமாவட்ட சிறப்புப் பணிக் குழுக்கள் பல்வேறு வகையில் பங்குகளுக்கு உதவிபுரியக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

**முடிவுரை:**

2008ம் ஆண்டு ஐப்பசி மாதம் *"திருச்சபையின் வாழ்விலும், பணியிலும் இறைவார்த்தை"* என்னும் கருப்பொருளில் உரோமையில் இடம்பெறவுள்ள அனைத்துலக ஆயர் மன்றமும், 2008ம் ஆண்டினை நற்செய்தியே தம் உயிர் மூச்சென வாழ்ந்த *"தூய பவுலின் ஆண்டு"* எனத் திருத்தந்தை பிரகடனப்படுத்தி இருப்பதும், எமது மறைமாவட்ட ஆண்டுத் திட்டத்துடன் இணைந்துள்ள ஒரு அர்த்தமுள்ள நிகழ்வுப் பொருத்தமாகும். *"திருநூலை அறியாதவர்கள் கிறிஸ்துவையே அறியாதவர்கள்"* என்ற புனித ஜெரோம் அடியாரின் வார்த்தைகளை எம் மனதிலே தாங்கியவர்களாய் இறைவார்த்தை வழியாகக் கிறிஸ்துவை சந்தித்து அவரால் ஆட்கொள்ளப்பட எம்மைத் திறந்துவிடுவோமாக. அத்தோடு புனித பவுல் அடியாரின் வழியிலே இறைவார்த்தையை எடுத்தியம்பி நற்செய்தியைப் பிறருக்கு அறிவிக்கும் பணியையும் செய்ய நம்மை ஆயத்தம் செய்வோம்.

இறைவார்த்தையைக் கேட்பதோடு நின்றுவிடாமல் அந்த இறைவார்த்தைக்கு முற்றும் முழுவதுமாக அடிபணிந்து வாழ்ந்து தம் திருமகனின் ஒப்பற்ற சீடத்துவத்தை வாழ்வாக்கிய எம் அன்னை மரியா எமது பாரிய இம்முயற்சியில் எமக்குத் துணைநின்று வழிகாட்டுவாராக.

- கிறிஸ்துவில் உங்கள்மேல் பற்றுள்ள,
மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை
மன்னார் ஆயர்

# மன்னார் மறைமாவட்ட செய்திகள்

### மன்னார் மறைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்பட்ட

## வருடாந்த மறைக்கல்வித் தேர்வு

இவ்வாண்டு மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வித் தேர்வு இரண்டு வினாத்தாள்களை அடிப்படையாகக்கொண்டு நடாத்தப்பட்டது. வினாத்தாள் A பாடசாலைப் பாடத்திட்டத்தை அடிப்படையாகக்கொண்டும், வினாத்தாள் B மறைமாவட்டப் பாடத்திட்டத்தை அடிப்படையாகக்கொண்டும் நடாத்தப்பட்டது. பாடசாலை மூன்றாம் தவணைக்குரிய கத்தோலிக்க சமயபாடப் புள்ளியாக A வினாத்தாள் புள்ளி வழங்கப்பட்டது. A வினாத்தாள் புள்ளியையும் B வினாத்தாள் புள்ளியையும் கூட்டி இரண்டால் பிரித்து வரும் புள்ளியே மறைக்கல்விச் சான்றிதழுக்குரிய இறுதிப் புள்ளியாகக் கொள்ளப்படுகின்றது. இந்த இறுதிப் புள்ளியில் 96 புள்ளிகளுக்கு மேல் எடுத்த மாணவர்களின் பெயர் விபரங்களைத் தருகின்றோம்.

### 96 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் விபரம்

| பங்கு | பாடசாலை | பெயர் | தரம் | புள்ளி |
|---|---|---|---|---|
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | ஏ. மரிய சுதர்சனா | 03 | 99 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | பி. திரேஷா கரிசினி | 03 | 97 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | சி. பவித்ரா | 03 | 99 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | ஜே. அனஸ்கா தர்சனா | 03 | 99 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | எவ். அன்ரனிமா பிறின்திசி | 03 | 100 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | ஜி. மேரி றொஷினா | 03 | 96 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | கே. விஸ்டம் பிறிட்டி | 03 | 100 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | பி. மேரி ஸ்ரெல்லா | 03 | 97 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | ஏ. அன்ரனிற்றா | 03 | 99 |
| மன்னார் | மன் / புனித சவேரியார் பெ. தே. பா. | டீ. கின்சிலா | 03 | 98 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | ஏ. செரின் மிர்னாலினி | 03 | 97 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | ஜே. விஜய லக்சனா | 03 | 97 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | ரி. கிறிஸ்ரெலா திவ்யா | 04 | 99 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | ரி. கே. மேரி அபிஷேக்கா | 05 | 100 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | பி. மேரி சீக்குயின் | 05 | 97 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | ஜே. ஆன் சாலினி பீரீஸ் | 06 | 100 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் பெ. தே. பா. | எம். லயூறினா | 06 | 96 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் ஆ. தே. பா. | எஸ். அன்று பேடினன் | 03 | 97 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் ஆ. தே. பா. | ஜே. டிசான் | 03 | 98 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் ஆ. தே. பா. | சி. கெர்சான் | 03 | 96 |
| மன்னார் | மன்/ புனித சவேரியார் ஆ. தே. பா. | பி. பெற்சன் மத்தியூ | 05 | 100 |
| மன்னார் | மன்/ சித்திவிநாயகர் இந்து தே.பா. | நொ. க. மக்லின் யூலியற் | 03 | 97 |
| மன்னார் | மன்/ எழுத்தூர் றோ.க.த.க.பாடசாலை | ச. கஜந்தினி | 06 | 96 |
| தாழ்வுபாடு | மன்/ புனித வளனார் றோ.க.த.க.பாடசாலை | அ. செசார் குரூஸ் | 04 | 96 |
| தலைமன்னார் | மன்/ புனித லோறன்ஸ் றோ.க.த.க.பாட. | பி.அன்ரனி அபிசன் பெர்ணாண்டோ | 03 | 98 |
| பேசாலை | மன்/ பத்திமா ம.ம.வி | பீ. யோசுவா ஜெயப்பிரகாசன் | 03 | 97 |
| பேசாலை | மன்/ பத்திமா ம.ம.வி | யெ. சரண் அபிசேக் குரூஸ் | 03 | 98 |
| பேசாலை | மன்/ பத்திமா ம.ம.வி | ச. கோமகன் | 03 | 97 |
| பேசாலை | மன்/ பத்திமா ம.ம.வி | ம. ஜெயலக் | 03 | 96 |
| பேசாலை | மன்/ பத்திமா ம.ம.வி | யூ. டிவைன்சன் மிராண்டா | 04 | 97 |
| பேசாலை | மன்/ பத்திமா ம.ம.வி | லூ. யோய் ஆனந் றெவல் | 04 | 98 |
| கற்கிடந்தகுளம் | மன்/ இசைமாலைத்தாழ்வு றோ.க.த.க.பா | ஸ். போல் நிவேஷன் | 04 | 98 |
| கற்கிடந்தகுளம் | மன்/ பெரியமுறிப்பு அ.த.க.பாடசாலை | அ. அக்னஸ் | 04 | 97 |
| நானாட்டான் | மன்/ நானாட்டான் ம. வி | கி. பற்றிமா டல்சி | 03 | 97 |
| நானாட்டான் | மன்/ நானாட்டான் ம. வி | இ. மேரி நிவோன்சி | 04 | 98 |
| நானாட்டான் | மன்/ அச்சங்குளம் அ.த.க.பாடசாலை | வி. விக்கிறிஸ்ரினி | 05 | 97 |
| வவுனியா | வவு/ இறம்பைக்குளம் ம.ம.வி | யோ. பிரவீன் | 03 | 96 |
| வவுனியா | வவு/ வவுனியா தமிழ் ம.ம.வி | செ. ரிகாந்தன் | 06 | 98 |
| வவுனியா | வவு/ வவுனியா தமிழ் ம.ம.வி | பி. கிசோன் கரிசன் | 06 | 96 |
| தோட்டவெளி | மன்/ தோட்டவெளி அ.த.க.பாடசாலை | சூ. வின்சன் பற்றிக் | 05 | 96 |
| அளவக்கை | மன்/ அளவக்கை அ.த.க.பாடசாலை | பி. அலெக்ஸி ஆன் தர்ஷியா | 04 | 98 |
| அளவக்கை | மன்/ வாழ். பெற்றான்கண்டல் றோ.க.த.க.பா | ச. நிலுக்ஷா | 03 | 96 |
| அரிப்பு | மன்/ அரிப்பு றோ.க.த.க.பாடசாலை | பி. பிறின்சி லியோன் | 03 | 96 |
| அரிப்பு | மன்/ அரிப்பு றோ.க.த.க.பாடசாலை | ச. மேரியன் நிஜந்தன் | 05 | 97 |
| அரிப்பு | மன்/ அரிப்பு றோ.க.த.க.பாடசாலை | செ. டேவிற் அட்றியன் மொறாயஸ் | 05 | 96 |
| அரிப்பு | மன்/ அரிப்பு றோ.க.த.க.பாடசாலை | தே. பிரவினா பெனாண்டோ | 05 | 96 |
| உயிலங்குளம் | மன்/ இலகடிப்பிட்டி றோ.க.த.க.பாடசாலை | கு. பவித்திரன் | 05 | 98 |

### தோட்டவெளியில்

## முதற் திருப்பலி

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையால் 12.11.2007 அன்று திருநிலைப்படுத்தப்பட்ட விடத்தல்தீவுப் பங்கைச் சேர்ந்த அருட்பணி. தேவதாசன் எட்வின் (அ.ம.தி) அடிகளார் தமது முதற் திருப்பலியை தோட்டவெளி யோசவ்வாஸ் நகர் ஆலயத்தில் கடந்த 13.11.2007 அன்று ஒப்புக்கொடுத்தார்.

ஆலயத்துக்கு வருகைதந்த அருட்பணி. எட்வின் அடிகளார் தோட்டவெளிப் பங்குத்தந்தையின் தலைமையில் மக்களால் வரவேற்று அழைத்துவரப்பட்டதும், புதிய குரவர் ஏனைய குருக்களுடன் இணைந்து முதற்திருப்பலியை நிறைவேற்றினார். இத்திருப்பலியில் அருட்பணி. போல் நட்சத்திரம் (அ.ம.தி) அடிகளார் (மாகாண ஆலோசகர்) மறையுரை நிகழ்த்தினார். அவர் தமது மறை உரையில், “இக்காலகட்டத்தில் குருத்துவப் பணி மக்கள் மயமாக்கப்பட்டதாக அமையவேண்டியதன் அவசியத்தையும், சவால்களை ஏற்றுப் பணியாற்ற புதிய குரவர் தன்னை முழுமையாக அர்ப்பணித்திருப்பதையும் ஆணித்தரமாக எடுத்துரைத்தார். அருட்பணியாளர்கள் பலரும் புதிய குரவருக்கு இறையாசி வேண்டினார்கள்.

தொடர்ந்து பங்குத்தந்தையின் தலைமையில் பங்கு மக்களால் வரவேற்பு நிகழ்வு நடைபெற்றது. அருட்பணி எட்வின் அடிகளாரையும் குருக்கள், துறவிகள், பங்குமக்களையும் பங்குத்தந்தை வரவேற்று தமது ஆசியுரையை வழங்கினார். அருட்பணி. றெஜினோல்ட் (அ.ம.தி) அருட்பணி. வின்சன் பற்றிக் (அ.ம.தி) அருட்பணி. இ. அகஸ்ரீன் புஸ்பராஜ் அடிகளும் குருத்துவப் பணியை “வெறுமையில் நிறைவு” காணும் ஆர்வத்தோடும், அர்ப்பணிப்போடும் பணி ஆற்றச்செல்ல உள்ள புதிய குரவரைப் பாராட்டிச் சிறப்புரையாற்றினார்கள்.

வாழ்த்துக் கவிதை மடல் வழங்கப்பட்டதுடன் மாவட்ட உதவிச் செயலாளர் திரு. ம. பரமதாஸ், மூத்த மறை ஆசிரியர் திரு. இ. மரியசெல்வன் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

## முதல் நன்மை அருட்சாதனம்

தோட்டவெளிப் பங்கின் துணை ஆலயங்களைச் சேர்ந்த 59 சிறார்களுக்கு வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில் 17.11.2007ல் முதல்நன்மை அருட்சாதனம் வழங்கப்பட்டது. வண. பங்குத் தந்தையுடன் அருட்பணி. சுகுணராஜ் அடிகளாரும் இணைந்து சிறப்புத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்கள்.

திருப்பலியில் தியாக்கோன் ம. றொக்ஸன் மறையுரை ஆற்றினார். அவர் தமது அருள் உரையில், “ஞானஸ்நானத்தால் இறைவனின் பிள்ளைகளாகிய இச்சிறார்கள் இன்று யேசுவின் உடலையும் இரத்தத்தையும் ஆன்மீக உணவாகப் பெறுவதன் மூலம் என்றும் இறைவனுடன் இணைந்து வாழ அழைக்கப்பட்டிருக்கிறார்கள்” என்ற சிந்தனைகளை உறுதிப்பட எடுத்துக் கூறினார்.

## தோட்டவெளியில் முதியோர் தினம்

தோட்டவெளி தூய யோசவாஸ் ஆலயத்தில் கடந்த 03.10.2007 அன்று முதியோர் தினம் வண. பங்குத்தந்தையின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. முதியோர் சங்கங்களின் இயக்குனர் அருட்பணி. அந்தோனிதாஸ் டலிமா அடிகளார் முதியோருக்கான சிறப்புத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

“தமது இளமைக் காலத்தில் குடும்பத்துக்கு, சமூகத்துக்கு தங்களை அர்ப்பணித்து இன்று முதியவர்களாக இருப்பவர்களை நினைக்கவேண்டும், மதிக்க வேண்டும், பராமரிக்க வேண்டும்” என்ற சிந்தனைகளை இயக்குனர் தமது மறை உரையில் தெளிவாக எடுத்துக் கூறினார்.

திருப்பலியின் பின்னர் பங்குத் தந்தையின் அனுசரணையிலும், இயக்குனரின் ஆதரவிலும் முதியோருக்கு தேநீர் உபசரணையும், அன்பளிப்புக்களும் வழங்கப்பட்டன. முதியோர் சங்கத் தலைவர் திரு. ம. தேவதாசன் அவர்கள் வண. இயக்குனர், பங்குத்தந்தை மற்றும் இத்தினத்தை நடத்த உதவிய அனைவருக்கும் முதியோர் சார்பில் நன்றி தெரிவித்தார்.

*பி. இராயப்பு,*
*ஓய்வுபெற்ற, பாடசாலை அதிபர்.*

## பங்குத்தள சங்கதிகள்...

### முருங்கனில்

### மேய்ப்புப் பணிச் சபைப் பொதுக்கூட்டம்

முருங்கன் பங்கு மேய்ப்புப் பணிச்சபைப் பொதுக்கூட்டம் 04.11.2007 அன்று முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் தலைவர் பங்குத்தந்தை அருட்பணி. செ. ஸ்ரீபன் ராஜா அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அடுத்துவரும் இரண்டு ஆண்டு காலத்திற்கான புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது. தலைவராக - பதவி வழியாக - பங்குத்தந்தை அருட்பணி செ. ஸ்ரீபன் ராஜா அடிகளாரும், செயலாளராக திரு. ஏ. டி. தேவதாசன் அல்மேடா, உபசெயலாளராக திருமதி ம. மஞ்சு பீரிஸ், பொருளாளராக திரு. அ. யூட் புனிதராஜ் ஆகியோரும் பணிக்குழுக்களுக்கான உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

### கிறீஸ்து அரசர் ஆலயத் திருவிழா

முருங்கன் கிறீஸ்து அரசர் ஆலயத் திருவிழா கடந்த 21.11.2007 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25.11.2007 அன்று திருவிழாத் திருப்பலியுடன் நிறைவுபெற்றது. புனித டொன் பொஸ்கோ மாணவர் இல்லம், கார்மேல் கன்னியர்கள், ஆலய சபையினர் இணைந்து இத்திருவிழாவைச் சிறப்பித்துள்ளனர்.

A. D. தேவதாசன் அல்மேடா

### அளவக்கைப் பங்கில்

### மறைக்கல்வி முன்னோடித் தேர்வு

அளவக்கைப் பங்கின் கத்தோலிக்க ஆசிரியர் சங்கமானது தனது செயற்றிட்டங்களில் ஒன்றாக முதற்தடவையாக பங்குத் தந்தையின் வழிகாட்டுதலின்கீழ் மறைமாவட்ட மறைக்கல்வித் தேர்வில் தோற்றவிருந்த மாணவர்களுக்கான மறைக்கல்வி முன்னோடித்தேர்வு ஒன்றை கடந்த 25.10.2007 அன்று நடத்தியது. பங்கின் மறையாசிரியர்களும் தங்கள் பூரண ஒத்துழைப்பை இப்பரீட்சையின்போது வழங்கினார்கள். இப்பரீட்சையில் இடம் பெயர்வுக்கு உட்பட்ட அரிப்பு, கொக்குப்படையான், மருதமடு, முள்ளிக்குள மாணவர்களும் தோற்றுவதற்கு வாய்ப்பளித்தது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

### விசேட கொண்டாட்டங்களில்

### மதுபானப் பாவனையை நிறுத்தத் தீர்மானம்

அளவக்கைப் பங்கு மேய்ப்புப்பணிச் சபையினர் தமது மாதாந்த ஒன்றுகூடலின்போது பங்கு மக்கள் மத்தியில் காணப்படும் மதுபான பழக்கவழக்கத்தை - திருமுழுக்கு, முதன் நன்மை, திருமணம் போன்ற அருட்சாதனக் கொண்டாட்டங்களின்போது வீடுகளில் மதுபானப் பாவனையினை - முற்றாக நிறுத்துதல் வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர்.

*- அருட்பணியாளர் டக்லஸ் மில்ரன் லோகு*

### முருங்கனின் கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய

### ஆண்டு விழா

முருங்கன் பங்கு கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய ஆண்டுவிழா கடந்த 21.10.2007 ஞாயிறு அன்று முருங்கன் கிறீஸ்து அரசர் ஆலயத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஆண்டு விழாத் திருப்பலியை சமூகத்தொடர்பு இயக்குனர் அருட்பணி. அலெக்சாந்தர் சில்வா அடிகளாரும், அன்பிய இயக்குனர் அருட்பணி. யூட் குரூஸ் அடிகளாரும், இளைஞர்களுக்கான பொறுப்பாளர் அருட்பணி. சேவியர் அடிகளாரும் பங்குத்தந்தை அருட்பணி. ஸ்ரீபன் ராஜா அடிகளாருடன் இணைந்து ஒப்புக்கொடுத்தனர்.

இளைஞர் ஒன்றியக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நிகழ்வுகளில் கலைநிகழ்வுகள் டொன் பொஸ்கோ இல்ல மண்டபத்தில் நடைபெற்றன. தொடர்ந்து புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. புதிய தலைவராக செல்வன் சி. நித்தியானந்தன், செயலாளராக செல்வி. இ. சுதர்சினி, பொருளாளராக செல்வன் சா. ப. மகிமை ராஜ், போஷகராக மீண்டும் ஏ. டி. தேவதாசன் அல்மேடா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

A. D.தேவதாசன் அல்மேடா

### வவுனியாவில்

### பாலர் பாடசாலை ஒளிவிழா!

வவுனியா புனித அந்தோனியார் பாலர் பாடசாலை ஒளிவிழா கடந்த 01.12.2007 சனிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பங்குத்தந்தையும் பாடசாலை இயக்குனருமான அருட்தந்தை அ. செபமாலை அடிகளார் தலைமை வகித்தார். மேடையில் அழகாக அலங்கரிக்கப்பட்ட பாலன் குடில் மனதைத் தொடும் வகையில் அமைந்திருந்தது.

நிகழ்விற்கு அருட்தந்தை சகாயநாதன் அடிகளார் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். சிறுவர் நாடகம், நடனம், பாடல், கரோல் என்று நகர்ந்த விழாவில் நத்தார் தாத்தாவும் விஜயம் செய்தார்.

இதில் அதிகளவில் பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள் பங்கேற்றனர். அத்துடன் அருட்சகோதரிகளும் கலந்து சிறப்பித்தனர். தேசத்தில் சாந்தி சமாதானம் மலரவேண்டும், சிறுவர் உள்ளங்கள் ஒளிவீச வேண்டும், நாளை தீங்கின்றி நலமாக விடியவேண்டும் என்ற கருத்தார்ந்த நத்தியோடை போன்ற தொனிப்பொருளுடன் நிகழ்வு நிறைவுற்றது. இந்நிகழ்வை பெற்றோரும், பாடசாலை ஆசிரியர்களும் நெறிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

*அ. பேனாட்.*

### குருக்கள் திருப்பேரவை முதல்வர் கர்தினால் கிளாடியோ கியுஸிம்ஸ் ஆண்டகை

# மறையாசிரியர்களுக்கு எழுதியுள்ள திறந்த மடல்

அன்பான மறையாசிரியர்களே!

இறைவன் வழங்கும் அமைதி உங்களுடன் என்றும் இருப்பதாக! மறையாசிரியர்களையும் உள்ளடக்கிய குருக்கள் திருப்பேராயத்தில் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பருக்கு நான் பணிபுரியும் இந்த முதல் வருடத்தில் நான் எனது மனப்பூர்வமான சகோதரத்துவம் நிறைந்த வாழ்த்துக்களைத் தங்களுக்கு அளித்து நிற்கிறேன். தனது அன்பை அள்ளிச்சொரிவதில் தாராளம் மிக்கவரும் இரக்கம் காட்டுவதில் வளம் நிறைந்தவருமான இறைவனிடம் விசேடவிதத்தில் உங்களை ஆசீர்வதிக்கும்படி வேண்டுகிறேன்.

நற்செய்தியாளரான புனித லூக்காவின் திருவிழா நாளில் நான் இதனை எழுதுகிறேன். இறந்து உயிர்த்தெழுந்த இயேசுக் கிறிஸ்துவை-யும் அவரது இறையாட்சியையும் உலகளாவிய ரீதியில் பறைசாற்றுவதற்கு அவர் அடிப்படையில் வழங்கிய பங்களிப்பை இவ்வேளையில் என் மனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

முதன் முதலாகத் திருமுழுக்குப் பெற ஆயத்தம் செய்வோர் அநேகம் பேருக்குக் கத்தோலிக்க விசுவாசத்தை அளிப்பதில் தாங்கள் ஆற்றும் பணியையும், மற்றும் தங்களது கரங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ள ஏற்கனவே திருமுழுக்குப்பெற்றவர்களுக்கு தாங்கள் சலிப்பின்றி ஆற்றும் திருச்சபைப் பணியையும் நான் பாராட்டுகிறேன்.

எனது அன்பான சகோதர சகோதரிகள் ஆகிய நீங்கள் அடிக்கடி வீரத்துவமான தியாகங்களை வேண்டிநிற்கும் விசுவாசத்திற்கான போராட்டத்திற்கு உங்களை அர்ப்பணித்-துள்ளீர்கள், மகிழ்ச்சியுடனும், ஊக்கத்துடனும் நீங்கள் பதிலளித்துள்ளீர்கள். இதற்காக நான் எனது அன்பை உங்களுக்கு அளித்து நிற்கின்றேன்.

நீங்கள் நாளாந்தம் இறைவனுக்கும், மனிதனுக்கும் பிரமாணிக்கமாயிருப்பதன் மூலமும் உங்களுடைய பங்குச்சமூகத்தின் உண்மையான மதிப்புமிக்க சொத்தாயிருக்-கிறீர்கள். இறைவன் முடிவற்றவிதமாக எமக்கு ஆறுதல் அளித்து ஆச்சரியத்தை ஏற்படுத்தும் அதிகளவான நம்பிக்கையின் அடையாளங்களில் ஒன்றாக நீங்கள் இருக்கிறீர்கள். ஆசிரியர்கள், கல்விமான்கள் போன்றோரிடம் வேண்டிநிற்கும் உண்மைக்கான சாட்சியத்தை அந்த உண்மை-யைப் பிரமாணிக்கத்துடனும், முழுமையாகவும் ஒழுங்கமைவுடனும் சமகால மனிதருக்கு அளிப்பதற்கான ஆர்வத்தையும், அர்ப்பணத்தையும் உங்களிடம் வேண்டி நிற்கின்றது.

உங்களது விசுவாசத்தைப் பலப்படுத்தக்கூடிய நிலையில் இருங்கள். "நீங்கள் எதிர்நோக்கி இருப்பதைக் குறித்து யாராவது விளக்கம் கேட்டால் விடையளிக்க நீங்கள் எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்." (1பேதுரு 3:15)

ஆனால் செபத்துடனும் தொடர்ச்சியான கல்வியறிவுடனும், பிறரன்புடனும் பதிலளியுங்கள். எப்பொழுதும் மகிழ்ச்சியுடனும், ஆர்வத்துடனும் இருங்கள். இதன் மூலமும் மற்றும் உங்கள் பணிகள் மூலமும் "இயேசுக் கிறிஸ்துவின் வழியாகக் கடவுள் அனைத்திலும் பெருமை பெறுவார். அவருக்கே மாட்சியும், வல்லமையும், என்றென்றும் உரித்தாகுக" (1பேதுரு 4:11).

அன்புடன்கூடிய உறவு, கையளித்தல், கவனம், அமைதி, ஆகியவற்றை செபத்துடனும், நம்பிக்கையுடனும் வளப்படுத்தும்படி உங்களைத் தூண்டுகிறேன்.

அடிக்கடி நம்பிக்கையற்றதும், வன்செயலும், சுயநலமும் நிறைந்ததுமான ஒரு உலகில் இறைவன் பாவத்தின் மேலும், மரணத்தின் மேலும் வெற்றிகொண்டார். அன்பு சாத்தியமானது என்பதற்கு உங்களது ஒவ்வொரு சைகையும், ஒவ்வொரு புன்னகையும், ஒவ்வொரு வார்த்தை-யும் ஒரு வாழ்க்கைச் சான்றாய் அமையட்டும்.

திருமுழுக்கிலும், உறுதிப்பூசுதலிலுமான உங்களது சாட்சியத்தின் ஆழமான வேர்களை மீண்டும் கண்டறியுங்கள். மறையாசிரியர்கள் என்ற மட்டில் பலமளிக்கும் உணவான நற்கருணை மூலம் உங்கள் பணிக்கு ஊட்டம் பெறுங்கள்.

உங்களுக்குக் கிடைக்கும் அருள்களின் மூலமும் உங்களது சேவைக்குப் பிரமாணிக்கமாயிருப்பதன் மூலமும் நீங்கள் சந்திக்கிறவர்களுக்குக் கிறிஸ்துவின் திருமுகத்தை வெளிப்படுத்துங்கள். இறைவனின் ஆவி உங்களுடைய வாழ்வை புதிதாக மாற்றியமைத்து உங்களிடையே ஐக்கியம் வளர்ச்சியடையச் செய்வாராக.

எமது இன்றைய உலகம் சிலசமயம் வேதனையுடனும் சிலசமயம் நம்பிக்கையுடனும், தேடலில் ஈடுபட்டுள்ளது. இவ்வாறு தேடலில் ஈடுபட்டுள்ள இன்றைய உலகம் உற்சாகமற்ற அதைரியமுள்ள, பொறுமையீனம் அன்றேல் கவலைநிறைந்த நற்செய்தியாளர்களிடமிருந்து நற்செய்தியைப் பெறுவதற்கல்ல மாறாக ஊக்கமுள்ள, கிறிஸ்துவின் மகிழ்ச்சியை முதலில் பெற்றுக்கொண்ட தமது வாழ்வை ஆபத்துக்குள்ளாக்குவதன் மூலம் நற்செய்தி அறிவிக்கப்படவும், உலகின் மத்தியில் திருச்சபை நிறுவப்படவும் கூடிய விதத்தில் தமது வாழ்வை அமைத்துக்கொண்ட நற்செய்திப் பணியாளர் மூலம் நற்செய்தியை பெறுவார்களாக. புனித பிரான்சிஸ் அசீசியாருக்கு மிகவும் பிரியமான ஆசீரை உங்களுக்கு வேண்டுகிறேன். இறைவன் உங்களை ஆசீர்வதித்துப் பாதுகாப்பாராக, அவர் தமது திருமுகத்தை உங்களுக்கு காண்பித்து உங்கள்மேல் இரக்கமாயிருப்பாராக. அவர் தமது திருமுகத்தை உங்கள் பக்கமாய் திருப்பி உங்களுக்கு அமைதியை அருள்வாராக.

நற்செய்தியறிவிப்பின் விண்மீனாகிய பரிசுத்த கன்னிமரியாள் உங்களைப் பாதுகாத்து, உங்களுக்கு உதவிபுரிந்து உங்களுக்கு நம்பிக்கையின் அடையாளமாய் இருப்பாராக!

---

மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர், குடும்ப, உளவளத்துணை அருட்பணி மைய இயக்குனரிடமிருந்து

## திருமண முன் ஆயத்த வகுப்புகள்

## (Pre Cana Classes)



மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் - குடும்ப, உளவளத்துணை அருட்பணி மையம் திருமணமாகவுள்ள இளைஞர் மற்றும் இளம் பெண்களுக்கான ஆயத்த வகுப்புக்களை ஒவ்வொரு மாதத்தின் மூன்றாவது சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மன்னார் பொதுநிலையினர் - குடும்ப, உளவளத்துணை அருட்பணி மையத்திலும், ஒன்றுவிட்ட ஒவ்வொரு மாதத்தில் வரும் இரண்டாவது சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் வவுனியா, இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்திலும் நடாத்தி வருகின்றது.

எனவே திருமண அருட்சாதனத்தில் இணைந்துகொள்ள இருப்பவர்கள் இந்த ஆயத்த வகுப்பில் கட்டாயம் கலந்து பயன் அடையவேண்டுமென்றும் குறிப்பிட்ட நேரத்திற்குச் சமூகம் தரவேண்டுமெனவும் கேட்கப்படுகின்றார்கள். இந்த ஆயத்த வகுப்புக்கள் சனிக்கிழமைகளில் காலை 9. 00 மணி தொடக்கம் மாலை 4. 00 மணி வரையிலும், ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9.00 மணி தொடக்கம் பகல் 2.00 மணி வரையிலும் நடைபெறும்.

இவ்வாயத்த வகுப்பிற்கு வருகின்றவர்கள் குறிப்பெடுப்பதற்கான எழுதுகருவிகளோடு திருவிவிலியமும் கொண்டுவர வேண்டும்.

இவ்வாயத்த வகுப்பில் பங்குபற்றாமல் விசேட சலுகைகளையோ, விதிவிலக்குகளையோ திருமண அருட்சாதனத்தில் இணைந்துகொள்ள எதிர்பார்க்க வேண்டாம் என எதிர்காலத் தம்பதியர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

### வகுப்புக்கள் நடைபெறும் திகதிகள் - 2008

#### மன்னாரில்

| மாதம் | திகதி |
|---|---|
| தை | 19 – 20 |
| பங்குனி | 29 – 30 |
| சித்திரை | 19 – 20 |
| வைகாசி | 17 – 18 |
| ஆனி | 21 – 22 |
| ஆடி | 19 – 20 |
| ஆவணி | 23 – 24 |
| புரட்டாதி | 20 – 21 |
| ஐப்பசி | 18 – 19 |
| கார்த்திகை | 15 – 16 |
| மார்கழி | 13 – 14 |

#### வவுனியாவில்

| மாதம் | திகதி |
|---|---|
| தை | 12 – 13 |
| சித்திரை | 12 – 13 |
| ஆனி | 14 – 15 |
| ஆவணி | 09 – 10 |
| ஐப்பசி | 11 – 12 |
| மார்கழி | 13 – 14 |

---

### மருமாதா தேவாலயத்தைப் பாதுகாத்துத் தருமாறு

# திருத்தந்தையிடம் வேண்டுகோள்

## – ஜயலத் எம்.பி. கடிதம் –

மடுமாதா தேவாலயத்தை பாதுகாத்துத் தருமாறு திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பரிடம் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக திருத்தந்தைக்கு ஜயலத் கடிதமொன்றை அனுப்பியுள்ளார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது.

நானும் எனது குடும்பத்தாரும் கடந்த வருடம் நத்தார் தினத்திலே உரோம் சென். பீற்றர்ஸ் பசிலிக்கா தேவாலயத்தில் தங்கள் தலைமை-யில் நடைபெற்ற நத்தார் நள்ளிரவுத் திருப்பலி-யில் பங்குபற்றி மிகவும் புனிதமான நத்தார் தினத்தைக் கொண்டாடினோம். கத்தோலிக்க பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் தங்களுக்கு நான் எழுதும் இந்த இரங்கல் வேண்டுகோள், இலங்கையின் வன்னிப் பிரதேசத்தில் கொடிய யுத்த சூழலில் அமைந்தி-ருக்கும் மடுமாதா தேவாலயத்தை யுத்தத்தால் ஏற்படும் அனர்த்தங்களிலிருந்து பாதுகாக்க தாங்கள் முன்வரவேண்டுமெனும் ஆவலாலாகும். இந்த மடு அன்னைத் தேவாலயம் கத்தோலிக்கர்கள் மட்டுமல்லாது, நாட்டிலுள்ள அனைத்து இன மக்களதும் பக்தியையும் நம்பிக்கையையும் பெற்ற ஆலயமாகும்.

❖ இலங்கையின் ஜனாதிபதியும் அமைச்சர்களும் தங்களை உரோம் நகரத்தில் சந்தித்தவேளையில் தாங்கள் மடு மாதா தேவாலயம் தொடர்பாக கலந்துரையாடியுள்ளீர்கள்.

❖ மடு மாதா தேவாலயத்தைக் கொடிய யுத்தத்திலிருந்து பாதுகாத்துத்தருமாறு இலங்கையின் ஆயர் மன்றம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக நான் நம்புகின்றேன்.

❖ மடு மாதா தேவாலயம் எப்போதும் ஒரு சிறப்பான சமய ஸ்தலமாகத் திகழ்கின்றது. 600 வருடங்கள் பழைமை வாய்ந்த மடு மாதா தேவாலயத் திருச்சுரூபம் எமது நாட்டின் தேசிய சொத்தாகவும் புராதன வணக்கத்துக்குரிய ஒன்றாகவும் திகழ்கின்றது.

துரதிர்ஷ்டவசமாக 2005 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் இடம் பெற்றுவரும் யுத்தத்தால் இரு தரப்பினரதும் எறிகணைத் தாக்குதல்களால் புராதன வணக்கத்திற்குரிய மடு மாதா தேவாலயம் பாதுகாப்பற்ற நிலைமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

எந்தத் தரப்பினராலும் மடுமாதா தேவாலயத்திற்கும், அங்கு பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ள மடு மாதா திருச்சுரூபத்திற்கும் எந்தவித சேதமும் இடம்பெறக்கூடாது என்பதே எனது வேண்டுதல்.

மடுமாதா தேவாலயம் மடுத் தேவாலய முகாம் போன்றவை யுத்தத்திற்கு அப்பாற்பட்ட இடமாக பிரகடனப்படுத்த யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் உடன்படவேண்டும். முழுத் திருச் சபையினதும் தலைவரான தங்களிடம் மடு மாதா தேவாலயத்தைக் கொடிய யுத்தத்திலிருந்து பாதுகாத்துத் தருவதற்கு முன்வருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

---

ஞானோதயம் நடாத்தும்

## இறையியல் டிப்ளோமா கற்கைநெறி 2008

ஆரம்பம் :12.01.2008 சனி
காலை 9 மணி.
இடம் : ஞானோதயம்,
தாழ்வுபாடு வீதி, கீரி,
மன்னார்.

❖ இறையியல் டிப்ளோமா கற்கை நெறி தை 2008 – மார்கழி 2008 வரை நடாத்தப்படும்.

❖ மாதத்தின் 2வது சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.30 வரை வகுப்புக்கள் இடம்பெறும். தேவையேற்படின் வசதிக்கேற்ப மேலதிக வகுப்புக்கள் நடாத்தப்படும்.

தகமைகள்: கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

❖ கிறிஸ்தவ பாடத்தை உயர்தரப் (A/L) பரீட்சையில் எடுத்திருத்தல்.

❖ பங்கில் மறைப்பணியாளர்களாக பணியாற்றியிருத்தல்.

❖ ஆர்வமுள்ள பொதுநிலையினராக பங்கில் பணி செய்கின்றவர்கள்.

❖ உங்கள் பங்குத்தந்தையின் சிபாரிசுடன் தை மாதம் 5ம் திகதிக்கு முன்னர் (05.01.2008) விண்ணப்பியுங்கள்.

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:

அருட்பணி ஸ்ரனி அன்ரனி (அ.ம.தி)
பயிற்சி இணைப்பாளர்,
ஞானோதயம், தாழ்வுபாடு வீதி, மன்னார்.
தொ. இல : 023 – 2250173, 0779787305

---

## காலி மறைமாவட்ட பெருந்தோட்ட மக்களின் அபிவிருத்திக்கான "நவோதயம்" நிறுவன உலக சிறுவர் தின நிகழ்வு

தெனியாய பங்குத்தந்தை மைக்கல் இராஜேந்திரம் அடிகளாரின் தலைமையில் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு செப்ரெம்பர் மாதம் 29ம் திகதி (2007.09.29) சனிக்கிழமை காலை 9.00மணிக்கு தெனியாய புனித மத்தேயு கல்லூரி கேட்போர் கூடத்தில் கலை நிகழ்ச்சியொன்றை "நவோதயம்" நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. தெனியாயப் பகுதி சிறார்கள் இதில் கலந்து சிறப்பித்தார்கள்.

அத்தோடு தென் மாகாண தமிழ் பாடசாலைகளுக்கு - குறிப்பாக மலையகத் தமிழ் பாடசாலைகளுக்கு தென் மாகாண முன்னாள் தமிழ்க் கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் மொஹமட் அவர்கள் ஆற்றிய அளப்பரிய சேவைக்கு மதிப்பளித்து "நவோதயம்" நிறுவனப் பணிப்பாளரும் மைக்கல் இராஜேந்திரம் அடிகளாரும் அவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததோடு தெனியாய நகரத்தில் அமைந்துள்ள புனித மத்தேயு இருபாஷா பாடசாலையில் 18 வருடங்களுக்குப்பின் 2007 புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கணபதி மோகன தர்ஷனி என்ற மாணவியும் கௌரவிக்கப்பட்டார்.

## காலி மறைமாவட்ட தமிழ் பேசும் மக்களின் ஒரு நாள் ஞான ஒடுக்கம்

ஆன்மீக மற்றும் சமூக விழிப்புணர்ச்சிக்கான முழுநாள் ஞான ஒடுக்கம் அண்மையில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய மாத்தறை மாதா திருத்தலத்தில் காலி மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு ஹெரல்ட் அந்தனி பெரேரா ஆண்டகையின் வேண்டுகோளுக்கிணங்க "நவோதயம்" நிறுவன அனுசரணையுடன் நடைபெற்றது. காலி மறைமாவட்டத்தின் தமிழ் மறை ஆசிரியர்கள், கோட்ட மறைத் தலைவர்கள் மற்றும் பொது நிறுவனங்களின் பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடன் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

2007.10.13ம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகிய இஞ்ஞான ஒடுக்கத்தில் காலி மறைமாவட்டத்தில் பெருந்தோட்ட மக்கள் வாழும் தெனியாய, ஹினிதும, ஹுலந்தாவ, எல்பிட்டிய, கனேகம், ஹம்பாந்தோட்டை போன்ற இடங்களிலிருந்து தமிழ் பேசும் கத்தோலிக்க மக்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வின் இறுதியில் பேரருட்திரு ஹெரல்ட் அந்தனி பெரேரா ஆண்டகையின் தலைமையில் கூட்டுத் திருப்பலியும், மாத்தறை மாதாவின் திருச்சுரூப ஆசீரும் நடைபெற்றது. இந்நிகழ்வே காலி மறைமாவட்டத்தில் நடந்த முதலாவது ஞான ஒடுக்கம் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

# சிறுவர் பொழிவு

## ஏளனம் செய்யாதே

அ. ஜஸ்மின் ஷரோன்
ஆவணம், நானாட்டான்



சிலர் மற்றவரின் இயலாமையை இட்டு ஏளனம் செய்வர். இதனால் சம்பந்தப்பட்டவர்களின் மனம் எவ்வளவு புண்படும் என்பதை மறந்துவிடுகின்றனர். ஆண்டவன் படைப்பில் முடியாதவர் என்று எவரும் இல்லை. இந்த உயரிய தத்துவத்தை இக்கதை மூலம் புரிந்துகொள்ளுங்கள்.

"டேய் உனக்கு அறிவிருக்கா? எத்தனை தடவை சொல்லித் தந்தாலும் உனக்கு புரியமாட்டேங்குது புத்தி கெட்டவனே" என்று தன் தம்பி பீற்றரின் தலையில் குட்டினான் செல்வன். பெரியவன் திட்டுவதைக் கேட்டுகொண்டே உள்ளே வந்த அம்மா, செல்வன் தன் தம்பியின் தலையில் குட்டுவதைப் பார்க்கின்றாள். "பாரும்மா, எத்தனை தடவை இந்தப் பாடத்தைச் சொல்லிக் கொடுக்கிறேன். அவனுக்கு புரியமாட்டேங்குது இவனுக்கு அறிவில்லை" என்று உடனே தாயிடம் செல்வன் முறையிடுகின்றான். பீற்றரைப் பார்க்க அம்மாவுக்கு இரக்கமாக இருந்தது. பீற்றர் படிப்பில் கொஞ்சம் மந்தம்தான். அதனால் கெட்டிகாரனான செல்வனே அவனை முட்டாள் என்று ஏளனமாக நினைப்பதும், பேசுவதும் அம்மாவுக்குப் பிடிக்கவில்லை.

"உனக்கு ஒரு கதை சொல்லட்டுமா" என்று செல்வனைப் பார்த்து கூறிவிட்டுத் தொடங்கினாள் தாய்.

ஒரு ஊரில் நடைபெறும் நிகழ்ச்சியை முன்னிட்டு அதை தொடக்கிவைக்க மந்திரியை அழைத்திருந்தார்கள். மந்திரி நிகழ்ச்சிக்கு மற்ற அதிகாரிகளுடன் வரும்போது கார் பழுதாகி நின்றுவிடுகிறது. சாரதி கீழிறங்கிப் பார்க்கிறார். "கார் பழுதாகிவிட்டது. கொஞ்ச நேரத்தில் சரிசெய்துவிடுகிறேன்" என்றார். "சரி... கார் பழுதுபார்க்கப்படும்வரை களைப்பாறலாம்" என்றெண்ணி தூரத்தில் தெரிகின்ற குடிசை ஒன்றுக்குச் செல்கின்றார் மந்திரி.

அங்கே குயவன் ஒருவன் சக்கரத்தைச் சுற்றிக்கொண்டு மண்ணைப் பிசைந்து கலயம் செய்துகொண்டிருப்பதைக் கண்டார். மண்ணைப் பிசைந்து உருளையிலிட கொஞ்ச நேரத்தில் அது கலயமாக உருவாகி இருந்தது. அதை அழகான வடிவில் பானை, குடமாக மாற்றிக்கொண்டிருந்தான் குயவன்.

மந்திரிக்கு ஆசை! எப்படிச் செய்வது என்று குயவனிடம் கேட்டபடி அவரும் ஒரு பானை செய்ய முயன்றார். அவரால் முடியவில்லை. சக்கரத்தைச் சுற்றவும், மண்ணைப் பிசைந்து கணக்காய் உருளையில் போடவும் தெரியாததால் மண், மண்ணாகவே சுற்றிச் சுற்றி வருகிறது. பானையாக வடிவம் பெறவில்லை. குயவன் சிரிக்கிறான், மந்திரிக்கு ஆச்சரியம். நாட்டு விவகாரத்தில் எத்தனை கெட்டிக்காரத்தனமாகச் செயல்படும் தனக்கு ஒரு பானை செய்ய தெரியவில்லை என்று நினைக்கின்றார். மந்திரி குயவனைப் பாராட்டிச் செல்கிறார்.

மந்திரிக்கு இருக்கும் அறிவு குயவனுக்கு இல்லை. குயவனுக்கு இருக்கும் அறிவு மந்திரிக்கு இல்லை. ஆனாலும் இருவரும் அவரவர் தொழிலில் அறிவாளிகளே. அதனால் அறிவில்லை, முட்டாள் என்று மட்டம் தட்டிப் பேசக்கூடாது. பீற்றர் வேகமாக ஓடுவான், உன்னால் முடிகிறதா? அவன் உன்னை ஏளனம் செய்கிறானா? நீ அவனுக்குப் பாடம் சொல்லி கொடுக்கும்போது ஏளனம் செய்வது நல்லதல்ல என்று அறிவுரை கூறுகிறார் அம்மா. செல்வன் தன் தவறை உணர்கிறான். தன் தம்பியை அணைத்துக்கொள்கிறான். தன் தம்பிக்கு அன்போடு புரியாத பாடங்களைக் கற்றுக் கொடுக்கின்றான்.

## திருமண வாழ்வில் 50வது ஆண்டுப் பொன்விழா

திரு. சூ. இ. கீதபொன்கலன் லீயோன்
திருமதி, லூசியா மரியம்மா கீதபொன்கலன்
(16.07.1957 - 16.07.2007)




மன்னா ஒரு சஞ்சிகையாக வெளிவந்த ஆரம்பகாலங்களில் மன்னா வெளிவர உறுதுணையாக நின்று உழைத்துப் பணியாற்றிய திரு. கீதபொன்கலன *(கை அங்கிள்)* அவர்களின் திருமணப் பொன்விழா ஆண்டில் மன்னா பத்திரிகைப் பணியகம் சார்பாக எமது நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம். - பதிப்பாசிரியர்

## பாலர் பாடசாலை ஆசிரியர்களின் ஒன்றுகூடல்



மன்னார் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடலின்போது அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குரூஸ், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆபேல் றெவல், மன்னார் பிரதேச செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி தேசிய பாடசாலையில் 2007ம் ஆண்டு 5ம்தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுடன் (இடமிருந்து வலமாக) ஆசிரியை திருமதி அருமை ரூபன், பகுதித் தலைவி திருமதி. பத்திநாதன், ஆசிரியர் திரு. அல்வினஸ், உபஅதிபர் திரு. எஸ். ஏ. யோகானந்தன், அதிபர் அருட்சகோதரர் ஜே. ஸ்ரனிஸ்லோஸ், பகுதித்தலைவரும், ஆசிரியருமான திரு. கோமஸ் பெரேரா, ஆசிரியை செல்வி. கௌசல்யா, மற்றும் ஆசிரியை திருமதி லூசியா ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.



மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி தேசிய பாடசாலையில் 2007ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற 5ம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவிகளையும், அவர்களை ஊக்குவித்த ஆசிரியர்கள் மற்றும் பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி ஜெயசீலி றொட்றிக்கோ ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## பாலன் பிறப்பு

மார்கழிப் பனிமழையில் தேவமகன்
மாடுறங்கும் குடிசையிலே அவதரித்தார்
ஆயர்களும் ஆராரோப் பாடிடவே
உலகமெல்லாம் மணியோசை கேட்டதம்மா!

சமாதானப் பாலகனாய் உதித்த
நற்செய்தியைக் கேட்ட மூவர்களும்
அமைதியும் சாந்தியும்! சமாதானமும்!
ஒன்றிணைந்து துதித்திடவே
பாலகனைத் தேடினரே!

கிழக்கொளியே சுபமங்களமாய் ஒளிகாட்டக்
கதிரவனாய்ச் சிரிப்பவரைக் கண்டனரே!
மாளிகையில் யேசு மன்னன் வரவேற்க
மங்களப் பரிமளங்களை
பாத காணிக்கையாக வைத்து வணங்கினரே!

*அ. ருஷாந்தினி, பொன்தீவுகண்டல், அளவக்கை.*

# கவிதைப் பூக்கள்

## பிறந்தாயோ யேசுவே!

இவ்வினிய நாளிலே பிறந்தாயோ!
இம்மனிதத்தில் ஒருவனாய் மலர்ந்தாயோ!
எம் பாவம் போக்க நீ உதித்தாயோ!
எம் மீட்பர் யேசுவாய் மனுவுருவானாயோ!

மகிமை ராஜனாய் தவழ்ந்தாயோ!
மாட்டுத் தொழுவில் நீ அழுதாயோ!
அன்பின் மைந்தனாய் உருவானாயோ!
அகில வேந்தனாய்த் துளிர்த்தாயோ!

தித்திக்கும் தூதனாய் இனித்தாயோ!
தீமையை அழித்திட விளைந்தாயோ!
பாவியைத் தேடி அலைந்தாயோ!
பாலகன் யேசுவாய் பகையை ஒழித்தாயோ!

விண்ணின் அரசனாய் உயர்ந்தாயோ!
மண்ணின் வேந்தனாய் மகிழ்ந்தாயோ!
எம் உள்ளக்குடிலிடை பிறப்பாயோ!
எம் உள்ள வேண்டுதலை ஏற்றிடுவாயோ?

*பீ. ஜெனட் நீரஜா, நல்லாயன் மகளிர் கல்லூரி, கண்டி.*

## பாலகனைப் போற்றிடுவோம்

மனுக்குலத்தை மீட்டிடவே
மனிதனாக வந்தவரே
மானிடரின் பாவம் போக்க
மகிழ்ந்து மண்ணில் மலர்ந்தவரே.

கன்னி மரியின் உதிரந்தன்னில்
கனிவாய் மலர்ந்த கண்மணியே
காலைப் பனியாம் உன் வரவால்
கவலை யாவும் கரைந்ததுவே.

வறியோர் எமக்கு வகையாக
வாழ்வு தரவே வந்துதித்தாய்
பாலகனே மன்னவனே
பாதம் பணிந்து போற்றுவேனே!

*அ. சுபாஜினி,*
*களிமோட்டை, முருங்கன்*



## நத்தார்

மார்கழி மாதம் பிறந்தால்
உலகில் மகிழ்ச்சி பொங்கும்.
கூடிவரும் மழலைகளே ஓடிவாருங்கள்
பாலகனாம் யேசுவைப் புகழ்ந்து பாடுவோம்.
கையில் மத்தாப்பும், வானத்தில்
பட்டாசும் ஆ! எவ்வழகாகும்?

நட்சத்திரக் கூட்டமாய்
பல் இழிக்குது பாருங்க.
இரவினிலே சந்திரன் ஓடி வாறாரு பாருங்க
தேவ லோகத்திலிருந்து தூதர்கள் வாறாங்க
நம் யேசுவைப்பற்றி பறைசாற்றப் போறாங்க

மார்கழி மாதம் பிறந்தால்
உலகில் மகிழ்ச்சி பொங்கும்.

*ச.ஜெயந்தி மாலா, கல்நாட்டி, முருங்கன்.*





# உலகத் திருச்சபைச் செய்திகள்

## சிறுபான்மையினர் துன்பம் கண்டு திருத்தந்தை கவலைப்படுகிறார்

### *ஐ.நா.வில் உரோமைப் பிரதிநிதி பேராயர் செலஸ்ரீனோ*

இன்று உலகின் சில நாடுகளில் சமய உரிமைகள் மிதிக்கப்படுவதையும் அகதிகள், சிறுபான்மை இனத்தவர்கள் துன்புறுத்தப்படுவதையும் கண்டு திருத்தந்தை மிகவும் கவலையடைந்துள்ளார் என 62வது ஐ.நா. பொதுச்சபை மகாநாட்டில் *மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரமும* என்ற கருத்தமர்வில் உரோமைப் பிரதிநிதியாக கலந்துகொண்ட பேராயர் செலஸ்ரீனோ மில்லிஓர் ஆண்டகை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், சமய நம்பிக்கைகளும் சமயச் சுதந்திரங்களும் சகல மனித இனத்தவர்களுக்கும் எல்லா இடங்களிலும் பொருத்தமானவையே. அகதிகளின் மனித உரிமைகள் எங்கும் மதிக்கப்படவேண்டும். சர்வதேச அகதிகள் சட்டமும் தெளிவாக இதனைக் கூறுகின்றது. தஞ்சம் அடைந்துள்ள நாட்டில் அகதிகள் தமது சமய நம்பிக்கைகளையும் சமயச் சுதந்திரங்களையும் பின்பற்றுவதற்கு பூரண சுதந்திரம் உண்டு.

சில நாடுகளில் அல்லது பிரதேசங்களில் இன்றும் இருக்கும் தெய்வ நிந்தனைச் சட்டங்கள் அதிகளவான துன்புறுத்தல்களுக்கு வழிவகுக்கின்றன. விசேடவிதமாக சிறுபான்மைச் சமயத்தவர்களை மரணத் தீர்ப்புக்கு உள்ளாக்குவதனூடாகவோ அல்லது சர்ச்சைக்குரிய நீதிகளை உருவாக்குவதனூடாகவோ இவற்றை மேற்கொள்கின்றனர். மேற்படி சட்டங்கள் இன்றும் இருக்கும் நாடுகளில் அவை தளர்த்தப்பட்டு தெய்வ நிந்தனைக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். அவர்களுடைய மனித உரிமைகளுக்கு பூரணமாக மதிப்பளிக்கப்பட வேண்டும்.

சிறுபான்மைச் சமயத்தவர்கள் பெரும்பான்மைச் சமயத்தவர்கள் அனுபவிக்கும் உரிமைகளை உடையவர்கள். அத்துடன் சட்டத்தின் முன்னிலையில் அனைவரும் சமமானவர்களே. அனைவரும் அனைத்துச் சமயங்களையும் பேச்சுச் சுதந்திரங்களையும் பொறுப்புடமைகளையும் சரிவரச் செய்யவேண்டும். என்னுடைய பிரதிநிதிகள் சமயங்களுக்கிடையே சமாதானத்தையும் மக்களிடையே புரிந்துணர்வையும் நிலைநாட்டுவதற்கு அயராது உழைத்து வருகின்றார்கள்.

சமயங்களும் சமய அடையாளங்களும் எங்கும் மதிக்கப்பட வேண்டும். விசுவாசிகள் ஒருபொழுதும் சமய நம்பிக்கைகளுக்கு எதிரான தண்டனைகளுக்கு ஆளாக்கப்படக்கூடாது. ஒருவர் ஒரு தனிச் சமயத்தைச் சார்ந்தவர் என்பதற்காக அவரை புறந்தள்ள முடியாது என்றார்.



எனவே பொறுமையின்மையும் வன்செயல்களும் குற்றங்களுக்கான தீர்வாக ஒருபொழுதும் நியாயப்படுத்த முடியாதவை. ஏனெனில் இவை ஒருபோதும் முழுமையான மனித மாண்பை மதிப்பதற்கும் சமய சுதந்திரத்தை மதிப்பதற்கும் உகந்ததல்ல.

சமயங்களை மதித்தல் என்பது சமயங்களுக்கு இடையேயான உரையாடலையும், விவாதங்களையும் புறக்கணிப்பதல்ல மாறாக சமயங்களுக்கிடையிலான உரையாடலை வளர்ப்பதுடன் ஆர்வத்தைத் தூண்டுவதையுமே குறிப்பதாகும். இந்த ஆர்வம் எல்லா இடங்களிலும் எல்லாச் சமயங்களையும் மதிப்பதற்கு பெருந்துணையாக இருக்கும் என்று நம்புகின்றேன் எனத் தெரிவித்தார். அங்கு பிரதிநிதிகளாக கலந்து கொண்டவர்களும் சமயச் சுதந்திரங்களை தடை செய்யும் சட்டங்களுக்கு எதிராகக் குரலெழுப்பத் தவறவில்லை.

## ஆபிரிக்க நாட்டுத் தலைவர்கள் திருத்தந்தையுடன் சந்திப்பு!

டான்சான்சியா நாட்டு அதிபர் ஜாக்யா மிரிஷோ இக்விட் மற்றும் ஆபிரிக்க நாட்டுத் தலைவர்கள் ஒருசிலரும் கடந்த வாரம் திருத்தந்தையைச் சந்தித்துப் பேசினர்.

கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் இடையே இணக்கமான உறவுநிலை உருவாக வேண்டும் என்று அச்சந்திப்பில் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

டான்சானியா நாட்டில் உள்ள நாற்பது மில்லியன் மக்கள் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும், இஸ்லாமிய 'கிறிஸ்தவ மக்களின் ஒற்றுமையையும் நோக்கிச் செயற்பட வேண்டும் என்று திருத்தந்தை கேட்டுக்கொண்டார். திருச்சபைக்கும், ஆபிரிக்காவுக்கும் இடையே மாபெரும் தொடர்பு சக்தியாகவும் செயற்படுவதோடு கல்வித் துறையிலும், மருத்துவத் துறையிலும் சமூக செயற்பாடுகளிலும் டான்சானியா நாடு பெற்றுள்ள வளர்ச்சியை எண்ணி திருத்தந்தை அந்த நாட்டு அதிபரை உளமாரப் பாராட்டியுள்ளார்.

## வேலைவாய்ப்புக் குறைவது சமூக வளர்ச்சியைப் பாதிக்கின்றது

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கான உறுதியான நிலை குறைந்துகொண்டே வருவதுதான் சமூகத்தின் வளர்ச்சியை முழுமையாக பாதிக்கின்றது என்று திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் தெரிவித்துள்ளார்.

45வது சமூக வார விழாவை முன்னிட்டு இத்தாலிய ஆயர் பேரவைத் தலைவர் பேராயர் ஆஞ்சலோ பக்னாஸ்கோ அவர்களுக்கு அனுப்பியுள்ள செய்தியில் திருத்தந்தை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சமூக வாழ்வின் முன்னேற்றத்திற்கான செயற்பாடுகள் எல்லா மக்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் உள்ளடக்கியது. எனவே, ஒரு தரப்பினர் குறிப்பாக இளைஞர்கள் வேலைவாய்ப்புக்கான ஆதாரம் இல்லாமல் இருப்பது, ஒட்டுமொத்த சமூக வளர்ச்சியைப் பாதிக்கும் என்றும், ஒவ்வொரு தனி மனிதனுடைய வாழ்க்கை முன்னேற்றத்தையும் கருத்தில்கொண்டு செயற்பட வேண்டும் என்றும் திருத்தந்தை தெரிவித்துள்ளார்.

வேலைவாய்ப்பு உத்திரவாதம் இல்லாத நிலை தொடர்ந்தால் சமூகத்தின்மீது இளையோரின் செயற்பாடுகள் முற்றிலுமாகக் குறைந்துவிடும் என்றும் திருத்தந்தை தெரிவித்துள்ளார்.

## சிறுவர்கள் உணவைப்பெற உரிமையுடையவர்கள்

### உலக உணவு தினத்தையொட்டி திருத்தந்தை செய்தி

> *வறுமையால் ஒவ்வொரு மூன்று வினாடிக்கும் ஒரு குழந்தை என்ற விகிதத்தில் உயிரிழப்பு இடம்பெறுகின்றது. வறுமையால் பள்ளிக்குச் செல்லாத குழந்தைகளின் எண்ணிக்கை 12 கோடிக்கு மேல். மேலும் உலகில் இராணுவத் தளபாடங்களை வாங்கும் செலவில் ஒரு விழுக்காட்டைக் கொண்டு உலகில் அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்விக்கு வழிசெய்ய முடியும்.*

இன்று இலட்சக்கணக்கான மக்களை - குறிப்பாக சிறாரைப் பாதிக்கின்ற ஆரோக்கியமான மற்றும் போதுமான உணவு கிடைப்பதற்கான அடிப்படை உரிமை மீறப்படுவதற்கு முதல் காரணம் இயற்கைப் பேரிடர்களைவிட மனிதனே ஆகும். இதுதான் இன்று நாம் காணும் உண்மைநிலை. இதனை உலக சமுதாயம் கவனத்தில் எடுத்து படைப்பின் வளங்கள் சமமாகப் பங்கிடப்படவும், அவை சரியாகப் பயன்படுத்தப்படவும் வழி செய்யவேணடும்.

ஒக்ரோபர் 16ஆம் தேதி உலக உணவு தினம் கடைப்பிடிக்கப்பட்டதையொட்டி ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்புத் தலைவர் ஜாக் தியூப்புக்கு அனுப்பிய செய்தியில் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் இவ்வாறு கூறியுள்ளார் .

*உணவைப் பெறுவதற்கான உரிமை* என்ற தலைப்பிலான இந்த உலக தின கருப்பொருள், உலக மனித உரிமைகள் சாசனம் .வெளியிடப்பட்டதன் அறுபதாம் ஆண்டில் உலக சமுதாயம் சிந்திப்பதற்கு ஏற்றதாக இருக்கிறது. உணவு பெறுவதற்கான உரிமை .மனித மற்றும் சமுதாய அளவில் உடனடி விளைவுகளைக் கொண்டுள்ளது.

இவ்வேளையில் இந்தப் பிரச்சினையில் உடல் மற்றும் மன ரீதியாக முதலில் பாதிக்கப்படும் சிறாரை நினைக்கின்றேன். இதனைக் களைவதற்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ரீதியாக முயற்சிகள் எடுக்கப்படும்போது பூர்வீக இனத்தவரின் மரபுப் பழக்கங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இயற்கையின் செயற்பாடுகளை நன்கறிந்த கிராம மக்களும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்றும் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னேறிய நாடுகளில்கூட ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமிடையேயான இடைவெளி மிகத்தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது.

*உலக ஏழ்மை ஒழிப்புத் தினம்* (ஒக்.17) கடைப்பிடிக்கப்பட்ட நாளில் இவ்வாறு ஏறத்தாழ ஐம்பதாயிரம் மக்கள் முன்பாகக் கூறிய அவர், உலகில் மக்கள் மிகப்பெரிய அளவில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்ந்து துன்பங்களை அனுபவித்து வாழ்வது மனிதகுல மனச்சான்றுக்கு விடப்பட்ட சவாலாக இருப்பதுடன் மனித மாண்புக்கு ஊறுவிளைவிப்பதாக இருந்து உலக மக்களின் ஒன்றிணைந்த இணக்க வாழ்விற்கும், முன்னேற்றத்திற்கும் தடைக்கல்லாக உள்ளது எனவும் திருத்தந்தை கூறினார்.

அண்மையில் வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களின்படி வறுமையால் ஒவ்வொரு மூன்று வினாடிக்கும் ஒரு குழந்தை என்ற விகிதத்தில் உயிரிழப்பு இடம்பெறுகின்றது. வறுமையால் பள்ளிக்குச் செல்லாத குழந்தைகளின் எண்ணிக்கை 12 கோடிக்கு மேல். மேலும் உலகில் இராணுவத் தளபாடங்களை வாங்கும் செலவில் ஒரு விழுக்காட்டைக் கொண்டு உலகில் அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்விக்கு வழி செய்யமுடியும் எனவும் கூறப்பட்டுள்ளது.

## ஈராக்கில் குருக்கள் விடுதலை வத்திக்கான் மகிழ்ச்சி

கடந்த மாதம் கடத்தப்பட்ட ஈராக் நாட்டின் குருக்கள் இரண்டு பேரும் விடுவிக்கப்பட்டதாக திருத்தந்தைக்கு செய்தி வந்துள்ளது. ஈராக்கில் குருக்கள் இரண்டு பேரும் விடுவிக்கப்பட்டது குறித்து திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் பெருமகிழ்ச்சி அடைவதாக வத்திக்கான் செய்தி தெரிவிக்கின்றது.

ஒக்டோபர் 13ஆம் நாள் திருப்பலி நிறைவேற்றுவதற்காக தூய பற்றிமா ஆலயத்திற்குச் சென்றுகொண்டிருக்கும் வழியில் அருட்தந்தை மாசன் இசோவா, அருட்தந்தை பால் அ∴பாஸ் இருவரும் கடத்தப்பட்டனர். இருவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று திருத்தந்தை கேட்டுக் கொண்டார். அதற்கு ஏற்ப ஒக்டோபர் 21 ஆம் தேதி அன்று இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

## கனடா ஆன்மீகப் பணியகத்தின் இயக்குனராக அருள்நேசன் அடிகளார் நியமனம்

கனடா ரொறன்ரோ கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் இயக்குனராக யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த கபிரியேல் அருள்நேசன் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

ரொறன்ரோ மறைமாவட்டத்தின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை இந்த நியமனத்தை வழங்கி இருந்தார்.

கடந்த சில வருடங்களாக மேற்படி பணியினை மேற்கொண்டிருந்த சில்லாலையைப் பிறப்பிடமாக கொண்ட ரொறன்ரோ மறைமாவட்டத்தைச் சேர்ந்த பீற்றர் ஜீற்நேற்திரன் அடிகளார் மொன்றியல் தமிழ் கத்தோலிக்க மக்கள் மத்தியில் தன் அன்பான பணியாலும் அணுகுமுறையாலும் நற்பெயர் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் நாரந்தனையை பிறப்பிடமாகக் கொண்ட அருள்நேசன் அடிகளார் யாழ் மறைமாவட்டத்தில் நெடுந்தீவு, மிருசுவில் பங்குகளில் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் இவர் தனது அமைதியான போக்கால் எல்லா மக்களிடமும் நன்மதிப்புப் பெற்றவர். அருள்நேசன் அடிகளாரின் பணி கனடா தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தில் சிறக்க மன்னா அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

## தேவாலயம் பெயர்த்து இடம் மாற்றப்பட்டது

ஜேர்மனியிலுள்ள 700 ஆண்டுகள் பழமையான தேவாலயம் ஒன்று இருந்த இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு ஜேர்மனியிலுள்ள கெஸ்டாப் என்ற கிராமத்தில் 1297ஆம் ஆண்டு றோமன் கட்டடக்கலையின் அடிப்படையில் கட்டப்பட்ட இத்தேவாலயத்தின் உச்சியில் சிறிய கறுப்பு நிறக் கோபுரம் ஒன்று உள்ளது.

இந்தத் தேவாலயம் அமைந்துள்ள இடத்தில் 5 கோடி தொன் அளவுக்கு பழுப்பு நிலக்கரி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை மின்சார உற்பத்திக்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டது.

இதற்காக தேவாலயத்தை இடமாற்றம் செய்ய மாநில அரசு திட்டமிட்டது. ஆனால் இதற்கு அக்கிராம மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். மேலும் அரசின் இந்த முடிவுக்கு எதிராக மக்கள் வழக்குத் தொடர்ந்தனர்.

பல ஆண்டுகளாக நடந்த அந்த வழக்கு அரசுக்குச் சார்பான முடிவுடன் 2005 இல் தீர்க்கப்பட்டது. இதனால் அக்கிராம மக்களுக்கு மாற்று இடமும் 50 கோடி ரூபா பணமும் வழங்கப்பட்டு புதிய இடங்களில் குடியமர்த்தப்பட்டனர். 65 அடி உயரமும் 48 அடி நீளமும் 750 தொன் நிறையுமுடைய இத் தேவாலயத்தை பாரந்தூக்கிகள், கனரக வாகனங்களின் உதவியுடன் பெயர்த்தெடுத்து 12 மைல் தொலைவிலுள்ள போர்னா என்ற கிராமத்தில் வைப்பதென முடிவுசெய்யப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டது.

## திருச்சபையையும் உலகத்தையும் இணைத்த சுற்றுமடல்

### ஐ.நா.வில் வத்திக்கான் பிரதிநிதி

ஆறாம் பவுல் பாப்பரசரின் சுற்றுமடலான "போப்புலோறும் புறோக்கிறசியோ" வின் 40ஆம் ஆண்டு நிறைவு தினத்தில் நியுயோர்க் நகரின் ஐ. நா. தலைமைச் செயலகத்தில் வத்திக்கான் பிரதிநிதி பேராயர் மார்ட்டின் உரையாற்றினார். இலட்சியப்பற்றும் ஆர்வமும் நிறைந்த அரசியல்வாதிகளே இன்று எமது நாடுகளுக்குத் தேவை என அவர் தமது உரையில் தெரிவித்தார்.

ஏழை நாடுகளின் தேவைகளையும், அங்கு ஏழைகள் சந்திக்கும் சவால்களையும் பற்றிச் சிந்தித்த ஆறாம் பவுல் பாப்பரசர் 40 ஆண்டுகளுக்கு முன்னரே இந்த சமூக சுற்றுமடலை வரைந்தார். இரண்டாம் வத்திக்கான் சங்கத்துக்குப் பின்னர் திருச்சபையையும் உலகத்தையும் இணைக்கும் உறவை ஒரு புதிய பார்வையில் நோக்க இச்சுற்றுமடல் வழிவகுத்தது. ஏழை நாடுகளின் வேகமான வளர்ச்சிக்கு அனைத்து நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம். இப்பங்களிப்பில் அரசியல்வாதிகளின் தூய்மையான இலட்சியப் பற்றும் ஆர்வமும் நிறையத் தேவைப்படுகின்றது. என அவர் மேலும் தெரிவித்தார்.

# மாதங்களில் சிறந்த மார்கழி!



*காலங்களில் - வசந்தம்*
*கலைகளில் - ஓவியம்*
*மாதங்களில் - மார்கழி*

**- மக்கள் காதர் -**

கவிப்புயல் கண்ணதாசன் என்றோ பாடிவைத்த கவிதை வரிகள் இவை. ஆம்! மாதங்களில் மார்கழியைத்தான் அவன் குறிப்பிட்டான். ஏன்? மங்களகரமான மாதம், மகிழ்ச்சியான மாதம் மார்கழி. மழை வெள்ளம் நிலத்தில் நிறைந்து மழை ஓய்வெடுக்கும் மாதம். பச்சைப் பசுமையாக வயல் வெளிகள், பசுமை கொஞ்சும் மரங்கள், செடி, கொடிகள் பெருங்காடுகள், உப்பிக் கொழுத்த உயிரினங்கள் எல்லாமே மிகவும் உற்சாகமாக வாழும் மாதம் மார்கழி. இவை எல்லாவற்றிற்கும் மேலாக இயேசு பாலன் பிறந்த இறை மாதம் இதுவாகும்.

ஆம்! இம்மாதத்தில் மன்னார் நகரமே களைகட்டும். தமிழர்கள், முஸ்லிம்கள் அனைவருமே மிகவும் மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் நம்பிக்கையுடனும் எதிர்வரும் புத்தாண்டை எதிர்பார்த்துக் காத்திருப்பர்.

இம்மாதத்தில் கத்தோலிக்கரைவிட மன்னாரில் முஸ்லிம்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள். முஸ்லிம்களின் வியாபாரத் தளங்கள் அனைத்தும் விடிய விடியத் திறந்திருக்கும். அவர்களது புடவைக் கடைகள், தேனீர் விடுதிகள், பலசரக்குக் கடைகள் அனைத்தும் மார்கழி மாதம் 15ம் திகதியில் இருந்து வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு தெருவெல்லாம் ஒளி வெள்ளம் பாய்ந்து பரவசக் கோலமாக காட்சியளிக்கும். சில நிறுவனங்களில் நத்தார் தாத்தா முன்னால் நின்று இசைக்கு ஏற்ற விதத்தில் ஆடி மக்களை மகிழ்விப்பார். இதற்காகவே நன்கு ஆடத்தெரிந்த இளைஞர்கள் வந்து கலந்துகொள்வர்.

இம்மாதத்தின் ஆரம்பத்திலேயே மன்னார் நகரின் வியாபாரிகள் கொழும்பு செல்வர். அங்கு இவர்கள் பல வகையான நத்தார் விளையாட்டுப் பொருட்கள், வானொலிப்பெட்டி தங்க நகைகள், உணவுப் பண்டங்கள், வானவெடிகள், நத்தார் வாழ்த்து மடல்கள் என்பனவற்றை அதிக அளவில் கொள்வனவு செய்வர். அவைகளைப் பார ஊர்திகளில் ஏற்றி மன்னாருக்குக் கொண்டுவருவர். விசேடமாக நத்தார் பொம்மைகள் அதிகமாக இருக்கும்.

தினமும் இரவில் இவ்வர்த்தக நிலையங்கள் திறந்திருக்கும். தேனீர் விடுதிகள் விடியவிடியத் திறந்திருக்கும். பேருந்துகள் நள்ளிரவு வரை சேவையில் ஈடுபடும். திரைப்பட மாளிகைகளில் முற்பகல் காட்சிகள் காண்பிக்கப்படும். மக்கள் இரவில் தூங்காமல் நகரில் மகிழ்ச்சியுடன் நடமாடித்திரிவர்.

அநேகமாக மன்னார்க் கத்தோலிக்க மக்கள் தங்கள் சகல தேவைகளையும் முஸ்லிம் வர்த்தகர்களிடமே பெறுவர். மன்னாரில் அதிக வர்த்தகம் நடைபெறும் மாதமும் இம் மாதமாகும். வர்த்தகர்கள் தாங்கள் வாங்கிய கடன்களையெல்லாம் அடைத்துவிட்டு அடுத்த வர்த்தகத்திற்குத் தயாராகிவிடுவார்கள்.

விசேடமாக நத்தார் கரோல் என்னும் இசை நிகழ்ச்சியைக் குறிப்பிட வேண்டும். பல்வேறு வேடங்களில் நத்தார்த் தாத்தாக்கள் நகரைச் சுற்றி ஆடிப்பாடி ஊர்வலமாக வருவர். இவர்கள் வருகைக்காக முஸ்லிம் கிராமங்களான மூர்வீதி, உப்புக்குளம் போன்ற இடங்களில் மக்கள் விழித்து நத்தார் தாத்தாவை வரவேற்பதுடன் தங்கள் காணிக்கைகளையும் செலுத்துவர்.

மார்கழி 25ல் மழை சிறு தூறலுடன் ஓய்ந்து வசந்தமான காற்று வீச ஆரம்பிக்கும். யேசு பாலன் பிறப்பு நிகழ்வு சகல தேவாலயங்களிலும் பிரார்த்தனையுடன் ஆரம்பமாகும். அந்த நிகழ்வை முஸ்லிம் மக்கள் வீட்டில் விழித்திருந்து கேட்டு மகிழ்வர். அன்று மழை பெய்தே ஆக-வேண்டும். இல்லாதுபோனால் மக்கள் கவலைப்-படுவர். ***நத்தாருக்கு மழை பெய்யாவிடில் செத்தாலும் மழை பெய்யாது*** என்ற முதுமொழி இங்கு நீண்டகாலமாக வழக்கிலுள்ளது.

நத்தார் முடிந்து புத்தாண்டு வரும் வரையிலும் இந்நிகழ்வு தொடரும். மார்கழி 31ம் திகதியில் சகல தையல் கடைகளிலும், தையல் இயந்திரங்களின் ஓசை காதை அடைக்கச் செய்யும். இங்கு அதிகமானோர் முஸ்லிம் தையல் தொழிலாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


புத்தாண்டில் கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களுக்கு வழங்கும் பலகார வகைகளில் றிச் சேக் (Rich Cake) மிகவும் சுவையுடையதாக இருக்கும். இதனை முஸ்லிம் மக்கள் மிகவும் விரும்பி உண்பர்.

மொத்தத்தில் மழை ஓய்ந்து பயிர் செழித்து, குளம் நிறைந்து, மனம் நிறைந்து அனைத்து உள்ளங்களிலும் மகிழ்ச்சி தாண்டவமாடப் ***புத்தாண்டுக் கைவியளம்*** என்று தை முதல் நாள் காலையில் அனைவரும் கைவியளம் பெறுவர். அந்த ஆண்டு முழுவதும் மிகவும் சிறப்பாக அமைய அனைத்து மதத் - தலைவர்களும் வாழ்த்துவார்கள்.

மும்மதமும் சம்மதமாய் மூவினமும் ஓரினமாய் வாழும் மன்னார் மக்களின் மகோன்னத மாதம் மார்கழி மாதமாகும். ●

## இறைபணியில் 10ம் ஆண்டு நினைவு

17 . 12 . 1997



17 . 12 . 2007

## அருட்பணியாளர்
## நீக்கிலாப்பிள்ளை பாக்கிய றஞ்சித்

*"என் விருப்பப்படி அல்ல,*
*உம் விருப்பப்படியே நிகழட்டும்"* (லூக்.22:42)

கருவிலே குருவாகத் தேர்ந்த
கடவுளையே கடைசிவரை கைப்பிடித்து
காலைக் கதிரவனாய் மானிடருக்கு ஒளி கொடுக்க
காலமெல்லாம் கரைந்துருகிய மெழுகானாய்.

தூய்மை இழக்காத நல் தூயவனாய்
துன்புற்றோர் துயர் துடைப்பின் மூலம்
தூய விண்ணை இம்மண்ணில் கொணர
துரிதமாய் துணிந்தோடினாய்.

அன்புருவாம் ஆண்டவரை அகத்தில் இருத்தி
அள்ளிக் கொடுத்தாய் அனைவருக்கும்
அருள்பணி ஆயன் பாக்கியனாய்
அரும்பு முதல் ஆயுள் வரை திகழ்ந்தாய்.

அறிவாற்றல் மிக்க ஞானியாய்
அறியாமை இருள் போக்க
அனுதினமும் ஆடுகளுக்காய் உயிர் கொடுத்த
அன்புநிறை இறை ஊழியனாய்.

நற்செய்தியை நாளும் பறைசாற்ற
நல் சாட்சியாய் வாழ்வை மாற்றி
நானிலத்தின் நல் பொருளானாய்.

அழைப்பின் பொருளுணர்ந்து
அன்பர் இயேசு பணிதனை
அவனியில் ஆற்ற அடிமையாய்
அவர் பாதையில் அடியொற்றினாய்.

பண்புள்ள கண்மணி பாக்கியாளா
பத்தாண்டுகால உன் சேவையை பொறுக்காமலா
பகைவனாகிய கோழை நெஞ்சத்தவன்
பாவத்தைக் கட்டிட கல்விளானில் காத்திருந்தான்

காற்றின் ஒளிபடர்ந்த கிளையாய்
காடுமேடாய் ஓசை எழுப்பிய உன்னை
கண்ணி வைக்கவா கண்ணுக்கு புலப்படாமல்
காட்டுக்குள்ளே பதுங்கி ஒழிந்திருந்தனர்.

காவிய நாயகனாய் கண்ணிமைக்கும் வரை
கலகலவென சுற்றித்திரிந்த உன்னை
கட்வுள் தன்னிடம் துதிபாட
காலம் குறித்து உன்னை அழைத்ததேனோ?

ஆகட்டுமென அடிபணிந்த நாள் முதல்
ஆண்டவரது பெயர் போற்றப்பட - உம்மை
அர்ப்பணித்த தெய்வப் புதல்வா பாக்கியமே
நீர் சிந்திய இரத்தத்தால் அவனி ஆசீர் பெற்று
உம் சாட்சிய வாழ்வு என்றும் எமதாகட்டும்.

நாற்பதாண்டு காலக் குறுகிய வாழ்வுதனில் செய்த
பெரும் நன்மைத்தனங்கள் போதாதென்றா
நில உலகில் வரலாறு சமைக்க வழிவகுத்து
நீதி தேவன் நித்திய வீட்டில் உமக்கு
நிரந்தர முடியை விரைவில் சூட்ட எண்ணினார்.

*நீ. பாக்கிய றெஜினோல்ட் (தம்பி)*
*கனடா.*

### விழிநீரால் தோரணம் கட்டுகின்றேன்...

அன்பின் சிகரமே, பண்பிலே இனியவனே
பாசத்தின் இருப்பிடமே
அன்பான என் பெரியப்பாவே!
வெண் நிலா புத்தொளிரும்
புன்னகை ஒளிரும் உம்முகம்
உள்ளம் உருகி வாடுகின்றேன்.
உம்மை நினைத்து ஏங்குகின்றேன்.
என்றும் நீர் எம்முடனே இருக்கின்றீர்
என்ற உணர்வால் அமைதி கொள்கின்றேன்.
விண்ணக வாழ்வில் நீர்
அமைதியாய் ஒளிர வேண்டும்.
நெஞ்சிலே ஆழமான கவலையுடன்
வஞ்சமிலா விழிநீரால் கட்டுகின்றேன் தோரணம்.
உம் பத்தாண்டு குருத்துவ நினைவு நாளில்
உம் ஆன்மா சாந்திபெற பிரார்த்திக்கும்

*அன்பின் பெறாமகள்*
*என். பி. ஆர். அமிசா றொஸ்னி.*
*கனடா.*

### தேற்றுவார் யாருமின்றி தேம்பி அழுகின்றோம்

கண்ணான கண்மணியே
கறைபடியா மாணிக்கமே
எம் அருமையான தலைமகனே
குருமணியே எம் குலவிளக்கே
கண்ணீரில் நாம் கரைய
கர்த்தரிடம் சென்றீரோ?

பாவி எம்மை பாரினிலே் பரதவிக்க விட்டு
பரமனிடம் சென்றீரோ?
காலமெலாம் நாம் கதறி அழ
அமலனிடம் சென்றீரோ எம் மகனே!

அழுது புலம்புகின்றோம் எம்
அழுகுரல் கேட்கவில்லையோ உம் செவிக்கு
எம் செல்வ மகனே எங்கு சென்றீர்?
சென்ற இடம் சொல்லுமையா
உம்முடனே நாமும் ஓடிவர
எம்மைவிட்டுச் செல்வதற்கு
வந்ததோ உமக்கும் மனது?
உம் பத்தாண்டுக் குருத்துவ விழாவை
நினைவு கூரும் இந்நாளில்
உம் ஆன்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.

*இரத்தக்கண்ணீர் வடிக்கும்*
*சித்தப்பா குடும்பத்தினர்,*
*பெரியகடை, மன்னார்.*

**தொடர் கட்டுரை – அங்கம் 55**

## கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

**- அருட்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -**



### வட இலங்கையில் பாடுகளின் காட்சிகள்

**19. பேசாலைப் பாரம்பரிய உடக்காலான திருப்பாடுகளின் காட்சி**

- ச. அந்தோனி மிராண்டா, பேசாலை

### முகாமைத்துவக் கட்டமைப்பு

பேசாலைக் கிராமத்தில், அன்றும் இன்றும் ஊர்ப் பொதுக்கூட்டங்களுக்கு பங்குத் - தந்தையவர்களே தலைமை தாங்குவார். கட்டளைக்காரர் என அழைக்கப்படும் பெரியார்களும், மேஸ்திரிமார் என்ற கலைஞர்களும், பொதுமக்கள் யாவரும் கூடியிருக்கும் இக்கூட்டத்தில் மூப்பர் ஒருவர் தெரிவுசெய்யப்படுவார். அவரே பாஸ் மண்ட-பத்தில் நடைபெறும் சகல நிகழ்ச்சிகளையும் நெறிப்படுத்துபவராக இருப்பார்.

கடந்த காலங்களில் எமது முன்னோர்களான காலஞ்சென்ற மரியானு மீயேஸ், எவரோஸ் சக்கரியாஸ் குரூஸ், கயித்தான் யான் பீரிஸ், அ.செபஸ்த்தியான் குரூஸ், வெலச்சோர் யேம்ஸ் பீரிஸ் ஆகியோரும், அண்மைக்-காலங்களில் திருவாளர்கள் நீ. சூசையப்பு குரூஸ், சந்தியா அந்தோனி மிராண்டா ஆகியோரும் இந்நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கி நடப்பித்து வந்தனர்.

எம்மத்தியில் சிறந்த மேஸ்த்திமார்களாக காலஞ்சென்ற மனுவேல் மிராண்டா, சந்தியா மிராண்டா, அலக்சாந்தர் மிராண்டா, பஸ்கால் மிராண்டா, தோம்ஸ் குரூஸ், அந்தோனி குலாஸ், கயித்தான் பறுனாந்து, இராசையா நீயேஸ், அருளாந்தம் குரூஸ், அந்தோனிப் பீரிஸ் இன்னும் இவர்களோடு சேர்ந்து பலரும் அரும்பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்று எம்மத்தியில், கைதேர்ந்த ஆற்றல் மிக்க சிறந்த கலைஞர் பலர் இத்திருப்பாடு-களின் காட்சியைக் காண்பிப்பதில் அதிக பங்கேற்று சிறப்பிப்பது பாராட்டுக்குரியது மாத்திர-மல்ல, இப்பாரம்பரியக் கலையை வளர்ப்பதில் ஆற்றிய அருளப்பரிய பணிகள் நினைவு கூரப்பட வேண்டியவையாகும்.

### நிதி முகாமைத்துவம்

எக்காரியத்தைச் செயல்படுத்துவதற்கும் அவசியம் தேவைப்படுபவைகளில் ஒன்று பணம். கடந்த காலங்களில், சிறப்பாக, யான் அறிந்த 60 வருடங்களில் திருப்பாடுகளின் காட்சிக்கு வேண்டிய பணம் கோவில் பொதுநிதியிலிருந்தே பெறப்பட்டது. தொடர்ச்சியாக 2 அல்லது 3 வருடங்களுக்கொருமுறை இக்காட்சிகள் காண்பிக்கப்படும்போது மொத்தச் செலவு குறைவாகவே இருக்கும். பொருட்களின் அழிவு தேய்வு, காட்சிகளின் தொகைக்கு ஏற்ப செலவுகளும் கூடிக்குறையும். 2000ஆம் ஆண்டில் காண்பிக்கப்பட்ட 'உடக்குப் பாஸ்' காட்சிக்கு கோவில் பொது நிதியிலிருந்து பல காரணங்-களுக்காக நிதி எதுவும் பெறப்படவில்லை. மாறாக முழுப்பணமும் இளைஞர்களின் முயற்சியால் மக்களிடமிருந்தே அன்பளிப்பாகப் பெறப்பட்டது.

### இருள் சூழ்ந்த இடைவெளி

எமது முதிய, கைதேர்ந்த கலைஞர்கள் பலர் இறைபதம் எய்திய நிலையில் 1980ஆம் ஆண்டு, எமது இளைய கலைஞர்கள், தலைமுறையினர், மிகவும் பொறுப்புடன் நேர்த்தியான முறையில் முழுக் காட்சியையும், சில புதுமைகளையும் செய்து காண்பித்தனர். அதைத் தொடர்ந்து 1981ம் ஆண்டு அருட்திரு. J. P. தேவறாஜா அடிகளாரின் விருப்பத்துக்கு இணங்க 7,8,9ஆம் காட்சிகள் நிகழ்த்தப்பட்டன.

1983ம் ஆண்டு நாட்டில் வன்செயல்கள் தலைதூக்கின. மக்கள் பலர் இடம்பெயர்ந்து அயல் நாடு சென்றனர். நமது அயல் கிராமங்களில் இருந்து உயிராபத்துக்கு அஞ்சி பேசாலைக்குச் தஞ்சம்கோரி வந்த நூற்றுக்கணக்கானோர் இப்பாஸ் மண்டபத்தில் குடியிருந்தனர். மரண பயமும் உயிராபத்தும் நிறைந்த 5, 6 வருடங்களாக முற்றாக கைவிடப்பட்டிருந்த இப்பாஸ் மண்டபத்தில் இருந்த பல இலட்சரூபாய் பெறுமதியான பொருட்கள் காணாமலும் அழிந்தும் போயின. இனிமேல் 'பாஸ்' காட்டவே முடியாது என்று சொல்லுமளவிற்கு பாஸ் மண்டபம் உருக்குலைந்து காணப்பட்டது.

1998ஆம் ஆண்டு இளம் தலைமுறையினர் பலர் மீண்டும் தமது பாரம்பரியக் கலை புதுப்பிக்கப்பட்டு திருப்பாடுகளின் காட்சி காண்பிக்கப்பட வேண்டும் என்று விரும்பினார்கள். எனினும் சில தடைகளினால் இம்முயற்சி கைவிடப்பட்டது. (தொடரும்...)




# கிறிஸ்மஸ் கட்டுரைகள்



## எனக்கு எது கிறிஸ்மஸ்?

அருட்சகோதரன் பா. றொசான்
தேசிய குருமடம், கண்டி.



கிறிஸ்தவனாக, கிறிஸ்தவளாக இருக்கின்ற ஒவ்வொருவரும் நத்தார்ப் பண்டிகைய்யை வருடா வருடம் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். பல வர்ண உடைகள் கண்ணைக் கவருகின்ற வண்ணமும், விதவிதமான உணவு வகைகள் நாக்கை சுவைக்க வைக்கவும், உடலுக்கு புத்துணர்ச்சியை ஊட்டக்கூடிய குளிர்பான வகைகளும், உடலில் அணிந்து அழகைப் பெருக்குகின்ற தங்க நாணயங்களும் மட்டுமே அதிகமாக எமக்கு முக்கியமாகத் தென்படுகின்றன.

'கிறிஸ்மஸ்' என்றால் ஏதோ யாவரும் செல்வதுபோல் ஆலயம் சென்று திருப்பலியில் பங்கேற்று வருகின்றோம். மனமகிழ்ச்சிக்காக வானவெடிகளும், கறோல் ஏற்பாடுகளும், பாலன் குடில் அலங்கரிப்புகளும் ஒழுங்குசெய்கின்றோம்.

ஆம், இவையாவும் எம் வாழ்க்கையில் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்திற்கு முக்கியமானவைதான். ஆனால் உண்மை-யான கிறிஸ்து பிறப்பு விழா இவை மட்டுமல்ல. கிறிஸ்மஸ் விழா வருகின்றது, இவ்விழா எம் அனைவருக்கும் சந்தோஷமான விழா, நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கின்றோம். பாலன் இயேசுவின் பிறப்பு எம் வாழ்விற்கு ஒளி ஊட்டுகின்றது என்பதை உணர்வதும் அனுபவிப்பதுமே உண்மைக் கிறிஸ்மஸ் விழாவாகும்.

கிறிஸ்து பிறப்பு விழா என்பது அன்பர் இயேசு இவ்வுலகிற்கு எம்மைப்போல ஒரு குழந்தையாக மாட்டுத் தொழுவத்தில் மனிதனாக மண்ணில் பிறந்த நாளாகும். இருள் சூழ்ந்த உலகிற்கு ஒளியாக வந்த இயேசு எம் அனைவருக்கும் அன்பையும் மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் இறைத்திட்டத்தின்படி கொண்டுவந்தார்.

அந்தப் பெருவிழாவை இன்றைய சூழ்நிலைக்கேற்ப கொண்டாடுவது தேவைதான். அதனால்தான் இயேசுவின் பிறப்பு விழா நம்மால் மட்டுமல்ல, உலகின் எல்லாத் திசைகளிலும் உள்ள மக்களாலும் மகிழ்வாகக் கொண்டாடப்படுகின்றது.

ஆனால் இன்று அன்பும், மகிழ்ச்சியும், சமாதானமும் மறைந்து வருகின்றது. உலக நாட்டங்களில் மலிந்து, போர்க்கால சூழ்நிலையில் வாழும் எமக்கு இன்று எது கிறிஸ்மஸ் என சந்தேகம் எழுந்துகொண்டிருக்கின்றது. கிறிஸ்மஸ் ஒவ்வொரு இடத்திற்கும் அதனதன் சூழ்நிலைக்கும் தரத்திற்கும் ஏற்ப வித விதமான வடிவங்களில் கொண்டாடப்படுகின்றது. ஆனால் எல்லோரிற்கும் பொதுவான கிறிஸ்மஸ் என்னவென்றால் "கிறிஸ்துவின் ஒளியில் சமாதானத்தை ஏற்படுத்துதல்" ஆகும்.

### சிறுவர்களுக்கு

கிறிஸ்மஸ் என்றால் வானவெடி கொழுத்துவதிலும் பட்டாசு வாங்குவதிலும் சக்கர வாணம் விடுவதிலும் அதிக ஆர்வத்துடன் துடிதுடிப்பாக ஓடித்திரிபவர்கள் சிறுவர்களே. இவை யாவும் நடைபெறுகின்ற வேளையிலும் சிறுவர்களாகிய நீங்கள் பாலகன் இயேசுவின் தூய்மையான இதயம் கொண்டு, தாய், தந்தை, சகோதரர்களுடன் அன்புறவை ஏற்படுத்தி அயலவர்களிலும் நண்பர்களிலும் அன்பு, மகிழ்ச்சி, சமாதானம், பணிவு போன்ற கனிகளை உருவாக்குங்கள்.

### இளையோர்களுக்கு

கிறிஸ்மஸ் என்றால் பாலன் குடில் அமைப்பது, ஆலயம் அலங்கரிப்பது, மக்கள் பார்க்க வேண்டுமென்று புது ஆடை அணிகலங்கள் அணிவது போன்ற வெளி ஆயத்தங்களில் முனைப்பாகச் செயற்படுபவர்கள் இளையவர்களே. இவை எல்லாம் இருக்கின்றபொழுதும் இறைவார்த்தையைக் கற்றுத் தியானித்து, இளைஞர்கள் மத்தியில் ஓர் ஆழமான புரிந்துணர்வுடன் செயலாற்றுங்கள். பங்கின் குடும்பங்களுக்கிடையில் சமாதான ஒளியை ஏற்றி, குடும்பங்களில் அன்பு, மகிழ்ச்சி மலர ஒத்துழையுங்கள். எங்கெல்லாம் இருள் நிறைந்து காணப்படுகின்றதோ அங்கெல்லாம் ஒளியை ஏற்றுங்கள்.

### பெற்றோர்களுக்கு

தாய்த் திருச்சபையின் குட்டித் திருச்சபையாகத் திகழ்வது குடும்பம். இதனைக் கட்டிக்காப்பவர்கள் பெற்றோர்கள். கிறிஸ்மஸ் என்றால் வீட்டை அலங்கரிப்பதிலும், சுவையான உணவிற்கு வழிசமைப்பதிலும், உடைகளை வாங்குவதிலும் அதிக ஆர்வம் காட்டுபவர்கள் பெற்றோர்களே.

இவை ஒரு வகையில் காணப்படுகின்றபோதும் முக்கியமாகக் குடும்பத்தில் சுடர்விட்டு எரியக்கூடிய சமாதான ஒளிவிளக்கை பெற்றோர்கள் ஏற்ற வேண்டும். கணவன் - மனைவி – பிள்ளைகளுக்கிடையில் அன்பு, புரிந்துணர்வு, மகிழ்ச்சி, கீழ்ப்படிவு போன்ற இறைப்பண்புகள் உதயமாக உழைக்க வேண்டும். உங்கள் வீடுகளில் பிறக்கின்ற பாலகன் இயேசு உங்கள் உள்ளங்களிலும் பிறந்து ஒளிகொடுக்க உங்களை ஆயத்தப்படுத்துங்கள்.

### பெரியோர்களுக்கு

குடும்பத்தில், சமுதாயத்தில் மதிக்கப்பட வேண்டிய மாணிக்கச் சொத்துக்கள் இவர்களே. இவர்களே சமுதாயத்தின் முதுகெலும்பானவர்கள். கிறிஸ்மஸ் என்றால் ஆலய வளாக வேலைகளிலும் ஆர்வம்காட்டிச் செயற்படுபவர்கள் இவர்களே. சமுதாயத்தின் ஒற்றுமைச் சங்கிலியை அறுத்தெறிபவர்களாக இருக்காது, அதனை இணைப்பவர்களாக இருக்க வேண்டும். தாங்கள் பெற்ற ஞானத்தை இவர்கள் மற்றவர்களுக்கு அளிக்க வேண்டும். சமாதானக் கிறிஸ்துவின் ஒளியை சிறுவர்கள், இளைஞர்கள், பெற்றோர்கள் மத்தியில் நிலைநாட்ட வேண்டும். குடும்பங்களிலும், சமுதாயத்திலும் கிறிஸ்து இயேசு கொண்டுவந்த அமைதியின் பேரொளியை பறைசாற்ற நீங்கள் அழைக்கப்படுகின்றீர்கள். ●

## அமைதியின் தேவனே வருக

பி. இராயப்பு,
தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளர்,
விடத்தல்தீவு.

எமது நாட்டில் அமைதி சமாதானம் நிலவ நாட்டுத் தலைவர்களாலும் உலக நாட்டின் பிரதிநிதிகளாலும் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. செய்திகள் பரிமாற்றப்பட்டுச் சந்திப்புக்களும் இடம்பெறுகின்றன. ஆனால் சமாதானம் தொலைவில் இருக்கின்றதையே காண்கின்றோம்.

ஆயினும் மதத்தலைவர்களின் மேலான அறிவுறுத்தல்களும், அனுசரணைகளும் சமாதானத்தை நோக்கியதாகவே இருக்கின்ற வேளையில், மனிதரை மீட்க அமைதியின் தேவனாய் இறைவன் பூமியில் பிறந்த நன்நாளை - கிறிஸ்மஸ் விழாவை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்.

அன்று சமூகத்தில் வாழ்ந்த மக்கள் ஒருவர் ஒருவரை எதிரியாக எதிர்கொண்டும், இறைவனைப் பிரிந்து வாழ்ந்துகொண்டிருந்த சூழ்நிலையில் மனிதனுக்கு விடுதலை வாழ்வைக் கொடுக்க இறைமகன் கிறிஸ்து மனிதனாக அவதரிக்க உள்ள செய்தி தெரிவிக்கப்பட்டது. "காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள், சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மீது சுடரொளி உதித்துள்ளது". (எசா. 9:2) என்னும் செய்தி இயேசுக் கிறிஸ்துவே உலகத்தின் பேரொளி, வாழ்வளிக்கும் தெய்வம் என்பதை வெளிப்படுகின்றது.

வரலாற்றில் இஸ்ராயேலர் ஒரு மீட்பருக்காகக் காத்திருந்தார்கள். ஆயினும் அவர்கள் அவரைக் கண்டுகொள்ளவில்லை. "நீங்கள் அறியாத ஒருவர் உங்களிடையே நிற்கின்றார் (அரு.1:2) என்று கானகத்திலே குரல் ஒன்று எழுந்து மீட்பரின் வருகைக்குச் சாட்சி கூறியது. "இதோ கடவுளின் செம்மறி இவரே, உலகின் பாவங்களைப் போக்குகிறவர்" (அரு.1:29) என்று அக்குரல் மீட்பரைக் குறித்துக்காட்டியது. மீட்பின் வழியானது இயேசுக்கிறிஸ்துவே என்று வானத்திலிருந்து உறுதியாக எடுத்துரைக்கப் - பட்டது.

"எல்லா மக்களுக்கும் பெருமகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன், இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் தாவீதின் நகரில் பிறந்திருக்கின்றார்" (லூக்.2:10-11) வானதூதர் மூலம் இடையருக்கு அறிவிக்கப்-பட்ட இந்தச் செய்தி நற்செய்தியாக இருக்கிறது.

கிறிஸ்மஸ் விழாவை அகில உலகமே மகிழ்ச்சியாகக் கொண்டாடும் இவ்வேளையில் "உலகிலே அவருக்கு உகந்தவருக்கு அமைதி ஆகுக" என்ற வானதூதரின் கீதத்தை எமதாக்கு-வோம். ஆண்டவரில் அமைதி பெறுவோம். இயேசு பாலனை எமது உள்ளத்திலும் இல்லத்திலும் வரவேற்போம். ஆலயம் சென்று அவரை ஆரா-திப்போம். உறவினர், அயலவர் நண்பர்களுக்கு வாழ்த்துரைத்து, உணவை, பொருளைப் பகிர்ந்து மகிழ்வோம். இதுவே அர்த்தமுள்ள கிறிஸ்மஸ் விழாவாகும்.

மகிமையும் துதியும் மாட்சியுமாக மனுவுருவான மாபரனே, மனிதரைப் பரகதி சேர்க்கப் புவியினில் பிறந்த பாலகனே, காரிருள் அகல, பேரொளி அளிக்கும் காலைக் கதிரவனே வருக, பகமைகள் ஒழிய சமரசம் மலர அமைதியின் அரசராய் வருக!

### பாலகனே ஏன் உதித்தாய்?

மரியின் மகனே பாலகனே
மண்ணில் வந்து ஏன் பிறந்தாய்?
மண்ணவர் எங்கள் அவலம் பற்றி
மகிந்தவுடன் பேசுவதற்கா?

பலரும் பேசிப் பலனில்லை
பதிலும் எதுவும் கிடைக்கவில்லை
பரமன் நீ வந்து பேசினால்தான்
பகைமை ஒழியும் என நினைத்தாயோ?

எகிப்து மன்னன் பிடியினின்று
எபிரேயரை மீட்டவன் நீ
எம்மையும் மீட்க வழிகாட்ட - எம்
ஏக்கங்கள் தணிக்க வந்தாயோ?

ஏழைகள் எம் வாழ்வை மாற்றிட
எம்மவர் ஏக்கம் தீர்த்திட
மனித மாண்பு மலர்ந்திட
மனிதனாக அவதரித்தாயோ?

*செல்வி. ந. சிராணி*
*செபமாலைக்கன்னியர் மடம்*
*பட்டித்தோட்டம், மன்னார்*

## கிறிஸ்து பிறப்பு எமக்குத் தரும் செய்தி

அ. சிமில்டா
பொன்தீவுகண்டல்
அளவக்கை.



வருடத்தின் கடைசி மாதம் மார்கழி மாதமாகும். பெத்லேகேம் என்னும் ஊரில் அக்கடுங்குளிரில் மாட்டுத் தொழுவத்தில் எம் பெருமான் இறைமகன் பிறந்தார். உலகளாவிய ரீதியில் இறைமகன் இயேசுவின் பிறப்பைக் கொண்டாடும் கிறிஸ்தவ மக்கள் பல சவால்கள் மத்தியில் இன்று கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடுகிறார்கள்.

உலகத்தில் ஆண்டவராகிய கிறிஸ்துவின் பிறப்புடன் உலகிற்கு மீட்பும், சமாதானமும், ஒளியும், கருணையும், கனிவும் பிறந்தது. அத்துடன் மனித நேயங்கள் பாவத்தால் சிதறுண்டு அழிவுறும் தருவாயில் இருந்தது. சாதாரண மாட்டுத்தொழுவத்தில் மனிதனாகப் பிறந்த இயேசு, பாடுபட்டு பல வேதனைகளுக்கு மத்தியில் தன்னைக் கையளித்தார். மனித மேன்மையையும், மனித நேயத்தையும், மனித உரிமைகளையும், வாழ்வுக்கு ஒளியையும், சமாதானத்தையும் கொண்டுவர சுயநலமற்ற, தன்னலமற்ற வாழ்வை மட்டும் வாழ அவர் நல்ல மனுமகனாக வந்துதித்தார்.

அன்று ஆண்டவராகிய கிறிஸ்துவால் கொண்டுவரப்பட்ட சமாதானம் இப்போது எங்கே? அவர் விட்டுச்சென்ற அன்பும், அன்பின் பணியும், இரக்க மனப்பான்மையும், வாழ்வின் நல்லொழுக்-கங்களும், இறைவனின் ஆழமான விசுவாசமும், மனிதர்களின் சிநேகமும் எங்கே என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

இன்று கிறிஸ்துவின் பிறப்பை ஒரு அர்த்தமுள்ள பிறப்பாக கொண்டாட முடிகின்றதா? இற்றைக்கு சுமார் 2000ம் ஆண்டுகளுக்கு முன் உலகம் கிறிஸ்துவின் பிறப்பை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டாடியது. ஆனால் ஆண்டவராகிய கிறிஸ்து கொண்டுவந்த சமாதானத்தையும், மனித மேன்மையையும், அவர்களின் நேர்மையையும் உலகம் விலைபேசிவிட்டது.

மனிதனின் உழைப்பும் ஊதியமும் அவனுக்குத் திருப்தியைத் தருகிறதா? உழைப்பால் உருகி ஊதியம் காணாமல் கண்ணீர்த் துளிகளோடு அல்லற்படுகின்றான்.

இன்றைய சமுதாயம் இருக்கும் நிலை என்ன? உலகம் யுத்தத்தால் சரிவடைந்து நிலை - குலைந்துள்ளது. அன்று கிறிஸ்துவின் பிறப்பு சுகமான சுவாசக்காற்றாக இருந்தது. ஆனால் இன்றோ அதே கிறிஸ்துவின் பிறப்பு விசக்காற்றாக மாறி விஸ்வரூபம் எடுத்து உலகத்தை சின்னா பின்னமாக்கிக்கொண்டிருக்கின்றது.

ஆண்ட்வராகிய இயேசுக்கிறிஸ்துவின் வார்த்தையில் சில துளிகள்: "ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது. துயருறு-வோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர். கனிவுடையோர் பேறுபெற்-றோர் ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக்கொள்வர்."

எமது நாட்டிலும் சரி, எமது சமுதாயத்திலும் சரி, எமது இல்லத்திலும் சரி ஏழைகள் மதிக்கப்படுகின்றார்களா? துன்புறுத்தப்படுவோர் ஆறுதல் அடைகின்றார்களா? ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து இவ்வுலகில் பிறந்து அல்லலுற்று சிலுவையில் அறையப்பட்டார். எதற்காக? மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும், நீதியின் பொருட்டு அவர்கள் துன்புறலாகாது, அமைதியிலே அனைத்து மக்களும் நிம்மதிகாண வேண்டும், தூய்மையான உள்ளத்தோடு வாழவேண்டும் என்பதற்காகவே ஆகும்.

வாழ்க்கையில் விசுவாசம், அன்பு பரிவு, இரக்க மனப்பான்மை, மன்னிக்கும் உள்ளம் படைத்து வாழவும் - நாம் எல்லோரும் ஒரே கடவுளின் பிள்ளைகள் என்ற விசுவாசத்தில், வாழவும், எம்மத்தியில் சாதி, மத வேறுபாடுகள் இன்றி வாழவும் இறைவன் கற்றுக்கொடுத்தார்.

கிறிஸ்துவின் பிறப்பு நாளை நினைவு கூரும்போது எம் இதயத்திலிருந்து பயமும், ஏக்கமும், தோல்விகளும், கவலையும் அகலட்டும். மீண்டும் எம் உள்ளத்தில் இயேசு பிறந்த வண்ணம் இருக்க, எம்மில் நிலைகொண்டிருக்கும் யுத்தம் என்னும் ஆட்கொல்லியையும், கொலை வெறியையும் எம்மிடமிருந்து அகற்றுவோம். ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பு தினமானது ஒரு விடிவுகாலத்தை எமக்கு ஏற்படுத்தட்டும்.

# கிறிஸ்மஸ் கவிதைகள்

## மீண்டும் எப்போது வருவாய்?

என் யேசுவே என் தெய்வமே
என் யேசுவே என் தெய்வமே
நீ படைத்த பூமி இன்று மாறிவிட்டது.
அது ஜாதி மத பேதங்களில் மூழ்கிவிட்டது.
இது மட்டுமா அல்லது சொல்லட்டுமா
வேதனையைக் கொட்டித் தீர்க்கட்டுமா
ஐயா மீண்டும் வருவது எப்போது?

விளை நிலங்கள் போர்க்களமாய் மாறிவிட்டது
அணு ஆயுதங்கள் தேசமெங்கும் பெருகிவிட்டது.
ஆண்டவரே என் இரட்சகரே
என்னை என்றும் காப்பவரே
ஐயா மீண்டும் வருவது எப்போது?

பணம் இருக்கும் இதயம் உன்னை மறந்துவிட்டது
மனித நேயம் மண்ணில் என்றோ இறந்துவிட்டது.
இருக்கும்வரை ஏழை மனம் உன்னை நினைக்கும்
ஐயா மீண்டும் வருவது எப்போது?

*ம.டிலான்*
*புனித தொன்பொஸ்கோ குருமடம்,*
*தங்கொட்டுவ.*

## எதற்காக அவதரித்தீர்?

வானுலகத் தூதரெல்லாம்
வாழ்த்தி உம்மைப் பாடிடவே
வயல்வெளி மேய்ப்பர்களும்
வந்து உம்மைப் பணிந்திடவே
வானத்து விண்மீன் பாதை காட்டிடவே
மூவரசர் வந்தும்மை வணங்கிடவே
விண்ணின்று மண்ணிற்கு பாலகனாய்
எதற்காக அவதரித்தீர்?

ஏரோதுடன் அன்று முழு ஜெருசலேமும் கலங்கிடவே
பாருலகம் ஆளுகின்ற பரலோக ராஜன் நீர்
பெத்தலேகம் சிற்றூரில் சத்திரத்தில் இடமின்றி
சத்தியத்தின் வேந்தன் நீர் மண்ணிலே பாலகனாய்
எதற்காக அவதரித்தீர்?

மாடடையும் தொழுவம்தான்
மன்னன் உந்தன் மாளிகையோ?
வைக்கோல் படுக்கைதான் உந்தனின் அரியணையோ?
கந்தையான துணியதுதான்
கர்த்தன் உந்தன் பஞ்சணையோ?
ஆடு மாடு காவல் நிற்க எதற்காக அவதரித்தீர்?

பாவி என்னை மீட்டிடவே பாரமான சிலுவைதனை
பாவியர்க்காய் சுமந்துமே பரிதாப மரணமேற்று
மீட்பினைப் பெற்றுத்தர பாலகனாய் அவதரித்தீர்!

*சி.பெனிற்ரா*
*புதுவாழ்வு பணியாளர்,*
*பள்ளமடு, விடத்தல்தீவு*



## அமைதியின் மன்னன் பிறந்திட்டார்



மந்தைகள் தங்கும் குடிலினிலே
மரியன்னை அவளின் மடியினிலே
மன்னன் இயேசு மலர்ந்தாரே - அன்று
பெத்தலேகேம் என்னும் சிற்றூரில்.

பாவ இருளை அகற்றிடவே
தேவ அருளைப் பொழிந்திடவே
மழலை பேசும் மகவாக அன்று
பரமன் இயேசு பிறந்தாரே.

யுத்தச் சத்தங்கள் ஓய்ந்து
புத்தம் புதிதாய் அமைதிப் பூ
நறுமணம்கொண்டு மலர்ந்திடவே - இன்று
ஈசன் பிறந்தான் ஈழத்திலே!

ஒளியாய்ச் சேயாய் வந்தவர்
விழிநீர் துடைக்க வந்திட்டார்
துள்ளி வருவீர் கண்மணிகாள் - இன்று
பரமன் பதம் பணிந்திடவே!

*செ. ஜெசில்டா*
*இல சி-8*
*மடுக்கோவில்,*
*மடு.*



## பாராயோ பாலகனே

தாவீதின் குமாரனாய் புவிதனில் உதித்தவனே
தரணியர் யாம் படும் பாடுதனைப் பாராயோ?
சரித்திர நாயகனாய்க் கன்னிமடி தவழ்ந்தவனே
சத்திரமே இல்லாமல் எம் மக்கள் தவிக்கும்
பரிதாப நிலைதன்னைப் பாராயோ பாலகனே!

ஏழ்மை நிலையிலே குடில்தனில் பிறந்தவனே
ஏழைகளின் அவலநிலை பாராயோ பாலகனே.
துன்பத்தின் துயர் துடைக்க சோதியாய் மலர்ந்தவனே
துயரமே வாழ்வாகி சோகத்தில் வாழும்
எம் மக்களின் வாழ்வினைப் பாராயோ பாலகனே!


உண்மையின் ஒளியாய் உலகினில் உதித்தவனே
உண்மைக்காய் ஏங்கும் எம் இனத்தின்
உணர்வுதனைப் பாராயோ பாலகனே?
கொஞ்சும் மொழிக் குழந்தையாய் குளிரினில் மலர்ந்தவனே
கொஞ்சும் மொழிக் குழந்தைகளின் தவிப்பினைப் பாராயோ?

தடைகள் மத்தியில் விடிவெள்ளியாய்ப் பிறந்தவனே
எம் இளைஞர்களின் ஏக்கங்களைப் பாராயோ பாலகனே
அடிமைத்தழை ஒளித்திட ஆதவனாய் உதித்தவனே
அடிமை நிலையில் அகதியாய் அலைகின்ற
எம் மக்கள் நிலையினைப் பாராயோ பாலகனே?
அன்பின் அரவணைப்பில் அமலனாய் உதித்தவனே
அன்பாய் வளர்ந்த பிள்ளை சடலமாய்க் கிடக்கும்
அவலநிலை பாராயோ பாலகனே?

*அருட்சகோதரி ஐடா*
*செபமாலைக் கன்னியர் மடம், யாழ்ப்பாணம்.*

## வருடம் தோறும் உனக்காய் காத்திருக்கிறேன் பரமனே!

வருடந்தோறும் இம்மண்ணில் பிறக்கும் - என்
இனிய இயேசு பாலனே
உன்னை வரவேற்க காத்து இருக்கின்றேன்.
என் இதய வீட்டை மலர்கள் தூவி மணம் பரப்பி
ஒளி ஏற்றி வைத்துக் காத்து இருக்கின்றேன்.
கண்களால் உன்னைக் காணாவிட்டாலும்
உள்ளத்தால் உன்னை உணர்ந்துகொள்ள
காத்து இருக்கின்றேன் பாலகனே!



கண்களால் உன்னைப் பார்க்க
செவிகள் உன் செய்தியைக் கேட்க
வார்த்தைகளால் உன்னைப் புகழ
உனக்காய்க் காத்திருக்கின்றேன் பாலகனே!

*செ. ஜெசி*
*இல.சி.08, மடுக்கோவில், மடு*

## பாலகன் இயேசுவே நீ வரவேண்டும் பாரினிலே...!

பாலகன் இயேசுவே நீ வரவேண்டும்.
நீண்டகாலம் நிம்மதியாய் நாம் வாழ்வதற்கு
சண்டைகள் சச்சரவுகள் இன்றுடன் முடியட்டும்
இனியாவது இன்பங்கள் பொங்க நீ வரவேண்டும்...!

உறக்கங்கள் இன்றி உள்ளங்கள் ஏங்குகின்ற இவ்வேளையில்
உன்னத பணி ஆற்றி உத்தமனாய் நாம் வாழ
உண்மை என்னும் விளக்கேற்றி வாழ்வு ஒளிர
பாலகனே நீ வரவேண்டும் பாரினிலே...!

ஒரு தாய் நாட்டில் உத்தம பிறப்பு நாங்கள்
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதற்கிணங்க
ஒற்றுமையைக் கட்டியெழுப்பி ஒளியாய் நாம் வாழ
பாலகனே நீ வர வேண்டும் பாரினிலே...!

இருப்பதோர் சொற்பகாலம் அதற்குள் இன்னல்களோ அதிகம்
இனிதான உள்ளங்கள் இனிமையாக வாழ
இறுமாப்பு வாழ்வுமாறி இறைவாழ்வு மிளிர
பாலகனே நீ வரவேண்டும் பாரினிலே...!

சாதிகள் வேறு சமயங்கள் வேறு ஆனால் சரீரம் ஒன்று
சான்றோர் காட்டிய வழியில் சரித்திரம் படைக்க
சாமியை எம் வாழ்வில் ஏற்று சாகா வரம்பெற
பாலகனே நீ வர வேண்டும் பாரினிலே...!

சண்டையும், சச்சரவும், சந்தேகமும் போக்கி
சமாதானம், சாந்தி, சமரசம் மூன்றையும் நிலைநிறுத்தி
சந்ததிகள் சமரச நல்லுறவை வளர்க்க
பாலகனே நீ வரவேண்டும் பாரினிலே...!

வாழும் மனிதம் புனிதமாக மாற
வாழ்வை வளமானதாகவும் வலி இன்றியும் மாற்ற
வலது காலைத் தூக்கி வலம் வர... வரவேற்கின்றோம்
பாலக இயேசுவே வரவேண்டும் பாரினிலே...!

*றோ. நெல்சன்*
*வஞ்சியன்குளம், வங்காலை.*

## இருளில் இருந்தவர்கள் பேரொளியைக் கண்டார்கள்

எங்கும் இருள் சூழ்ந்த அவலநிலை
நீர்க்குமிழிகளை நிஜமெனப் பிடித்து பிடித்து
ஏக்கமும் ஏமாற்றமும் அடைகிறான் மனிதன்
பொய்த் தோற்றங்களை எதார்த்தங்களென
எண்ணி எண்ணி ஏமாந்து ஏங்கித் தவிக்கிறான்.

கனவுகளை காரியங்களென கற்பனை செய்து செய்து
கதறிக் கண்ணீர் விடுகிறான்
மயக்கத்தில் மாயா ஜாலங்களை
உண்மையென ஓதி ஓதி மனத்திற்குள்ளே
போர்க்களத்தை உருவாக்குகிறான்.

சுயநலமே சுதந்திரம் பண்பாடு எனப் பாடிப்பாடி
சீரழிவு கலாச்சாரத்தின் சின்னம் ஆகிறான்
விடியலும் விடுதலையும் கண்களென
வீர முழக்கமிட்டு வெந்த புண்ணுக்கு
வேல் பாய்ச்சுகிறான்.

அற்ப சுகத்திற்கு அளவுக்குமேல் ஆசை வைத்து
வேதனையையும் களைப்பையும் விலைக்கு வாங்குகிறான்.
அறிவு – ஆற்றலின் இருப்பிடமென
ஆயுதங்களை எடுத்து எடுத்து
வன்முறைக்கும், தீவீரவாதத்திற்கும்
கோயில் கட்டிக் கும்பிடுகிறான்.

ஆட்சிப் பீடம் அருஞ்செயல் புரியவே என
பேசிப் பேசி அதிகார அரக்கன் ஆகிறான்.
வாஞ்சையோடு வாழவே பிறந்தேன் என நம்பி நம்பி
இதுதான் வாழ்வா? என வருந்தி வாடியே நிற்கிறான்.

இந்த இருளின் அழிவின் சூழலிலே
இயேசுவின் பிறப்பு ஒரு இனிய செய்தியா?
இருள் அகற்றி ஒளியேற்றும் ஞாயிறு இயேசு
சோக ரேகைகளை மாற்றி விடியலையும்
விடுதலையையும் அளித்து நம்பிக்கையூட்டும்
விடிவெள்ளியே நம் இயேசு பாலன்.

இருளில் உள்ள மக்களுக்கு
ஒளியைக் கொணர்ந்த இயேசு
எம் ஒவ்வொருவருடைய உள்ளங்களிலும்
இல்லங்களிலும் வந்து பிறந்திடுவாராக.

*அருட்சகோதரன் அன்ரனி ஜஸ்ரீன்*
*மடுக்கோவில், மடு.*

## எங்கே பிறப்பாய்...?

மானிடரை மீட்க வந்த பாலனே! - இன்று
யூதரின் கற்பனையைக் கலைத்து
அரசராக அல்ல – ஏழ்மையின்
சின்னக் குழந்தையாய்ப் பிறந்தாய் - இன்று
எங்கே, எதற்காக? பிறக்கப் போகின்றாய்...?

மாசுநிறை மண்ணில் உதித்தவனே!
மானிடரை மாண்டிடாது
மான்புறச் செய்திட மானிடர் மனங்களில்
நீ பிறக்க வேண்டும்!

கண்டிடும் இடமெல்லாம் கண்ணீரின் தடயங்கள்
கால் தடுமாறிப் போகும்
கலக்கமான வாழ்வுதனை கனிவாக்க
நீ பிறக்க வேண்டும்!

தேடித் தேடி நாடோடியாய் அலைந்து
நடு வீதிகளில் உயிரிழக்கும் உறவுகளை எண்ணி
உள்ளக்குமுறலுடன் உருக்குலைவோரை
உளநலம் வளப்படுத்திட நீ பிறக்க வேண்டும்!

பள்ளி சென்று பயிலத் துடிக்கும் பிஞ்சு சிறார்களுக்காய்
சுதந்திர உணர்வோடு
துடிப்புடன் செயற்பட ஏங்கும் இளைஞர்களுக்காய்
நீதிக்காக குரல் கொடுக்க உழைக்கும் உத்தமர்களுக்காய்
உண்மையினால் வேரூன்றி
அழகிய உலகை உருவாக்க ஆசிக்கும்
மானிடர் எம் அனைவருக்குமாய் மீண்டும்
இம்மண்ணில் நீ பிறந்திடுவாயா...?

*M.R. றெஜினா*
*கூமாங்குளம், வவுனியா*

## குழந்தை யேசுவின் வருகை

பாவம் போக்க பரமனே மனுவுருவில்.
பாவி எம்மை மீட்க தீவனத் தொட்டியில் யேசு.
பாதகர் மனம்மாறி அனைவரும் வாழ
பாலகன் யேசுவே அருள் புரிவாய்!



*ஏ. றி. இம்மானுவேல்*
*ஜேர்மனி*

# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS-VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

*"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"*

CARITAS-VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்: அதிவந்தனைக்குரிய ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

தேசிய சமாதானப் பிரிவு, வாழ்வுதயம், மன்னார்.

இயக்குனர்: அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார்

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk


## செட்டிகுளம் பகுதியில் வாழ்வுதய சமாதானக் கல்விச் செயற்பாடுகள்

வாழ்வுதய நிறுவனத்தினால் 31.10.2007 அன்று புதன்கிழமை காலை 9.30 – 1.30 மணி வரை செட்டிகுளம், இலுப்பைக்குளம் பங்குகளிற்குட்பட்ட 22 தொண்டர் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தமர்வு செட்டிகுளம் புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இக்கருத்தமர்வு *"முன்பள்ளிக் கற்பித்தலில் சமாதானம் என்னும் எண்ணக் கருவை குழந்தையின் மனப்பாங்கில் ஏற்படுத்தல்"* என்னும் தொனிப் - பொருளில் நடைபெற்றது.

இதில் பாகுபாடு ஏதும் இன்றி வாழ்வுதய ஆசிரியர்கள், தென் இந்தியத் திருச்சபை ஆசிரியர்கள், சத்திசாயி மன்ற ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

இந்நிகழ்வுக்கு வளவாளராக திரு. கணேசலிங்கம் (செட்டிகுளம். ம.வி. ஆசிரியர்) செயற்பட்டார். எல்லாவற்றிற்கும் மேலாக செட்டிகுளம் பங்குத்தந்தை அருட்பணி. செலஸ்ரின் மஸ்கிறிஞ்ஞு (அ.ம.தி) அடிகள் முழு உதவிகளையும் எமக்கு வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.






*வாழ்வுதயக் கல்விபெறும் மாணவர்களுக்கான பொது ஒன்றுகூடல், செட்டிகுளம் புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் சிறுவர் சமாதானக் குழுக்கள் மாணவர்கள் மத்தியில் உருவாக்கப்பட்டன.*

## உளவள ஆற்றுப்படுத்தலின் மூலம் குடும்பங்களில் சமாதானத்தினை கட்டியெழுப்புதல்

ஓலைத்தொடுவாய் கிராமத்தில் வாழ்வுதயத்தின் கீழ் கட்டியெழுப்பப்படும் கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கான செயலமர்வு *"உளவள ஆற்றுப்படுத்தலினூடாக குடும்பங்களில் சமாதானத்தினை கட்டியெழுப்புதல்"* எனும் தொனிப்பொருளில் 05.11.2007 அன்று ஓலைத்தொடுவாய் பொது மண்டபத்தில் நடைபெற்றது.

இச்செயலமர்வினை வாழ்வுதய தேசிய சமாதானப் பிரிவின் அனுசரணையூடாக உளவள ஆற்றுப்படுத்தல் எனும் வாழ்வுதயத்தின் மற்றுமொரு பிரிவு முன்னின்று நடத்தியது. இதற்கு வளவாளர்களாக அப்பிரிவின் இணைப்பாளர்களே செயற்பட்டனர். இணைப்பாளர் சஞ்சீவன் குலாஸ் தனது கருத்துப் பகிர்வில் *குடும்ப வாழ்க்கை முறை* எனும் கருவின்கீழ் பிள்ளை வளர்ப்பின் முக்கியம் பற்றியும் கருக்கலைப்பின் தீமை பற்றியும் பகிர்வினை முன்வைத்தார். அவர் கூறுகையில், குடும்பமே பிள்ளை வளர்ப்பின் முக்கிய தளம் எனக் கூறினார். அத்துடன் கருக்கலைப்பு கடவுளின் கட்டளைக்கு எதிரான செயல் எனவும் அது கொலைக்கு ஒப்பானது எனவும் கருக்கலைப்பு ஒரு பாவமான செயல்களில் ஒன்றாகும் எனவும் தனது கருத்தை ஆழமாக முன்வைத்தார்.

அடுத்து இணைப்பாளர் யூஜின் அவர்கள் உளவளம் பற்றியும் அதில் நெருக்கடியில் வாழும் குடும்பங்களை ஆற்றுப்படுத்தலின் மூலம் குடும்பங்களைச் செழிப்புறச் செய்யலாம் எனவும் தெரிவித்தார். அத்துடன் ஆழமான காயங்களிலிருந்து ஒவ்வொருவரையும் விடுவிப்பதற்கு தனது குழு அங்கத்தவர்களூடாக பங்குபற்றுனர்களின் உள்ளக்கிடக்கைகளை வெளிக்கொணர்ந்தார்.



*05.10.2007 அன்று ஓலைத்தொடுவாய் கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கான சமாதானக் கருத்தமர்வு*

இச்செயலமர்வானது பங்கெடுத்தவர்களுக்கு குடும்ப வாழ்வைப் பற்றிய தெளிவைக் கொடுத்ததுடன் அவர்களுக்கு புத்துணர்வினையும் ஏற்படுத்தியது. அவர்கள் தங்களது மனச் சுமைகளில் இருந்து விடுதலை பெற்றதாகவும் கருத்துத் தெரிவித்தனர்.

இவ் அமர்வின் ஆரம்பத்தில் சமாதானப் பிரிவின் இணைப்பாளர் C.M.A. ஜெயதாஸ் அவர்கள் விவிலியத்தின் அடிப்படையில் "கிறிஸ்துவே நம் சமாதானம்" எனும் எண்ணக்கருவை சிறப்பாக தெளிவுபடுத்தினார். இந்நிகழ்வினை மன்னார் பிரதேச ஊக்குவிப்பாளர் திரு. ஜோர்ஜ் குரூஸ் ஒழுங்குபடுத்தினார்.

## வாழ்வுதயச் சமாதானப் பிரிவின் கல்வி வளர்ச்சிப் பணிகள்

மன்னார் மறைமாவட்டத்தின் கல்வி வளர்ச்சிப் பணியில் வாழ்வுதயம் ஆற்றும் பணி மகத்தானது. இதன் அடிப்படையில் போரினாலும், ஏனைய காரணங்களினாலும் தாய் தந்தையை இழந்து கல்வியைத் தொடரமுடியாது அல்லல்படும் மாணவர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் பாரிய பணியினை மன்னார் மறைமாவட்டம் மாதந்தோறும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதன் பயனாக பாடசாலைகளில் மாத்திரமல்ல, பல்கலைக்கழகங்களிலும் கல்விக் கல்லூரிகளிலும் வறுமைக்கோட்டின் கீழ் கல்வியைத் தொடரும் மாணவர்களின் வாழ்வை மேம்படுத்தி மிகவும் கஸ்ரப் பிரதேசங்களில் இயங்கிவருகின்ற மன்/ குஞ்சுக்குளம் R.C.T.M.S, மன்/ கட்டையடம்பன் R.C.T.M.S, பாடசாலைகளில் இவ்வருடம் க.பொ.த.சா/பரீட்சை எழுதும் 33 மாணவர்களுக்கு துரித மீட்டல் பயிற்சி வகுப்புக்களை வாழ்வுதயத்தின் சமாதானப் பிரிவு ஐப்பசி மாதம் 25, 27, 28ம் திகதிகளில் மளுவராயர், கட்டையடம்பன் றொசாறியன் முன்பள்ளிக் கட்டிடத்தில் நடத்தியது.



மேற்படி இத்துரித மீட்டல் பயிற்சி நெறியினை ஆசிரியர்களை திரு. பச்சேக், திரு. வை. யோண்சன் திரு. பாஸ்கரன், திருமதி மேரி, திரு. பிறின்சிலி டயஸ் ஆகியோர் நடாத்தினார்.

இந்நிகழ்வில் வாழ்வுதய சமாதானப்பிரிவு இணைப்பாளர் திரு. C.M.A ஜெயதாஸ் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இப்பயிற்சிநெறிக்குரிய பூரண ஒத்துழைப்பினை பாடசாலை அதிபர்களான, திரு. A. கிறிஸ்ரி, திரு. இராஜரெட்ணம் ஆகியோர் வழங்கியிருந்தனர்.

அத்தோடு இப்பயிற்சிநெறிக்குரிய ஏற்பாடுகளை வாழ்வுதயத்தின் முருங்கன் பிரதேச கள ஊக்குவிப்பாளர் திரு. சி. சுஜீவன் அவர்கள் மேற்கொண்டிருந்தார்.

## கிராமிய வழிப்பூட்டல் குழுக்களுக்கான கருத்தமர்வு விபரம்




❖ பம்மைமடுப் பிரதேச கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கான கருத்தமர்வு வேப்பங்குளம் புனித சூசையப்பர் மண்டபத்தில் நடைபெற்றது.

❖ இதில் 10 குழு உறுப்பினர்கள் 55 பேர் கலந்துகொண்டனர். (குழுக்களின் கிராமப் பெயர்கள் பாரதிபுரம், தாஸ்கோட்டம்.)

❖ இவர்களுக்கு *முரண்பாடுகளை தீர்த்தல்* என்னும் தொனிப்பொருளில் கருத்தமர்வு இடம்பெற்றது.


❖ வளவாளராக வாழ்வுதய நிறுவனத்தின் சமாதானப் பிரிவு இணைப்பாளர் திரு. C.M. A. ஜெயதாஸ், மற்றும் பணியாளர் திரு. அ. ஜோர்ஜ் குரூஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். இயக்குனர் அவர்களும் கலந்துகொண்டு குழு உறுப்பினரின் தேவைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

❖ இந்நிகழ்ச்சி காலை 9.30 மணியளவில் ஆரம்பித்து பிற்பகல் 3.00 மணியுடன் நிறைவுற்றது.

## இளைஞர் கருத்தமர்வு

27.10.2007 அன்று வவுனியா மறைக்கோட்ட இளைஞர் யுவதிகளுக்கான *கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் ஒழுக்க விழுமியங்கள்* தொடர்பான கருத்தமர்வு, வவுனியா மறைக்கோட்ட இணைப்பாளர் செபமாலை அன்ரன் அடிகளாரின் தலைமையில் பம்பைமடுப் பங்கு புனித சூசையப்பர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் வளவாளராக வவுனியா அமலமரித் தியாகிகள் சபை முதல்வர் அருட்தந்தை போல் நட்சத்திரம் அவர்களும் மற்றும் தோட்டவெளி "திருப்பு முனை"யின் பணியாளர் திரு. பச்சேக் அவர்களும் கலந்துகொண்டனர். இக்கருத்தமர்வில் 65 இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.



*அருட்தந்தை போல் நட்சத்திரம் அ.ம.தி. அவர்கள் கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் ஒழுக்க விழுமியங்கள தொடர்பாக உரையாற்றுகின்றார்.*



கடந்த 17.10.2007 அன்று பம்மைமடுப் பிரதேச தாஸ்கோட்டம் குழந்தை இயேசு முன்பள்ளி விளையாட்டு விழாவின்போது பிடிக்கப்பட்ட படம் இது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வவுனியாக் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் கலந்துகொண்டார். பம்பைமடுப் பங்குத் தந்தை அருட்பணியாளர் அன்ரன் தலைமையில் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர் அதிவந்தனைக்குரிய ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர் அருட்தந்தை பெப்பி சோசை

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk


## கறிற்றாஸ் – வாழ்வுதயத்தின் துடிப்பான மனிதநேயப் பணிகளை வாழ்த்திப் பாராட்டி வரவேற்கின்றேன்

### குருமுதல்வர் அருட்தந்தை விக்ரர் சோசை அடிகளார்

அண்மையில் நானாட்டான் ஆலய வளாகத்தில் கறிற்றாஸ் வாழ்வுதயத்தினால் முசலிப்பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணக் கொடுப்பனவுப் பணி நடைபெற்றது.

இப்பணிகளை ஆரம்பிப்பதற்கு அங்கு வருகைதந்த மன்னார்க் குருமுதல்வர் அருட்பணி விக்ரர் சோசை அவர்கள் அங்கு நடைபெற்ற ஆரம்ப ஒன்றுகூடலிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், சர்வதேச கறிற்றாஸ் அமைப்பு உலகளாவிய ரீதியில் மனித நேயப் பணிகளை அர்ப்பணிப்புடன் ஆற்றுந்தொண்டு அமைப்பு ஆகும். இதில் ஒரு படியாகவே கறிற்றாஸ் ஸ்தாபனத்தால் இவ் உதவிக் கொடுப்பனவுகள் நெதர்லாந்து கறிற்றாசில் உள்ள தியாகம் நிறைந்த மக்களின் காணிக்கைகளில் இருந்து சேர்க்கப்பட்டுள்ளன. எனவே இப்பணம் மிகவும் பெறுமதியானது. நாம் இதனை வீண் விரயம் செய்யமுடியாது. எனவே கறிற்றாஸ் வாழ்வுதயத்தினால் பெற்றுக் கொள்ளும் இப்பொருட்களைச் சரியான முறையில் உங்களது தேவைகளுக்காகப் பயன்படுத்துங்கள். கறிற்றாஸ் வாழ்வுதயம் மன்னார் மறைமாவட்டத்தைப் பொறுத்த வரையில் கடந்த 26 வருடங்களுக்கு மேலாக தனது பணிகளை மக்களின் தேவை அறிந்து செயற்படுத்திவரும் அர்ப்பணிப்புள்ள ஒரு தொண்டு ஸ்தாபனம். எனவே இவ்வாறான சந்தர்ப்பத்தில் எமது முசலிப் பிரதேச மக்களின் இடப்பெயர்வுகளின் பின் பல்வேறுபட்ட மனித நேயப் பணிகளை ஆற்றியமைக்கு கறிற்றாஸ் வாழ்வுதயப் பணியாளர்களுக்கும் இந்நிவாரணக் கொடுப்பனவுகளோடு இணைந்து செயற்படும் அரிப்புப் பங்குத்தந்தை அருட்திரு. ஜெயபாலன் அடிகளாருக்கும் முசலிப்பிரதேச மக்கள் சார்பான நன்றிகளைக் கூறி நிற்கின்றேன் எனக் கூறி தனது உரையினை நிறைவுசெய்தார்.

இந்நிகழ்வில் கறிற்றாஸ் வாழ்வுதய நிறுவன இயக்குனர் அருட்தந்தை எஸ். ஜே. பெப்பி சோசை அடிகளார் உரையாற்றுகையில், இந் நிவாரணக்கொடுப்பனவுகள் முசலிப்பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கென கறிற்றாஸ் நெதர்லாந்து அமைப்பினால் தரப்பட்ட நிதியுதவியினூடாகவே தங்களுக்குத் தரப்படுகின்றது. இது ஒருபோதும் உங்கள் அதிரடி இடப்பெயர்வின் இழப்பிற்கு ஈடாகாது. இறைவன் இன்றும் உங்களோடு இருக்கிறார் என்பதையே காட்டுகின்றது. இதனை உரிய முறையில் பயன்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் - கொள்கின்றேன். அத்தோடு புரிந்துணர்வோடு



செயற்பட்டு, ஒருவருக்கொருவர் உதவி புரிந்து, இடம்பெயர்ந்தபோதும் ஒற்றுமையுடன், செயற்படுமாறும் கூறி, இவ்வாறான நிவாரணப் பணிகளுக்கு தங்களை அர்ப்பணித்து செயற்படும் கறிற்றாஸ் வாழ்வுதயப் பணியாளர்களுக்கும் தனது நன்றிகளைக் கூறினார். அத்தோடு இந்நிகழ்வுக்கு வருகை தந்து ஒத்துழைப்பு நல்கிய மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை விக்ரர் சோசை அடிகளாருக்கும், அரிப்பு பங்குத்தந்தை ஜெயபாலன் அடிகளாருக்கும் நன்றிகளைக் கூறி தனது உரையினை நிறைவுசெய்தார்.

பின்னர் முசலிப்பிரதேசத்தில் இருந்து வந்த ஒரு தொகுதி மக்களாகிய 591 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

## என்னைப் பார்த்து அனைவரும் மகிழ்கிறார்கள்

### எம். ஐ. பர்ஷான்

கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் உதவிக்கரப் பிரிவினால் பயன்பெற்று கால் குணமடைந்த பயனாளியே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தனது நன்றி உணர்வை வெளிப்படுத்துகையில், மன்னார் உப்புக்குளத்தைப் பிறப்பிடமாக கொண்ட எம். ஐ. பர்ஷானாகிய எனக்கு ஆறு வயதிலிருந்தே என்னுடைய ஒற்றைக்கால் சுகயீனமுற்று இருந்தது. இந்நேரத்தில் நான் மன்னார் வாழ்வுதயத் தொண்டு நிறுவன இயக்குனரை அணுகினேன். அவர் என்னை அன்போடு வரவேற்று வாழ்வுதயத்தின் உதவிக்கரப்-பணியாளர்களிடம் எனது குறைகளைக் கூறி, எனது கால் சுகமடைவதற்கேற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளும்படி கூறி என்னை உதவிக்கரப் பிரிவுக்கு அனுப்பினார்.

நான் உதவிக்கரப் பிரிவு அலுவலகர்கள் மற்றும் தொழில் நுட்பவியலாளர்களால் அன்பாக வரவேற்கப்பட்டேன். பின்னர் அவர்கள் எனக்கு இயன் மருத்துவரினால் இயன்மருத்துவத்தை அளித்தார்கள்.

இதன்பின் எனது கால் சுகமடைவதற்கேற்ற இடைவிடாப் பயிற்சிகளும், ஆலோசனைகளும், இயன்மருத்துவமும் வழங்கப்பட்ட பின்னர் சிறிய நாட்களுக்குள்ளேயே எனது காலில் மாற்றம் தெரிந்தது.

இதேவேளை எனக்குப் போலியோ சப்பாத்து உகந்ததாக இருக்காதபடியால் செயற்கைகால் பொருத்தப்பட்டுள்ளது. தற்பொழுது ஏனைய மனிதர்களைப்போல் சிறப்பாக நடப்பதைப் பார்த்து எனது மனைவி, பிள்ளைகள், சொந்தபந்தம் அனைவரும் எல்லையில்லா மகிழ்ச்சி அடைகின்றார்கள்.

இப்படியானதொரு பணியை சிறப்பாக முன்னெடுத்து வரும் கறிற்றாஸ் - வாழ்வுதயத்திற்கும், உதவிக்கரப் பிரிவு இணைப்பாளர். திரு. ஜோண் மற்றும் அலுவலர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள், மற்றும் இயன் மருத்துவர் திரு. றாஜ்குமார் அவர்களுக்கும் என் உளம்நிறைந்த நன்றிகளைக் கூறி கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் பணிகள் மென்மேலும் சிறப்புற்று விளங்கி தனது இலக்கை அடைய வாழ்த்துகின்றேன் என்றார்.

## வவுனியாவில் கிடுகு விநியோகம்

கறிற்றாஸ் வாழ்வுதயத்தினால் வவுனியா மறைக்கோட்டத்தின் கோமரசன்குளம் பம்பைமடு பங்கிற்குட்பட்ட ஏற்கனவே வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு தற்காலிகக் குடிசைகளுக்கான கிடுகுகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் வெவ்வேறு இடங்களில் இருந்து ஏற்கனவே இடம்பெயர்ந்து தற்காலிக குடிசைகளை அமைத்துக்கொண்டு குடியிருந்தவர்கள். குறிப்பாக ஆச்சிபுரம், யேசுபுரம், கோமரசன்குளம், சிதம்பரபுரம் தாஸ்கோட்டம், பாரதிபுரம் ஆகிய கிராமங்களில் குடியிருந்தவர்களுக்கே இவ் உதவி வழங்கப்பட்டது.

இவ் உதவிகளைப் பெறுவதற்கு இம்மக்கள் வாழ்வுதயத்திடம் விண்ணப்பித்ததற்கமைய கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்பணி. எஸ். ஜே. பெப்பி சோசை அடிகளார் அக்கிராமங்களுக்கு விஜயம்செய்து மக்களின் உண்மைத்தேவையினை அறிந்ததன் பின்னரே இம்மக்களுக்கான இந்த உதவிகள் வழங்கப்பட்டன. கோமரசன்குளம் பங்கிற்கு மட்டும் 139 குடும்பங்களுக்கு 1169 கிடுகுக் கட்டுகள் வழங்கப்பட்டன.

இவற்றைவிட பம்மைமடு பங்குத் தளத்திற்குள் உட்பட்ட தாஸ்கோட்டம், பாரதிபுரம் கிராமங்களைச் சேர்ந்த 49 குடும்பங்களுக்கும் 635 கிடுகுக் கட்டுகள் வாழ்வுதயத்தால் வழங்கப்பட்டுள்ளன. இக்கிடுகுகள் வழங்கும் பணியில் கோமரசன்குளம் பங்குத்தந்தை. அருட்பணி சகாயநாதன் அடிகளார் அவர்களும்,



அப்பிரதேச கிராம அதிகாரி திரு. நந்தகோபாலன் அவர்களும் மற்றும் வவுனியா மாவட்ட I.C.R.C பதில் தலைவர் திரு. தனபாலசிங்கம் அவர்களும் ஈடுபட்டு தமது ஒத்துழைப்பை வழங்கினர்.

## புனர்வாழ்வு புனரமைப்புப் பிரிவின் கடந்த மாத மனித நேயப்பணிகள்

கடந்த மாதம் கறிற்றாஸ் வாழ்வுதயத்தினால் ஆற்றப்பட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயற்பாடுகள் பரவலாக இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் கொண்டுசெல்லப்பட்டன.

குறிப்பாக முசலிப் பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களில் ஒரு தொகுதி மக்களாகிய 591 குடும்பங்களுக்கு நானாட்டான் மரியன்னை ஆலய வளாகத்தில் அத்தியாவசிய வீட்டுப் பாவனைப் பொருட்கள், ஆடைகள் வழங்கப்பட்டன.

வழங்கப்பட்ட பொருட்களின் விபரம் வருமாறு. பெற்சீற் - 821, துணிவகை – 1764மீற், சாறம் - 560, சேட் - 560, ஆண்கள் உள்ளாடை – 525, பாய் - 700, பிளாஸ்ரிக் குடம் - 417 இலாம்பு – 703, அலுமினியப் பானை – 584, பெரிய அலுமினியச் சட்டி – 540, சிறிய அலுமினியச் சட்டி – 610, பெரிய கரண்டி – 512, நடுத்தரக்கரண்டி – 572, சிறிய கரண்டி – 572 போன்றவைகள் கடந்த மாதம் நானாட்டானில் மட்டும் வழங்கப்பட்டன.

இவற்றைவிட முசலிப்பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து பொன்தீவுகண்டலில் வசிக்கும் குடும்பங்களுக்கு 460 கட்டு கிடுகும், 46 தற்காலிக வீடுகளுக்கான இரும்புக் கம்பித் தொகுதிகளும் அவ்வாறே செட்டியார் மகன் கட்டையடம்பனில் இருந்து இடம்பெயர்ந்து இரட்டைக்குளம் கிராமத்தில் தங்கியுள்ள 31 குடும்பங்களுக்கும் 31 தற்காலிக வீடுகளுக்கான இரும்புக் கம்பித் தொகுதிகளும் 310 கிடுகுக் கட்டுகளும் வழங்கப்பட்டன.

அத்தோடு முசலிப்பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்து மன்னார் நகரில் தங்கியுள்ள 83 குடும்பங்களில் 13 குடும்பங்களுக்கு 130 கட்டு கிடுகுகளும் 13 தற்காலிக வீடுகளுக்குரிய இரும்புக் கம்பித் தொகுதிகளும் வழங்கப்படவுள்ளன.

இவற்றைவிட வைத்திய உதவிகளாக தாராபுரம், தோட்டவெளி, பள்ளிமுனை, வங்காலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 11 நபர்களுக்கு வைத்திய உதவி வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு 9 நபர்களுக்கு வெளிமாவட்டங்களுக்கு வைத்தியத்திற்குச் சென்று திரும்புவதற்கான பிரயாணச் செலவுக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு இடம்பெயர்ந்து வந்துள்ள 5 குடும்பங்களின் மரண வீட்டுச் செலவுக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் நீர்கொழும்பு புனித அன்னம்மாள் ஆலய பங்குத்தந்தை அருட்பணி றெறன்ஸ் அவர்கள் சேகரித்துத்தந்த உணவுப்பொருட்களும் வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்த 30 குடும்பங்களிற்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.



## கிராமிய விழிப்புட்டல் பிரிவிலிருந்து வெளிநாடு சென்று பயிற்சிகளைப் பெற்ற பணியாளர்கள்

கறிற்றாஸ் சிறிலங்கா SEDEC ன் ஏற்பாட்டில் கறிற்றாஸ் நிறுவனத்தை வளர்ச்சியடையச் செய்யும் நோக்கில் அண்மையில் மூவர் வெளி நாடுகளுக்குச் சென்று பயிற்சிகளைப் பெற்றுத் திரும்பியுள்ளனர்.

கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் கிராமிய விழிப்பூட்டல் பிரிவின் இணைப்பாளர் திரு. S. அன்ரன் ராஜகாரியர் (ராஜன்) அவர்களும், வாழ்வுதய வவுனியாப் பிரதேச வெளிக்கள அலுவலகர் திரு. A. விமலநாதன் அவர்களும் அனர்த்த முகாமைத்துவம் மற்றும் அனர்த்தம் ஏற்படும்போது மக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள எவ்வாறு தயார்நிலையில் இருக்கவேண்டும் என்பது தொடர்பான பயிற்சிகளை ஒருவார காலம் இந்தியா ஆந்திரா மாநிலத்தின் நெல்லூர் மறைமாவட்டத்தில் பெற்றனர்.

மன்னார் இசைமாலைத்தாழ்வு கிராமத்தில் வாழ்வுதயக் கிராமிய விழிப்பூட்டல் குழுவின் தலைவராகப் பணியாற்றும் திருமதி எட்விஸ் பாவனி அவர்கள் ஒருவார காலம் வளமான விவசாயம் மற்றும் இயற்கைப் பசளையின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பயிர்வகைகள் தொடர்பான பயிற்சிகளை பிலிப்பைன்ஸ் நாட்டிற்குச் சென்று பெற்றுள்ளார்.

அத்தோடு இயற்கைப் பசளை தயாரிக்கும் முறைகள் பற்றியும், இயற்கைப் பசளை கொண்டு பயிர் செய்கை பண்ணப்படும் பிரதேசங்களையும் நேரடியாக பார்வை - யிட்டுள்ளார். இப்பயிற்சியானது மிகவும் பயனுள்ளதொன்றாக அமைந்தது.

அடுத்த ஆண்டில் முன்னெடுக்கப்படும் கிராமிய விழிப்பூட்டல் செயற்பாடுகளில் மேற்படி பயிற்சிகளைப்பெற்ற பணியாளர்கள் தமது பயிற்சியின் அனுபவங்கள் மற்றும் இவை தொடர்பான பயிற்சிகளை கிராமியக் குழுக்களுக்கு வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் தமது பயிற்சியைப் பெற தம்மை அனுப்பிவைத்த வாழ்வுதய இயக்குனருக்கு இப்பணியாளர்கள் தமது உளம் கனிந்த நன்றிகளைக் கூறிநிற்கின்றார்கள்.



செய்தித் தொகுப்பு :
**எஸ். அன்ரன் ராஜகாரியர் (ராஜன்)**
இணைப்பாளர், கிராமிய விழிப்பூட்டல் பிரிவு, வாழ்வுதயம், மன்னார்

# பழைய கேள்விகளும் புதிய பதில்களும்

**அடிப்படைவாத பெந்தக்கோஸ்தே சபைச் சகோதரர்களின் கேள்விகளுக்கு விவிலிய அடிப்படையில் தெளிவான, அழுத்தமான பதில்களைத் தாங்கி இத்தொடர் வருகிறது.**

## தொடர் – 04

**தருவது தஞ்சை டோமி**

**ூ 'மரியா வணக்கம்' விவிலியத்திற்கும், இறை விருப்பத்திற்கும் முரண்பட்டது என்றும் விவிலியத்தில் 'பெண்' என்று வருவதையெல்லாம் மரியாவைக் குறிப்பதாக் கூறி கத்தோலிக்கப் போதகர்கள் உண்மைக்குப் புறம்பாகப் போதிக்கின்றனர் என்று பிரிந்துபோன சபையினர் கூறுகின்றனர். நீங்கள் என்ன பதில் கூறுகின்றீர்கள்? - செல்வி**

அன்புச் சகோதரிக்கு, நீயும் உங்கள் தகப்பனும், உங்கள் தகப்பனிற்குத் தகப்பனும் அறிந்துகொள்ளாத ஞானத்தை உங்களுக்கு எந்த கொட்டகைக் கோயில் பெந்தகோஸ்துக்காரர் கற்றுத் தந்தார்? ஒரு கொள்கைக்கு, ஒரு கடவுளுக்கு, ஒரு திருச்சபைக்கு பிரமாணிக்கமற்றுப்போன, பிரிந்துபோன, கிடையைவிட்டுத் திருட்டுத்தனமாக வெளியே திமிறிக்கொண்டு போன எந்த மந்தை ஆட்டால் மனமாறிப் போனீர்கள்? செல்வியம்மா! உன் தாயை நான் 'செல்வியின் அம்மா' என்று அழைக்கும்போது, இயேசு இறைவனின் தாய் மரியாவை 'இறைவனின் தாய்' என்று அழைக்கக்கூடாதா? கடவுளின் தூதரே கன்னி மரியாவை "அருள் நிறைந்தவரே வாழ்க!" (லூக் 1:28) என்று அழைக்கும்போது அவரை 'இறைவனின் தாயே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்' என்று கத்தோலிக்கர்கள் அழைப்பது விவிலியத்திற்கு முரண்பட்டதா?

அன்று இயேசுவின் போதனையையும், புதுமையையும் கண்ட மக்கள் "உம்மைத் தாங்கிய வயிறும், பாலுண்ட கொங்கைகளும் பேறுபெற்றவை" என்று இஸ்ரேயல் மக்கள் மரியாவை புகழ்ந்துள்ளபோது கத்தோலிக்கர்கள் 'மரியே வாழ்க!' என்று வாழ்த்துவது மட்டும் விவிலியத்திற்கு முரண்பட்டதா?

'மரியா வணக்கம்' விவிலியத்திற்கு முரண்பட்டதா, இல்லை மரியா வணக்கத்தைக் குறைகூறும் நீங்களும், உங்கள் பெந்தகோஸ்தே கொட்டகைக் கோயில் கூட்டத்தாரும் விவிலியத்திற்கு முரண்பட்டவர்களா? இறைவார்த்தையைக் கொண்டே இறைவனைச் சோதித்த சாத்தானுக்குச் சமமாக கத்தோலிக்கர்களைச் சோதித்து தங்கள் 'பாச வலையில்' வீழ்த்துபவர்களே கொஞ்சம் கேளுங்கள்.

### *விண்ணக அன்னையை போற்றத் தூண்டும் விவிலியச் சான்றுகள்*

- விப 21:17ல் "தன் தந்தையையோ, தாயையோ சபிப்பவன் சாகவே சாவான்" என்றும் பத்துக் கட்டளைகளில் நான்காவது கட்டளையாக "தாய், தந்தையைப் போற்று" என்று நமது தாய் தந்தையர்களைப் போற்றும்படி கூறிய நம் தேவன், தம் அன்புத் திருமகனை ஈன்றெடுத்த தாயாம் மரியாவை போற்றிப் புகழ வேண்டாம் என்பாரா? "தன் ...தாயையே சபிப்பவன் சாகவே சாவான்" என்று கூறிய தேவன் தன் மகனை ஈன்றெடுத்த தாயைப் புகழாதவனையும் சபிப்பவனையும் 'வாழ்வான்' என்றா கூறுவார்?

- தொநூ 3:12ல் "உனக்கும்... அவள் உன் தலையை நசுக்குவாள்... முயலுவாய்" இங்கு தனது மகன் வழியாக பாவமாகிய பாம்பின் தலையை மரியா நசுக்குவார் என்பதே விவிலிய முன்அறிவிப்பு. இல்லை, இங்கே 'அவர் என்பது ஏவாளைக் குறிக்கிறது என்று கூறும் பெந்தகோஸ்து சபையினரே...சாத்தானின் சொல்லை நம்பி கடவுளுக்கு கீழ்படியாத ஏவாளால் எப்படி பாவத்தின் தலைவனான பாம்பின் தலையை நசுக்க முடியும்? புரியவில்லையா உங்கள் புத்திக்கு.

- எசா 7:14ல் "இதோ கன்னிப் பெண் கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவர் இம்மானுவேல் என்னும் பெயர் பெறுவார்" இது இயேசு என்ற மெசியா கன்னி மரியா வழியாகப் பிறக்கப் போவதை 600 ஆண்டுகளுக்கு முன்பே எசாயா இறைவாக்கினர் முன்னறிவித்துள்ளார் என்று குழந்தைகள்கூட அறியும். ஆனால், உங்களுக்கு மட்டும் புரிவதில்லையே ஏன்?

- சீராக் 3:18இல் "தன் தாயை மனநோகச் செய்கிறவன் கடவுளால் சபிக்கப்பட்டவன்" என்று கூறப்பட்டுள்ளதே. பெற்ற தாயை மனநோகச் செய்பவனே சபிக்கப்பட்டவன் என்றால், கிறிஸ்துவின் தாய், நம் தாய் மரியாவை மனநோகச் செய்பவன் ஆசீர்வதிக்கப்பட்டவனா?

- நீதி 15:20இல் "ஞானமுள்ள மகன் தன் தந்தையை மகிழ்விக்கிறான். மதிகெட்ட மனிதன் தன் தாயை இழக்கிறான்" என்று கூறப்பட்டுள்ளதே. பெற்ற தாயை இகழ்கின்றவன் மதிகெட்டவன் என்றால், இயேசுவின் தாயை இகழும் மானிட ஜென்மங்கள் மட்டும் அறிவாளிகளா?

- திரியேக சர்வேசுரனே நம் அன்னை மரியாவை புகழ்ந்து போற்றியுள்ளபோது மரியாவின் வணக்கத்தைத் தடுத்து நிறுத்தத் தூண்டும் உங்கள் தேவன் யார்?

*தந்தையானவர்* - கபிரியேல் தூதர் மரியாவின் இல்லம் சென்று "அருள் நிறைந்தவரே வாழ்க! ஆண்டவர் உம்முடனே!" (லூக் 1:28) என்று வாழ்த்தினார். இது வானதூதருடைய வாழ்த்தல்ல. வானகத் தந்தையே வானதூதர் வழியாகத் தந்த வாழ்த்து. வானதூதரோ, இறைவாக்கினரோ தங்களது செய்தியை அறிவிப்பதில்லை. இறைவனின் பெயரால், இறைவன் விரும்புவதை அறிவிப்பார்கள். கடவுளின் தூதர் கடவுளின் கட்டளையின் பேரில் அன்று அன்னை மரியாவை வாழ்த்தி இருக்கமாட்டார். தந்தையானவரே 'அருள் நிறைந்தவரே' என்று வாழ்த்தும்போது, பெந்தக்கோஸ்துக்காரர்கள் மரியாவை புகழாமல் இருக்கும்படி செய்யும் சாத்தானின் சக்தியைத்தான் புரிந்துகொள்ள முடியவில்லை.

*மகன் இயேசு* – (யோவா 2:1-12) 'தன் தாயை மதித்தார்' 'பெருமைப்படுத்தினார்' என்பதை 'தமது நேரம் இன்னும் வரவில்லை' என்றபோதிலும் தாயின் பரிந்துரையை ஏற்று கானாவூரில் முதல் புதுமை செய்தார். இயேசு தம் தாய் மரியாவை பெருமைப்படுத்தியுள்ளபோது 'மரியாவை வணங்க வேண்டாம்' என்று கூற இவ்வுலகில் யாருக்கு (சாத்தானைத் தவிர) அதிகாரம் உண்டு?



*தூய ஆவியானவர்* - மரியா எலிசபெத்தின் இல்லம் சென்று எலிசபெத்தை வாழ்த்தியபொழுது எலிசபெத்து தூய ஆவியால் நிரப்பப்பெற்று 'பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே ..." என்று உரக்கக் கூவினார் என்று லூக்.1:41-45ல் வாசிக்கின்றோம். மரியன்னையைப் போற்றும்படி தூண்டியது அவரிடம் நிரம்பியிருந்த தூய ஆவியானவரே என்று அறிந்தும், மரியாவைப் புகழ்வதும், வணங்குவதும் தவறு என்று கூறும் பெந்தகோஸ்தே கோட்டைக் கோயில்களில் ஆவி நிரம்பியுள்ளதாக எப்படி நம்புவது?

உரோ 11:29இல் "கடவுள் தாம் கொடுத்த வரங்களையும், விடுத்த அழைப்பையும் திருப்பி வாங்கிக்கொள்வதில்லை" என்று கூறப்பட்டதிலிருந்து இறைவனின் தாயாகும் வரத்தை மரியாவுக்கு அளித்த இறைவன் இயேசுவைப் பெற்றெடுத்தவுடன் திரும்பப் பெற்றுக்கொண்டார் என்று எப்படிக் கூறமுடியும்? திரியேக சர்வேசுரன் தாமே அன்னை மரியாவை, "இதோ இந்நாள் முதல் எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே!" (லூக் 1:48) என்று அன்னை வழியாகவே் கூறியிருக்க கிறிஸ்துவை பெற்றெடுத்ததுடன் அவரது கடமை முடிந்துவிட்டதென்று கூறும் பெந்தகோஸ்தே சபையினர் திரியேக சர்வேசுரனைக் காட்டிலும் உயர்ந்தவர்களே!.

ஆகவேதான், புனித பொனவெந்தர் "கடவுள் நாம் காண்கின்ற இவ்வுலகைவிட பன்மடங்கு மேலானவைகளைப் படைக்க முடியும்? மேலான மோட்சத்தையும் உருவாக்க முடியும்? ஆனால், நம் தேவதாயைவிட மேலான ஒரு தாயைப் படைப்பது அவரால் கூடாது" என்று கூறியுள்ளார். இதை உணர்ந்தே புனித அகுஸ்தினார் மரியாவைப் பார்த்து, "உம்மை உண்டாக்கினவர் உம்மிடத்தில் உண்டாக்கப்பட்டவர்" என்று புகழ்ந்து கூறியுள்ளார். இப்படி விவிலியமும், திரியேக சர்வேசுரனும் மரியாவின் வணக்கத்திற்கு ஆதரவாகவும், ஆதாரமாகவும் இருக்கும்போது, மரியா வணக்கத்தை கடைப்பிடித்து வளர்த்துவரும் கத்தோலிக்கர்களைக் குறைகூறும் பெந்தகோஸ்தே சபையினர் விவிலியத்திற்கும், இறைத்திருவுளத்திற்கும் முரண்பட்டவர்களா இல்லை கத்தோலிக்கர்களா? ஞானமுள்ளவன் உண்மையை உணர்வான்!

*(கேள்வி பதில் தொடரும்...)*

# பொதுநிலையினர் வாழ்வில் இறைவார்த்தை

## எதிர்வரும் இறைவார்த்தை ஆண்டையொட்டிய சிந்தனைக் கட்டுரைத் தொடர் – 1

**– திரு. மாட்டின் டயஸ், [பேசாலை] இளைப்பாறிய கோட்டக் கல்விப் பணிப்பாளர் –**

மன்னார் மறைமாவட்டத்தின் அருட்பணித் திட்டமிடல் மகாநாடு கார்த்திகைத் திங்கள் 23ம்,24ம்,25ம் திகதிகளில் மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் மன்னார் மறைவட்ட மேதகு ஆயர் அவர்களின் வழிநடத்தலில் நடைபெற்றது.

அம்மகாநாட்டில் அடுத்த ஆண்டுக்கான தொனிப்பொருளாக (2008) "இறைவார்த்தை" (WORD OF GOD) அறிவிக்கப்பட்டது. இது மன்னார் மறைமாவட்டத்துக்கு மட்டுமான தொனிப்பொருள் அல்ல. மாறாக அகில உலகக் கத்தோலிக்க உலகத்துக்குமான தொனிப்பொருள். 2008ம் ஆண்டில் இறைவார்த்தையை அதிகமதிகம் அறிய, வாழ அழைக்கப்படுகின்றோம்.

இறைவார்த்தை என்றதும் நம் எண்ணத்தில் எழுவது திரு விவிலியமே. ***வாழ்வாங்கு வாழ்தல்*** என்ற தமிழ்த் தொடர் "எப்படி நாம் வாழவேண்டுமோ – வாழ்வது தர்மமோ – அப்படி நாம் வாழ்தலைக் குறிக்கும். கத்தோலிக்க உலகம் வாழ்வாங்கு வாழ்தலுக்கு மேல்வரிச் சட்டமாகக் கொள்ளவேண்டியது இறைவார்த்தையைத்தான் - திருவிவிலியத்தைத்தான்.

நமது மறைமாவட்டத்தில் ***வீட்டுக்கொரு விவிலியம் உண்டு*** என எண்ணுகின்றேன். அப்படி இல்லாத இல்லங்கள் மிகச் சொற்பமாக விரல்விட்டு எண்ணக் கூடியவைகளாகவே இருக்கும். நாம் வீட்டில் ஒரு வேதாகமத்தை வைத்துக்கொள்வது நல்ல செயலே. வைத்துக்கொள்வது மட்டும் அதனோடு வாழ்வதாகி விடுமா, வீட்டில் இருக்கும் விவிலியத்தை எத்தனைபேர் எடுத்துப் படிக்கின்றோம்?

காலையில் எழுந்தவுடன் நம்மில் பலருக்கு ஒரு கப் கோப்பி வேண்டும். அது கிடைக்காவிட்டால் அந்த நாளே சப்பென்றிருக்கும் என்று அலுத்துக்கொள்வோம். விவிலியம் படிக்காத நாள் அது வாழ்நாள் அல்ல - வீண் நாள் என்ற உணர்வு ஏற்படுகின்றதா? நாளுக்கொரு அதிகாரமாவது படிக்க வேண்டும் என்ற தாகம் ஏற்படுகின்றதா? விவிலியத்தை வாசித்தால் மட்டும் போதுமா? ஒரு தினச் செய்தியை வாசிப்பதற்கும் கதையைக் கட்டுரையை வாசிப்பதற்கும் விவிலியத்தை வாசிப்பதற்கும் வித்தியாசம் வேண்டாமா? வாசித்ததைச் சிந்திக்க வேண்டும். இதற்கு வார்த்தையானவரின் துணை வேண்டும். அதைக் கேட்டுப் பெற்றுக்கொண்டால் அவரின் வெளிச்சத்திலே இறையன்பை உணர்வுபூர்வமாக உள்வாங்கிக் கொள்வோம். அப்போது இறைவார்த்தையை வாழ்தல் இலகுவாகிவிடும்.


இங்கு நமக்கு ஒரு சவாலுண்டு. இந்தச் சவாலைப் பற்றித்தான் யேசு விதை விதைப்பவன் உவமையில் கூறுகின்றார். உள்ளத்தின் ஈரமின்மையும், பறவைகளும், முட்செடிகளும் சவாலாக அமையும். இங்கு வார்த்தையின் துணையே வலுவுள்ளதாகத் துணை செய்ய முடியும். இறைவார்த்தையை நாம் உறுதியாகப் பற்றிக்கொண்டு வாழத்தொடங்கினால் நமக்குக் கைமேற்கிடைக்கும் பயன்கள் -

மன அமைதி – மகிழ்வு
இல்ல அமைதி – மகிழ்வு
சமூக அமைதி – மகிழ்வு.

இதற்கு அடுத்த நிலைதான் நமது இறையனுபவத்தை அயலவருக்கு எடுத்துச் செல்லல். இங்குதான் நம் பங்குகளில் இயங்கும் இறைவார்த்தைக் குழுக்கள் வருகின்றன. பல பங்குகளில் இறைவார்த்தையை வாசிக்கின்ற - பகிர்ந்துகொள்கின்ற - இறை வார்த்தை வழிபாடுகளை நடாத்துகின்ற - நோயாளருக்காகச் செபிக்கின்ற குழுக்கள் சிறப்பாக இயங்குகின்றன. இதைப்பற்றி நாம் மகிழலாம். இக்குழுக்கள் இறைவார்த்தையை வாசிப்பதோடு – வார்த்தையை மற்றவர்களுடன் பகிர்தலோடு மட்டும் எல்லைப்படுத்திக்கொண்டால் அது இறையனுபவத்தைப் பகிர்தலாக அமையாது. இறைவார்த்தையைப் பகிர்தலுக்கும் இறையனுபவத்தைப் பகிர்தலுக்கும் நிறையவே வித்தியாசம் உண்டு. இறைப்பிரசன்னம் நம் வாழ்வில் நாம் விரும்பாவிட்டாலும் நம்மோடு இருந்துகொண்டே இருக்கின்றது. அதை உணரும்போதுதான் இறை அனுபவத்தைச் சுவைக்கின்றோம்.

இறைவார்த்தையை வரசித்து – தியானித்து ஏற்றுக்கொண்டு வாழ்ந்து சுவைத்த அனுபவத்தைப் பிறரோடு பகிர்தலே இறைவார்த்தையை வாழ்வதாக அமையும். இதன் மூலம் பிறரையும் இறை அனுபவத்துக்குள் அழைத்துச் செல்லும் இறைவனின் கரங்களாக நாம் மாறமுடியும். இங்கு தரப்படுகின்ற வரிவடிவம் இதைச் சிறப்பாக விளக்கக்கூடும். இறைவார்த்தை நமக்குத் திருவிலியத்தை வாசிப்பதன் மூலம் மட்டுமல்ல – மறையுரைகள் தியானங்கள் மறையறிவு நூல்கள் ஆன்மீகக் கலந்துரையாடல் மூலமும் எமக்கு வழங்கப்படுகின்றன. இவையும் எம்மை இறைவாழ்வுக்குள் வழிநடாத்தும்.





# கிறிஸ்மஸ் கட்டுரைகள்

## கண்ணீரே வாழ்வான எமக்கு கிறிஸ்மஸ் தேவைதானா?

அருட்சகோதரி அ.றஜனி,
திருச்சிலுவை கன்னியர் மடம்,
உக்குழான்குளம், வவுனியா.

குண்டுவெடிப்புக்களும் போரின் தாக்கங்களும் ஒருபுறம் மலிந்திருக்கின்றன. மறுபுறம் மனித உயிர்கள் நாளாந்தம் வீதியோரங்களில் ஊசலாடிக்கொண்டிருக்கின்றன. ஒரு நாளைக்கு ஒருவர் இறக்கவில்லை என்றால் அதுவே பெரிய செய்தியாக இருக்கின்றது. ஆட்கடத்தல்களும், கற்பழிப்புகளும், கொலைமிரட்டல்களும், பணப்பறிப்புக்களும், தினமும் அச்சத்தை உண்டுபண்ணுகின்றன. பொருளாதாரத் தடை, பட்டினி, பசி, அடிப்படை மருத்துவ வசதிகள்கூட இல்லை என்று கையேந்தி மாந்தர்கள் கண்ணீருடன் காத்திருக்கின்றனர். சமாதானம் வராதா? A–9 பாதை திறக்கப்படாதா? இந்தக் கெடுபிடிகள் எல்லாம் இல்லாமல் போகாதா? அகதி வாழ்க்கையும், இடப்பெயர்வுகளும் அடியோடு அற்றுப்போகாதா? என்று தினமும் மனித மனங்கள் சஞ்சரித்திருக்க, அன்பிழந்து உறவிழந்து, உயிரிழந்து, உறைவிடமிழந்து, மனித மாண்பிழந்து, அமைதியிழந்து வாழ்ந்துகொண்டிருக்கின்ற இந்த வேளையிலேதான் இந்த வருடமும் உலகம்பூராகவும் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட மக்கள் ஆயத்தமாகிக்கொண்டிருக்கின்றனர்.

இந்தப் பதட்டம் நிறைந்த பரிதவிக்கின்ற ஏக்கம் நிறைந்த தருணத்திலே எமக்கோர் கிறிஸ்மஸ் தேவைதானா? இயேசு பாலகனின் பிறப்பை இந்த அவலங்கள் மத்தியிலும், எங்களால் ஏற்றுக்கொள்ளத்தான் முடியுமா? அவரது பிறப்பினால் விழைகின்ற விழுமியங்கள்தான் என்ன? போன்ற பல்வேறு கேள்விக்கணைகளும் அங்கலாய்ப்புக்களும் எங்கள் மத்தியிலே வந்துபோகலாம்.

ஆனால் இவ்வாறான மனித வாழ்வின் சூழ்நிலைகளுக்குள்ளே அகதிகளாக, அவலைகளாகக் கண்ணீரே வாழ்வாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற நாங்கள்தான் முதலில் உள்ளம் திறந்து இறைமகன் இயேசுவின் பிறப்பு விழாவைக் கொண்டாட வேண்டும் என்று சொன்னால் அது மிகையாகாது.

ஏன் என்றால் அன்பிழந்து பாசமிழந்து மற்றவர்கள் பற்றிய அக்கறையின்றி, பரிவு இழந்து, அற்பத்தனமாகத் தினமும் சுழன்றுகொண்டிருக்கின்றது இந்த உலகம். அரக்கத்தனம் மிக்கவர்களாக, பிறரது உயிரைக் குடித்து, சுதந்திரத்தை மறுத்து, தனக்கு தனக்கு என்று மார்தட்டுகின்ற மானிடர்களுக்கெல்லாம், *"அன்பின் உருவாய் நான் இன்று பிறந்திருக்கின்றேன். நீங்கள் என்னதான் செய்தாலும் எப்படித்தான் என் மக்களைத் துன்புறுத்தினாலும், அகதிகளாக்கினாலும், அவர்கள் படுகின்ற வேதனையை நானும் அனுபவிப்பதற்காக 'இம்மானுவேலான' வாழும் கடவுளாகிய நான் உங்களுடன் இருக்கின்றேன்"* என்று சொல்லி எம்மைத் தேற்றுவதற்காக அவதரித்த இயேசு பாலகனின் பிறப்பு விழாவை எளிய உள்ளத்தோடு ஏற்றுக்கொண்டாடுவது எவ்வளவோ சாலப்பொருத்தமானது.

எமக்காக எம் துன்பங்களுடன் சேர்ந்து தானும் துன்புறப் பிறந்த இயேசு பாலகனின் பிறப்பை நாம் கொண்டாடத்தான் வேண்டும்.

ஏனென்றால் வரலாற்றுக்கே வாழ்வு கொடுத்த பிறப்பு அவரது பிறப்பு. வரலாற்றின் பாதையையும் பார்வையையும் மாற்றியமைத்த பிறப்பு அவரது பிறப்பு. அன்பென்றால் இதுதான் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று இந்த உலகத்திற்கே அன்பே உருவாகிய கடவுள் பாடம் புகட்டிய பிறப்பு இயேசுவின் பிறப்பு ஆகும்.

"எவரும் அழிவுறாமல் எல்லோரும் நிலைவாழ்வு பெறும் பொருட்டுத் தம் ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவிற்கு கடவுள் இந்த உலகின்மேல் அன்பு கூர்ந்தார்" (யோவான் 3:16)

மேலும் கடவுளின் அன்பு இயேசுவின் பிறப்பின் மூலமாக எமக்கு எப்படி வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்றால், "நாம் கடவுளை அன்பு செய்யுமுன்பே கடவுள் நம்மை அன்புசெய்து நம் பாவங்களுக்குக் கழுவாயாகத் தம் மகனையே அனுப்பினார்" (யோவான் 4:10).

இரை தேடி அலைந்து திரிகின்ற பறவைக் கூட்டமொன்றிற்கு இரைதூவிப் பசியளிக்க விரும்புகின்ற ஒருவர் முன்னுக்குச் சென்று நின்று இரைதூவ முற்பட்டால் மனிதனைக் கண்டே பயந்து பழக்கப்பட்ட பறவைகள் இரை தின்னாமல் பயந்து பறந்துவிடும். மாறாக ஒருவர் பறவையாகவே மாறி அதனருகில் சென்று இரை தூவினால் பறவைகள் பயமின்றி வயிறு நிரப்பும்.

இயேசுவும் இறைவனாக இருந்து இவ்வுலகில் செயற்பட்டிருந்தால் மனிதர்கள் அவரை அணுகியிருக்க மாட்டார்கள். அவர் மனிதராக உருவெடுத்ததால்தான் மனிதர்கள் மனித நிலையிலேயே இருந்து அவரிடம் சென்றார்கள். "முற்காலத்தில் இறைவாக்கினர் வாயிலாகப் பேசிய கடவுள் இறுதியாக தம் ஒரே மகன் வாயிலாக நம்மிடம் பேசியுள்ளார் (எபி 1:1). அதாவது காலத்தைக் கடந்த கடவுள் காலத்திற்கு உட்பட்டுப் பிறந்தார். அணுக முடியாத ஒளியில் வாழும் கடவுள் நம்மை அணுகி வந்தார். கண்ணுக்குப் புலப்படாத கடவுள் நாம் காணும்படி தோன்றினார். கடவுள் மனிதனாகப் பிறந்ததால்தான் நாம் கடவுளைக் கண்டோம். அவரைக் கையால் தொட்டோம்.

இயேசு பாலகன் பிறந்தபோது கடவுளுடைய மனித நேயம் ஊனுடல் எடுத்து, "நம் மீட்பராம் கடவுளின் நன்மையும் மனித நேயமும் கிறிஸ்துவின் பிறப்பிலே வெளிப்பட்டது" (தீத்து 3:4).



கடவுளின் அன்பு ஊனுடல் எடுத்ததுபோல நமது அன்பும் ஊனுடல் எடுக்க வேண்டும். மனித நேயம் மங்கிப்போய்க்கொண்டிருக்கின்ற காலம் இது. அதிகப்படியான ஆசை அடுத்தவரைப் பற்றிய அக்கறை இல்லாத சுயநலம், பொதுநலம் என்றால் ஒதுங்கிக்கொள்கின்ற புத்திசாலித்தனம் இவ்வாறாக ஈரமில்லாத இதயங்களுடன் நாம் இருக்கின்றோம்.

நிலம் மட்டுமல்ல மனித மனங்களுந்தான் வறண்டு போயிருக்கின்றன. இதனால்தான் பகைமையும், கொலையும், இரத்தவெறியும், கொலை மிரட்டல்களும், ஆட்கடத்தல்களும், பணப்பறிப்புகளும், தீண்டாமைகளும் எங்கும் குடிகொண்டிருக்கின்றன. இந்த நிலைமாறி எங்கும் மனிதர்கள் மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் என்றால் அதைச் சாதிக்கும் சூழ்ச்சிய மந்திரம் மனிதநேயமும், அன்பும், நேசமுமாகும். இதை உணர்த்துவதுதான் கிறிஸ்துவின் பிறப்பு. இதனால்தான் துன்பத்தில் துவண்டாலும், கண்ணீரில் மிதந்தாலும், அகதியாய் அந்தரித்தாலும், ஏழ்மையில் பிறந்த பாலகனை நாமும் போற்றிட அவரை எம் உள்ளங்களில் கோவில் வைத்துக் கொண்டாட வேண்டும்.

குயிலுக்குக் கீதம் வருவது போலவும், மயிலுக்கு நடனம் வருவது போலவும் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடுகின்ற எமக்கு பிறர் மட்டிலே உண்மையான நேசம் வரவேண்டும். உண்மையான இந்த நேசம் தன்னையே மறந்து தன் அன்புக்குரியவரிடம் கரையும். உலகத்திலே எங்கோ ஒருவருக்கு துன்பம் என்றாலும் தானும் அதை அனுபவிக்கும். "உன் கண்ணில் நீர் வடிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதே" என்ற அளப்பெரிய இரக்க குணமும், "வாடிய .பயிரைக் கண்டபோதெல்லாம் நானும் வாடினேன்" என்ற இளகிய நெஞ்சமும் நம் வாழ்வின் உந்துசக்தியாகத் திகழவேண்டும். "உன்னைக் காக்கின்ற தேவனாகிய நான் அயர்வதுமில்லை தூங்குவதுமில்லை" என்று எம்மைத் தேற்றுகின்ற ஆண்டவரிடம் எம் துன்பங்கள், துயரங்கள், அனைத்தையும் ஒப்படைத்து விடுவோம். பிறக்கின்ற பாலகனைக் குடிலினிலே சந்திக்கின்றபோது தூய பவுலைப் போன்று "கிறிஸ்துவின் அன்பில் இருந்து நம்மைப் பிரிக்கக்கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? இன்னலா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்"? (உரோமையர் 8:35) என்று மகிழ்ச்சியோடு துணிந்து சொல்வோமா? ●

---

## சமகால நிகழ்வுகளுக்குள் பாலக இயேசு எங்கே பிறப்பார்?

இ. அ. அரசரட்ணம்
புனித மரியாள் பேராலயம், யாழ்ப்பாணம்


இற்றைக்கு 2007ம் ஆண்டுகளுக்குமுன் இடம்பெற்ற மிக உன்னதமான நிகழ்வு வார்த்தை மனுவுருவாகி மாடடைக் குடிலில் பிறந்த நிகழ்வாகும். காலம் காலமாக மெசியாவைக் காணவேண்டுமென்று காத்திருந்த மக்கள் நடுவே வானகத் தந்தையின் அன்பு மகன் என்றும் கன்னியான மரியாளிடம் பிறக்கின்றார். அவரது பிறப்பு இருள் சூழ்ந்திருந்த உலகுக்கு ஒளியையும், அடிமைத்தனத்தில் வாழ்ந்திருந்த மக்களுக்கு உரிமை வாழ்வையும், பாவத்தின் பிடியில் சிக்குண்டு இருந்த மக்களுக்கு விடுதலையையும் பெற்றுக்கொடுத்தது.

பரிசுத்த ஆவியின் உன்னத வல்லமையினால் வார்த்தையைத் தனது உதரத்திலே தாங்கி நின்ற மரியாளுக்கு, பேறுகாலம் வந்தபோது மரியாளைத் தங்க வைக்கவும், அவளுடைய பிரசவத்தைப் பேணவும் மாளிகைகளிலும் சத்திரங்களிலும் இடம் இல்லாமல்போகவே மாடடைக்குடிலில் தஞ்சம் புகுகின்றார் சூசை.

அன்று இவ்வுலகில் அவதரிக்க இடம் தேடிய பாலக இயேசு இன்றும் தம் பிறப்புக்கு இடம்தேடி அலைகின்றார். நாம் இடம் கொடுப்போமா? மெசியா எங்கே பிறப்பார் என்று தெரியாமல் அன்று திண்டாடிய மக்களைப்போல இன்று நாம் அவரின் பிறப்பைக் காண முயல்கின்றோம். ஆம் அவர் எங்கே பிறப்பார்?

போரும் பூசலும் மலிந்து, நாட்டுக்கு நாடு இனத்திற்கு இனம் பகைமையை வளர்த்து, அழிவுகளையும் இடப்பெயர்வுகளையும் உயிர் இழப்புகளையும் மனிதன் ஏற்படுத்துகின்றான். இத்தகைய இன்றைய உலகிலே இவை எல்லாம் மனித மாண்பிற்கு எதிரானவை என்பதை உணர்ந்து மனமாற்றம் பெற்று இச் செயற்பாடுகளில் இருந்து விடுபட்டு அமைதிவழித் தீர்வு காணுகின்ற முயற்சியில் ஈடுபடும் - சமாதானத்தின் கருவியாக செயற்படும் உள்ளத்தில்தான் பாலக யேசு வந்து அவதரிப்பார்.

இறைவனால் படைக்கப்பட்ட உயிர் மிகவும் பெறுமதிமிக்கது, உன்னதமானது என்பதை ஏற்றுக்கொண்டு இவ்வுயிரை எடுப்பதற்கு இறைவனுக்கு மட்டுமே அதிகாரம் உண்டு என்பதை உணர்ந்து மனித உயிரையும் மேன்மையையும் உன்னதத்



தன்மையையும் மதித்து, வாழும் உரிமையைப் பறிக்காமல் சுதந்திரமாக வாழ அனுமதிக்கும் நல் உள்ளங்களாய் மாறும்போது அங்கே பாலக யேசு அவதரிக்க இடம் கிடைக்கும்.

திருமுழுக்கினூடாக நாம் பெற்றுக்கொண்ட இறை அழைத்தல் உன்னதமானது என்பதை விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்வோம். கொடுமைகளும் அநீதிகளும், காணாமல்போதல்களும் அபரிமிதமாக இடம்பெறும் மண்ணிலே, நீதிக்கும் உண்மைக்கும் குரல் கொடுப்பது ஒவ்வொரு மனிதனுக்கும் சிறப்பாக ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கடமையும் உரிமையுமாக உள்ளது என்பதை உணர்வோம். அநீதிக்கு எதிராகவும் நீதிக்குச் சார்பாகவும் குரல் கொடுக்க முற்படும்போது அந்த மனிதனின் உள்ளத்திலே உலக மீட்பரின் பிறப்பிற்கு நிச்சயமாக இடம் இருக்கும்.

போரினாலும், போக்குவரத்துத் தடையாலும், தொழில் இன்மை, வருமானம் இன்மையாலும் வாழ்வாதாரம் இழந்து, அன்றாட உணவிற்காக அல்லற்படும் மக்களை இரக்கத்தோடும் கருணையோடும் கண்ணோக்கி, செல்வச் செழிப்போடும் வசதியோடும் வாழும் மக்கள் சுயநலம் களைந்து பொதுநலம் மேலோங்க தம்மிடம் உள்ள செல்வங்களையும் வளங்களையும் இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழும் மக்களாக மாறும்போது அங்கே பாலக யேசுவின் பிறப்பின் நிகழ்வு உண்மையாகவே நிதர்சனமாகும்.

---

## மாணிக்கமாய் உதித்தார் மாபரன் இயேசு!

மானிடரின் பாவத்தைப் போக்கிடவும்
மானிலம் செழித்து ஓங்கிடவும்
மாசுமறுவற்ற மனிதப் பிறவியுடன்
மாமரி வயிற்றில் கருவாய்த் தரித்தார் இயேசு!

மாமரி தாங்கிய எம் வள்ளல் யேசு
மகத்தான செயல்களால் மனிதரைக் கவர்ந்திடவும்
மாண்புயர் புதுமைகளால் உலகத்தை வென்றிடவும்
மாடடைக் குடிலிலே மகனாகப் பிறந்தார்!

மார்கழிக் குளிரினிலே மந்தைகளின் உறைவிடத்திலே
மங்காத ஒளிகொண்டு மாண்புடன் தோன்றினார்
மனிதரின் உள்ளத்தில் தஞ்சம் புகுந்திட
மாசு மறுக்களை மாற்றியமைத்திட
மாபரன் யேசு மாணிக்கமாய்ப் பிறந்தார்!

மகன் பிறந்த சேதி கேட்டு வானதூதர் வாழ்த்திட
மகிழ்ச்சி வெள்ளத்தில் இடையர்கள் திழைத்திட
மங்காத சேதி கேட்டு இராசாக்கள் மகிழ்ந்து நின்று
தூபம், பொன், வெள்ளைப் போளம் காணிக்கையாக்க
மகராசனாய் மாவீரனாய் மகிழ்வோடு பிறந்தார் யேசு!

மாமரி உதிரத்தில் மாணிக்கமாய்ப் பிறந்த பாலனை
மகிழ்ச்சிக்கண் கொண்டு மங்காமல் ஒளி கொடுக்கவும்
மாண்புடன் அவர் புகழில் மானிலம் செழிக்கவும்
மன்னாதி மன்னனை, மகராசனை, மாவீரனை வாழ்த்துவோமே!

*அ. யஸ்மின் சறோன்*
*ஆவணம், நர்னாட்டான்.*



வழிபாடு பற்றிய ஆழமான அர்த்தங்களை
இலகு தமிழில் வெளிக்கொணரும் புதிய தொடர்!

# வாழ்வும் வழிபாடும்

தருவது வலண்டின் ஜோசப்



## திருவுடைகள் தேவையா?

தொடர் - 12

நமது வழிபாட்டில் குருக்களும், பீடப்பணியாளர்களும் பயன்படுத்துகின்ற திருவுடைகள் பலருக்கு விசித்திரமாகத் தெரிகின்றது. 'யாரோ, எங்கோ வடிவமைத்த ஆடம்பரமான ஆடைகளை இன்றும் பயன்படுத்த வேண்டுமா' என்ற கேள்வி பலருடைய இதயங்களில் எழுகின்றது.

ஆடைகளை மனிதன் அடிப்படைத் தேவைகளுக்காக மட்டும் பயன்படுத்துவதில்லை. தன்னுடைய ஆளுமையை, மாண்பை, தனித்தன்மையை வெளிப்படுத்தும் ஊடகமாகவும் உருவாக்கிக் கொள்கின்றான். நாளுக்கு நாள் மாறிவரும் ஆடை அலங்காரங்கள் மனித நாகரீகத்தின் வளர்ச்சி நிலைகளாகக் கருதப்படுகின்றன.

வழிபாட்டில் ஆடைகளுக்குத் தனியிடம் உண்டு. வழிபாட்டில் கலந்துகொள்ளும் மனிதன் தன்னைச் சாதாரண வாழ்க்கையிலிருந்து வேறுபட்டவனாக, புனிதத்தைப் பற்றிக் கொண்டவனாக, பேராற்றலோடு தொடர்புகொண்டவனாக இனம் காட்ட விரும்புகிறான்.

### புதிய படைப்பு

கிறிஸ்தவ சமுதாயம் துவக்க காலத்திலிருந்தே தன்னை உயிர்ப்பின் சமுதாயமாக, நிறைவின் சமுதாயமாக அணிகின்ற – பயன்படுத்துகின்ற ஆடைகள் வழியாக இனம் காட்ட விரும்பியது. கிறிஸ்துவில் புதிய படைப்பாக மாறியவர்கள் என்பதைக் காட்டும் வகையில் புதிய கிறிஸ்தவர்கள் வெள்ளையுடையணிந்து வழிபாட்டில் கலந்திருக்கிறார்கள்.

திருவழிபாட்டிற்கு வருகின்ற அத்தனை நபர்களுமே வித்தியாசமான விழாக்கால உடை அணிந்து தாங்கள் '*அரச குருத்துவத் திருக்கூட்டம்*' என்பதை வெளிப்படுத்திய நேரங்களும் வரலாற்றில் இருந்திருக்கின்றன. காலப்போக்கில் திருவுடைகள் திருப்பணிகள் செய்பவருக்கு மட்டுமே சொந்தமாகின.

கிறிஸ்தவ சமயம் உரோமை அரசின் அதிகாரபூர்வமான சமயமாக உருவெடுத்த காலத்தில் உரோமை அரச அதிகாரிகளின் ஆடம்பர உடைகள் வழிபாட்டு உடைகளாக மாறின. அதேநேரத்தில் கீழைத்திருச்சபைகள் விண்ணக மாட்சியை வெளிப்படுத்தும் பொன்னிற ஆடைகளை வழிபாட்டிற்கென வடிவமைத்துக்கொண்டன. காலத்திற்கும் வழிபடும் உண்மைக்கும் ஏற்ப உடைகளின் நிறங்களை மாற்றிக் கொள்வதும் சிறந்த கிறிஸ்தவ பண்பாட்டுச் செயல்களாக உருவெடுத்தது. மகிழ்ச்சியைக் குறிக்கும் மஞ்சள் - வெள்ளை, துயரத்தையும், மனமாற்றத்தையும் குறிக்கும் ஊதா, வேதசாட்சியின் இரத்தத்தைக் குறிக்கும் சிவப்பு, வளமையையும் - சீரான வாழ்வையும் குறிக்கும் பச்சை என்ற வண்ண ஆடைகளை அடையாளங்களாக்கி வழிபாடுகள் கொண்டாடப்பட்டன.

### பணிகளின் அடையாளங்கள்

இன்று, திருவழிபாட்டு ஆடைகள் ஆடம்பரத்திற்கோ, அலங்காரத்திற்கோ அமையவில்லை. மாறாக அவை ஆழ்ந்த பொருள் உணர்ந்தும் அடையாளங்களாக உள்ளன.

திருப்பணியாளர்கள் அணியும் திருவுடைகள் அவர்களை மற்றவர்களிடமிருந்து பிரித்துக் காட்டுவதற்காக மட்டுமல்ல, வழிபாட்டில் அவர்களது பணிகளை வளப்படுத்தி அவர்களது ஈடுபாட்டையும், பொறுப்பையும் அதிகரிப்பதாக அமைந்துள்ளன. திருச்சபையின் இன்றைய எண்ணப்படி வழிபாட்டு ஆடைகள் எளிமையாகவும், குறிப்பிட்ட மக்களின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையிலும், பணிக்கு உதவும் வகையிலும் அமைய வேண்டும் என்பதே நோக்கமாக உள்ளது. எப்படிப்பட்ட உடைகளை வடிவமைத்து வழிபாட்டைச் சிறப்படையச் செய்ய வேண்டும் என்ற பொறுப்பை அந்தந்த நாட்டு ஆயர் மன்றங்களுக்கே விட்டுவிட்டது திருச்சபை.

### பண்பாட்டு ஆடைகள்

நமது நாட்டைப் பொறுத்தவரையில் இன்னும் உரோமைப் பண்பாட்டு ஆடைகளையே நாம் வைத்திருக்கின்றோம். 1969 ஆம் ஆண்டே உரோமை நமது பண்பாட்டிற்கு ஏற்ற திரு ஆடைகளை வடிவமைத்துக்கொள்ள அனுமதி அளித்துவிட்டது. நமக்குள்ளே கருத்தொருமைப்பாடு இல்லாத நிலையில் பழைய பண்பாடே தொடருகிறது. நமது வழிபாட்டுத் திருவுடைகள் நமது பண்பாட்டிற்கும், ஆன்மீக மனநிலைக்கும் பங்கேற்கும் பண்பிற்கும் ஏற்ப எளிமையாக வடிவமைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் மக்கள் காட்டுகின்ற ஆர்வத்தைப் பொறுத்தே மாற்றங்கள் நிகழும்.

இன்று நடைமுறையில் திருவுடைகள் பயன்படுத்துவது குறித்த பல்வேறு குழப்பங்களைப் பார்க்கிறோம். எந்தப் பணியாளருக்கும் திருவுடைகளைத் தங்கள் விருப்பத்திற்கும், வசதிக்கும் ஏற்ப மாற்றிக் கொள்ள உரிமை இல்லை என்பதை 2004 மார்ச்சில் வெளிவந்த திருச்சபையின் ஆவணம் வலியுறுத்துகிறது. திருவுடைகள் பற்றி தீர்மானிக்க வேண்டிய முழுப்பொறுப்பும் திருச்சபை தலைவர்களிடமே உள்ளது. இதற்கான கருத்துக்கணிப்புகள் பல்வேறு தரப்பு மக்களிடமிருந்து வரவழைக்கப்பட வேண்டும். விரைந்து தீர்மானித்து திரு ஆடைகளை அவற்றின் உள்ளார்ந்த அர்த்தங்களோடு பயன்படுத்த வழி செய்வது அனைவரின் பொறுப்பு.

வழிபாட்டில் பொதுநிலையினர் அணிகின்ற ஆடைகளிலும் அர்த்தங்கள் உள்ளன. பல பங்குகளில் இன்று பெரிய வெள்ளிக்கிழமையன்று பெண்கள் வெள்ளையுடையணிந்து ஆலயத்திற்கு வருகின்றனர். அருளடையாளங்களில் பங்கேற்போர் அதன் பண்பை உணர்த்தும் ஆடைகளை அணிந்து வரவேண்டும் என்று நான் சொல்லவில்லை. வழிபாட்டுத் தளத்தின் மேன்மையையும், வழிபாட்டு நிகழ்ச்சிகளின் புனிதத்தையும் போற்றுகின்ற வகையிலும் ஆடைகள் அணிந்து வருவது அனைவரின் கடமை. அதற்கான விழிப்புணர்வும் இன்றைய தேவைகளில் ஒன்றாகும்.

### அருட்பணியாளர்களின் திருவுடைகள்

அருட்பணியாளர்கள் இன்று அணிகின்ற திருவுடைகள் பற்றி சரியான விளக்கங்கள் பலருக்குத் தேவைப்படுகின்றது. முன்பெல்லாம் அருட்பணியாளர்கள் திருவுடைகள் அணிகின்றபோது ஒவ்வொரு ஆடைக்கும் ஒரு செபம் சொல்வது வழக்கம். இன்று அப்படிப்பட்ட செபங்கள் இல்லாவிட்டாலும் திருவுடை அணிகின்ற நேரத்தில் புனிதமான பணியைச் செய்யப் போகிறோம் என்ற உணர்வு பணியாளர்களிடம் மேலோங்க வேண்டும் எனத் திருச்சபை விரும்புகிறது.

திருவுடைகளில் ஆழமான பொருளுடைய அடையாளச் சின்னங்களை ஆயர் அணிகிறார். அவர் அணிகின்ற 'தொப்பி' (Miter) அவரது தலைமைப் பணியைக் குறிக்கின்றது. இரண்டு வகையான தொப்பிகள் உள்ளன. ஒன்று மகிழ்ச்சியைக் குறிக்கும் பொன்னிற அல்லது வெள்ளிநிறத் தொப்பி. மற்றொன்று துக்க நேரங்களில் அணியும் வெள்ளை நிறத் தொப்பி. அதோடு கையில் செங்கோல் (Crozier) ஒன்று வைத்திருப்பார். ஆயர் பணியின் அடையாளமாக இந்தக் கோல் அமைகின்றது. இன்று ஆயர்கள் மிக எளிமையான தொப்பிகளையும் கோல்களையும் பயன்படுத்த துவங்கியுள்ளனர். திருப்பணியாளரின் தனித்தன்மையைக் காட்டும் உடைகள் அவரின் நீண்ட வெண்ணாடையும் (Alb) கழுத்துப் பட்டயமுமாகும் (Stole). நீண்ட வெண்ணிற ஆடை 'பணிக்கு உகந்த தூய மனநிலையைக் கொண்டிருக்கிறார்' எனக் காட்டுகிறது. கழுத்துப் பட்டயம் அவரது பணியைக் குறிக்கிறது.

கூட்டுத் திருப்பலிகளில் பங்குகொள்ளும் குருக்கள் வெண்மையான நீண்ட உடையும் கழுத்துப்பட்டயமும் போட்டாலே போதுமானது. எல்லோரும் மேலுடையாகிய 'Chausible' அணிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. தலைமை ஏற்று பலி நிறைவேற்றும் அருட்பணியாளர் ஆடம்பரமான மேலுடை அணிவது பொருத்தமானது. வெண்ணிற ஆடையோ அல்லது அங்கியோ அணியாமல் வெறும் கழுத்துப்பட்டயம் மட்டும் அணிந்து திருப்பலி நிறைவேற்ற எந்தவொரு அருட்பணியாளருக்கும் அனுமதி இல்லை என்பதைத் திருச்சபை மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டது.

சில இடங்களில் நீண்ட வெண் ஆடைக்கு மேல் சால்வையைப் போர்த்தித் திருப்பலி நிறைவேற்றும் பணியாளர்களைப் பார்க்கிறோம். இவர்கள் ஆயரின் தனிப்பட்ட உத்தரவு பெற்றவர்களாக இருக்க வேண்டும். இந்தியப் பண்பாட்டின் அடிப்படையில் இதுபோன்ற உடைகளை அணிந்துகொள்ள ஆயர்கள் அனுமதிக்கலாம்.

நற்கருணை ஆசீர் சமயத்தில் நீண்ட அங்கி ஒன்றை திருப்பணியாளர்கள் அணிகிறார்கள். மிகவும் ஆடம்பரமான நேரங்களில் அது பொருத்தமானதாக உள்ளது. சாதாரண ஆராதனை நேரங்களில் இப்படிப்பட்ட ஆடைகள் அணிய வேண்டும் என்று திருச்சபை சொல்வதில்லை. நற்கருணை ஆசீர் திருவழிபாட்டின் ஒரு பகுதியல்ல என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதற்காகத் திரு ஆடைகளே அணியாமல் அந்தத் திருநிகழ்ச்சியைப் பொது இடங்களில் நிகழ்த்துவதும் பொருத்தமானது அல்ல. திருவழிபாட்டில் பல்வேறு பணிகளை நிறைவேற்றும் பொதுநிலையினர் அந்தந்தப் பணிகளைச் சுட்டிக் காட்டும் அடையாள உடைகளை அணிவது பொருத்தமானது. பொதுவாகவே திருப்பணிக்கான ஆடைகள் சுத்தமாகவும் மாண்பு மிக்கதாகவும் பணியின் பண்பைச் சுட்டிக்காட்டுவதாகவும் அமையும்படி பார்த்துக்கொள்வது அனைவரின் பொறுப்பு.

### வண்ணங்கள் தேவை

வழிபாட்டில் பல்வேறு நிறங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு நிறமும் வழிபாட்டின் சூழலைச் சிறப்பிக்கும் அடையாளங்கள். மகிழ்ச்சி, மனத்துயர் போன்ற பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தும் இந்த வண்ணங்களைச் சரியான முறையில் சரியான அளவில் பயன்படுத்தும் கலை உணர்வு தேவைப்படுகிறது. மக்களைப் பங்கேற்க வைக்கவும் வழிபாட்டின் மாண்பை உணர்த்தவும் இந்த வண்ணங்கள் தனிப்பெரும் பணியைச் செய்கின்றன. இவை திருவுடைகளாகவோ திருத்துகில்களாகவோ, திருப்பண்டங்களை வைக்கும் பொருள்களின் நிறங்களாகவோ, ஏன் ஆலயத்தில் பயன்படுத்தப்படும் அலங்காரங்களாகவோ அமையலாம்.

*(தொடர்ந்து வழிபடுவோம்...)*

---

# மனித வாழ்வில் இறைவனின் தரிசனம் கிறிஸ்மஸ் நாளில் ஒளியாக மலர வேண்டும்

தொ. கிறிஸ்தியான்,
பேசாலை - 8, மன்னார்.

மார்கழி மாதத்தை இதமான மாதமெனலாம். வாடைக்காற்று சாடை காட்டி வர, கார்முகில் சுருக்கொண்ட மாதுபோல் பருவ மழையைத் தாங்கிவர, தேங்கி நிற்கும் குட்டையிலே தவளையும், குவளையும், படைத்தவனின் வரவை எண்ணிப் புகழ்பாட, பசுந்தளிர் பச்சை பசேலெனத் துளிர்த்து மகிழ்வூட்ட, மென்பனி மேனியிலே உறைந்து குளிரூட்ட, ஒளிவாழ்வு மனிதனுக்குக் கிடைத்த நன்நாளாகும். இம்மாதம் இருபத்தைந்தாம் நாளாக மாந்தரினம் இறை தரிசனம் பெற்று ஒளிவாழ்வு பெறும் கிறிஸ்மஸ் நாளெனலாம்.

கீழ்ப்படியாமையாலே மனிதன் பாவத்தில் வீழ்ந்து, சகோதர பொறாமையாலே கொலை செய்தான். இதனால் கோள்களும், கிரகங்களும், கடல்களும், வெப்பமும் மனிதனை வாட்டி வதைத்தன. இயற்கையையும், கோள்களையும் ஆழவேண்டிய மனிதனுக்கு அந்த இயற்கையே எதிரியாக மாறும் சாப நிலை தோன்றிற்று. பாவத்தின் விளைவால் அவனது வாழ்வு தோல்வியைச் சந்திக்கும் வாழ்வாக மாறியது. வியர்வை சிந்தி உழைத்தும் நிம்மதி காணாதவனாய் அலைய நேர்ந்தது.

அப்போதுதான் இறைவன் தரிசனம் பரிமாணம் பெற்று கன்னிமரி வயிற்றிலே கருவானார். இறைமகன் நம் சாபக்கேட்டைப்போக்க மனுவுருவானார்.

*முள்ளை, முள்ளால்தான் எடுக்கமுடியும்* என்பது ஒரு முதுமொழி. அந்த முள் மனிதனின் உள்ளத்தில் குற்றியது. எனவேதான் மனித அவதாரம் பூண்டார் இயேசு. இயற்கையில் பாவம் அறியா பச்சிளம் பாலகனாக, தூய ஆவியின் அருள் பெற்று ஆற்றல் படைத்த ஆண்டவன் அடிமட்ட வாழ்வில் அதுவும் பிறப்புத்தொட்டு இறப்புவரை மனிதன் பாவத்தினால் தேடிய சூழ்வினையைப் போக்க தன்னையே அர்ப்பணித்து, சமர்ப்பித்து, உருவெடுத்து, மனுக்கோலம் பூண்டு, தசைவடிவம் எடுத்து, இரத்த ஓட்டம் பெற்றது எம் மனுக்குலத்திற்காகவே. இதனை லூக்.1:30-35 வரை படிக்கும்போது சகலரும் புரிந்துகொள்ளலாம்.

அந்நாளில் அதிகார வர்க்கத்திற்கும், அடக்குமுறையாளருக்கும் சாவு மணி அடிக்கப்பட்டு, கொடுங்கோல் ஆட்சிக்கும், கப்பம் பெறுவோர்க்கும் சவுக்கடி விழுந்தது எனலாம். காரணம் கிறிஸ்துவின் பிறப்பால் ஏரோது அரசன் மிரண்டு, முளி பிதுங்கினான். எனவேதான் மூவரசர்க்குத் தரிசனம் கிடைத்ததும் தனக்கு கிறிஸ்துவின் பிறப்புப் பற்றிய உண்மையை அறிந்து கூறும்படி ஆணை இடுகிறான். இதையே மத்.2:3-8 வசனம் எடுத்து இயம்புகின்றது.

அடுத்து கீழ்ப்பட்ட வர்க்கத்திற்காகவே கிறிஸ்து தோன்றியதற்கு சான்றாகவே முதன்முதலில் கிறிஸ்து பிறந்த காட்சியைக்கண்டு, மாட்சி பெற்று மகிழ்ந்தவர்கள் இடையர்கள் என நற்செய்தி நவில்கின்றது. இதிலும் உண்மை என்னவெனில் ஒடுக்கப்பட்ட, கீழ்ப்படிந்து வாழுகின்ற மானிடர்க்கே இறை தரிசனம் கிட்டும் என்பதாகும். இன்று மனிதன், பட்டம், பதவி, சேரி வாழ்வு, நகர்ப்புற வாழ்வு, சாதி, மதம் என்பவற்றால் வேறுபடுவதைப்போல் அன்றைய வாழ்வின் யதார்த்தமும் பேதங்களைக் கொண்டதாக இருந்ததென வேதம் கூறுகின்றது. இதை லூக். 2-10-11 வரை காணலாம். மணிமுடி சூடிய மன்னர் குலம் தலை கவிழும் நிலை ஏற்பட்டது. அதேகாலத்தில் முடி கழற்றி, சிரம் தாழ்த்தி வணங்கிய மூவேந்தர்க்கு இறைதரிசனம் கிட்டியது.



ஆகவே, ஆட்சியாளரைப் புறம் தள்ளி விட்டாரா கிறிஸ்து? இல்லவே இல்லை. நேர்மை, உண்மை, சத்தியம், கீழ்ப்படிவுள்ள ஆட்சியாளருக்கும், செங்கோல் ஏந்தி குடியினை சிறக்கவைக்கும் மன்னருக்கு வான்வெள்ளி வழியாக, ஒளிகொடுத்துத் தரிசனமானார் என நாம் அறிகின்றோம் (மத்.2:1-2 வரை). எனவே நகரங்களில் சிறிதாகிய பெத்தலேகம் இறை வருகையால் பெருமை அடைந்தது என்றால் கிறிஸ்துவின் தரிசனம் நம்மில் பர்ணமிக்க முயல்வோம்.

நற்கொடையாகவே இயேசு பிறந்தார். ஒரு மதத்திற்காகவோ, மொழிக்காகவோ, இனத்திற்காகவோ, தன்னை அர்ப்பணிக்க வரவில்லை. முழு உலகுக்குமே தன் உடலையும், ஆவியையும், அர்ப்பணித்தார். மரத்தினால் ஏற்பட்ட சாபத்தை மரத்தினால் மீட்கவே சிலுவைச் சாவை பரமன் விரும்பினார். எனவே மத, மொழி, சாதி, உயர்வு தாழ்வு பேதங்களற்ற கிறிஸ்மஸ் விழாவாக இதை நாம் மாற்றுவோம். உயிர் அழிவிற்காக, உரிமைக்காகக் குரலெழுப்பிச் சகோதர பற்றுள்ள வாழ்வாக வாழாது கிறிஸ்தவன் என்ற கிறிஸ்தவக் கோட்பாட்டை எம் மனங்களில் கொண்டு வாழத்தெண்டிப்போம்.

இவ்வுலகின் தற்காலச் சூழல் எமக்கு பலவற்றை எடுத்து இயம்புகின்றது (மத்.13:14-15). நாம் மனம் மாறுவதற்கும், செம்மைப்படுவதற்குமே இயற்கை அழிவு, யுத்தம், சுனாமி, வெள்ளப்பெருக்கு என்பன தோன்றி மறைகிறது. எனவே ஒடுக்கப்பட்டவர், பிற இனத்தார் மகிழ்வுறும் நாள் இந்நாளாகும். இந்நாளில் கப்பம் பெறுதல் ஆட்கடத்தல் பிரிவினை நீங்கி கிறிஸ்துவின் தரிசனம் உள்ளத்திலும் இல்லத்திலும் பிரதிபலிக்க திடசங்கற்பம் பூணுவோம்.

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

விறு விறுப்புத் தொடர் 47

சொல்லின் செல்வர்
இளவாலை அமுது

## கடற்கரையில் தாமரைப் பூக்கள்

என்ன ஆச்சரியம்! கடற்கரையில் தாமரையா? அதில் பூக்களா? மருத நிலத்தில் குளங்களில் மலரும் தாமரைகள், நெய்தல் நிலக் கடற்கரை மண்ணில் பூக்குமா?

உப்பு நீர் ஊறிய மணலும், அலைகள் மெழுகும் கடற்கரையும் தாமரை பிறந்த இடத்துக்கும் வளர்ந்த இடத்துக்கும் பொருத்தமா? பொதுவுடமை என்ற உப்பு நீரில் ஊறி, மனித உரிமைகளைச் சமத்துவம் என்ற சம்மட்டியால் அடித்து, நசித்து, மக்களின் சுதந்திர ஒலி கேளாமல் வாயை மூடப்பண்ணி வாழ்ந்த நாடுகள் கியூபா, சோவியத் நாடு, அல்பானியா, கிழக்கு ஜேர்மனி என்பன. இந்த நாடுகளில் சமயப் பண்பாடுகளை எல்லாம் வேரோடு நிர்மூலமாக்கிவிட்டனர். ஆனால் அன்னை திரேசா மீண்டும் இந்த நாடுகளின் தெய்வீக மணம் வீசும் தாமரை மலர்கள் பூக்கச் செய்தார்.

எல்லா நாடுகளிலும் பணிமனைகளை அமைத்தார். அந்தச் சந்தன மரங்களின் நறுமணம் நாட்டின் தோளில் ஒட்டிக் கொண்டது. முடியாத காரியம் என்று எல்லா நாடுகளும் ஒதுங்கி நின்ற இடங்களிலும் அன்னை இறைவனின் துணையால் தீபம் ஏற்றி வைத்தார்.

சமயப் பணியாளரும், சமூகப் பணியாளரும் எத்தியோப்பியாவில் சித்திபெற முடியவில்லை. அந்நாட்டின் வடபகுதியில் நீண்டகால வறட்சியால் ஏழைமக்கள் பெரும்துயர் அடைந்தனர். அன்னை அங்கு சென்று 1973ல் மன்னர் கெய்சி சிலாசியின் மகளை அரும்பாடுபட்டுச் சந்திக்க நேர்ந்தது. அதனால் மன்னரைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. மன்னரே எதற்கும் இறுதி முடிவு கூறக்கூடியவர். அதற்கு முன்னர் அரண்மனை அலுவல்களின் உயர் அதிகாரி அன்னையைச் சந்தித்தார்.

"அரசாங்கத்திடம் நீங்கள் எதை எதிர்பார்க்கின்றீர்கள்?" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை. எனது சகோதரிமாரை வறியவர்களுக்குப் பணிசெய்ய ஒப்படைக்குமாறு இங்கே வந்தேன்"

"சகோதரிமார் என்ன செய்வார்கள்?"

"நாங்கள் முழு இதயத்தோடும் இலவசமான சேவையை வறியவர்களிலும் வறியவர்களுக்குச் செய்வோம்."

"என்ன தகுதி அவர்களுக்கு உண்டு?"

"கைவிடப்பட்டவர்களுக்கும், அன்பு காட்டப் பெறாதவர்களுக்கும் நாங்கள் கனிவான அன்பைச் செலுத்தி அவர்களில் மகிழ்ச்சி துளிர்விடச் செய்வோம்"

"உங்களது வழிவகைகள் எல்லாம் வேறுபட்டனவாய் இருக்கின்றன. நீங்கள் மக்களை மதம் மாற்ற அவர்களுக்குப் படிப்பிக்கப்போகிறீர்களா?"

"எங்களுடைய பணிகள், கடவுள் அவர்களில் கொண்ட அன்பை அவர்கள் உணர்ந்துகொள்ளச் செய்வதுதான்."

கடைசியாய் சக்கரவர்த்தியைக் காண்பதற்கு அவர் வழிநடத்திச் சென்றார். மன்னரின் முடிவு எதிர்பாராத ஒன்றாய் இருந்தது. "நீங்கள் செய்யும் நல்ல பணிகளைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். நீங்கள் இங்கு வந்ததையிட்டு மிக மகிழ்ச்சியடைகின்றேன். உங்கள் சகோதரிகள் எத்தியோப்பியாவுக்கு வரத்தடையில்லை" என்றார் மன்னர்.

ஓராண்டு காலத்தின் பின் 12 செப்டம்பர் 1974ல் 81 வயதான சக்கரவர்த்தி இராணுவச் சதியினால் அரச பதவியிலிருந்து அகற்றப்பட்டு அடிஸ் அபாவில் மறியலில் இருந்தார். மறியற்சாலையின் நிலமை அரசரைத் திகைக்கவைப்பதாயிருந்தது. அரச குடும்பத்தினருக்கும் அதே நிலமை.

ஆபிரிக்காவிலும், ஐரோப்பாவிலும், பிறநாடுகளிலும் உள்ள அரசியல் தலைவர்கள் நிலமையை அறிந்து வருந்தினர். மன்னரையும், குடும்பத்தினரையும் மனித மாண்புக்கு இடம்கொடுத்து நடத்துமாறு புரட்சியாளரிடம் பணிவாகக் கேட்டனர். மறியலில் இருந்த அரசரையும், குடும்பத்தினரையும் சந்திக்க அன்னை திரேசாவுக்கு மாத்திரம் புரட்சியாளர் அனுமதியளித்தார். அவர்களை விடுவிக்க அன்னையே உதவிபுரிந்தார். அவர் மறியலில் மரணமானார்.



1986ல் கியூபாவுக்குச் சென்று அதன் தலைவர் பிடல் காஸ்ரோவுடன் பேசி தலைநகரில் அன்புப் பணியாளரின் பணிமனை ஒன்றைத் தொடக்க அனுமதி பெற்றார். பல வருடங்களாகப் பொருள் தட்டுப்பாடுகளை துடைத்தெறிந்து விட்டதாகவும், சமயங்களின் தலையை நசுக்கி விட்டதாயும் செருக்குடன் கூறியது கியூபா. அது பொதுவுடமை நாடு. அன்னை திரேசாவின் பணிகளை ஏற்றுக்கொண்டதால் ஆன்ம சக்தியுடன் பிறருக்குப் பணிசெய்வதை அந்நாடு ஏற்றுக்கொண்டதாயிற்று.

மேற்கு ஜேர்மனி அரசியல் முதல்வர் கோல் (Kohl) என்பவருடன் வீட்டில் செபித்த பின்னர், கிழக்கு ஜேர்மனி என்ற பொதுவுடமை நாட்டுக்குச் சென்றார். அங்கே இரண்டு பணிமனைகள் தோன்றலாயின. சோவியத் நாட்டிலும் சிலுவையின் ஒளி அடிக்க வேண்டுமென்பது அன்னையின் நீண்டநாள் ஆசை.

அங்கே கால் வைக்க ஒரு தருணத்தைப் பார்த்தார். சோவியத் நாட்டுச் சமாதான சபை அன்னையை அழைத்திருந்தது. செர்னோபில் என்னும் இடத்தில் அணு ஆற்றல் (Nuclear) ஆய்வு நிலையத்தில் உண்டான கசிவால் அயலில் உள்ளவர்களுக்குப் பேராபத்து ஏற்பட்டது. ஐந்து நாள் தரிசனத்தின்போது தாக்கப்பட்டவர்களுக்கென அமைத்த நிலையத்தை அன்னைக்குக் காட்டினார். அங்கே அரசியலில் தொட்டுக்கொள்ளாமல் ஒரு குறிப்புத் துண்டு தன்னும் கொண்டுவராமல் அன்னை உரையாற்றினார். இழந்த சமய நம்பிக்கையை மீளவும் கட்டியெழுப்ப வேண்டும் என்றார். அன்பு – அன்பின் சேவை பற்றி நெஞ்சில் நெகிழக்கூடிய சில செய்திகளைக் கூறினார்.

அன்னையின் உரையை பொதுமக்கள் வரவேற்றனர். உயர் அதிகாரிகள் மக்களின் கருத்தை அறியக்கூடியதாயிற்று.

அங்கிருந்து அன்னை திரேசா நியூயோர்க் பட்டினத்திற்குப் பயணமானார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு (1985) அங்கே எயிட்ஸ் நோயாளருக்கென *அன்பின் கொடை* என்ற பணிமனையைத் தொடங்கியிருந்தார்.

பலவீனமான இதயம் இருப்பதையும் மறந்து 3 மாடிகளின் படிகளில் ஏறி அங்கே சாவின் வாசலை எதிர்பார்த்திருந்த யுவான் என்ற நோயாளியின் கைவிரல்களைக் கோத்துக்கொண்டு ஒரு காரசாரமான செய்தியைச் சொன்னார். "யுவான், நீர் இயேசுவிடத்தில் போகும்போது நான் அவரை நேசிப்பதாயும், சகோதரிகள், துணைத்தொண்டர்கள், ஏனைய நோயாளிகள் அவ்வாறே நேசிப்பதாயும் சொல்லும். நீர் அவரிலே மிக்க அன்புடன் இருப்பதை அவர் அறிவார். அவரைக் கண்டதும் சிரித்துக் கொள்ளும்" என்றார்.

அன்னை படிகளால் கீழே இறங்கியபோது இன்னொரு கட்டிடம் *விற்பனைக்கு* என எழுதப்பட்டிருந்தது. முழந்தாளிலிருந்து இறைவனின் உதவிக்கு நன்றி கூறினார். எயிட்ஸ் நோயாளருக்கு துணைபுரிவதையிட்டுப் பலர் முணுமுணுத்தனர். "நாங்கள் இதிலே உட்கார்ந்து, நீதி விசாரித்து, குற்றவாளிகளுக்கு தீர்வையிட வரவில்லை. கடைசிக் காலத்தில் சகிப்புத் தன்மையோடிருந்து இவர்கள் இறைவனை அடையவேண்டும். எங்கள் சகோதரிகள் தியாக மனப்பான்மையுடன் தொண்டு புரிகிறார்கள்" என்றார்.

(கங்கை தொடர்ந்து பாயும்...)

## உங்களுக்குத் தெரியுமா?
### மறையறிவுப் பகுதி இல.55

மார்கழி மாதம் என்றாலே நமக்கெல்லாம் மகிழ்ச்சிதான். கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் - புதுவருடப் பிறப்பு - தை பிறந்தால் வழிபிறக்கும் என்ற உணர்வு இவை எல்லாம் மார்கழிக்கு மகிழ்வூட்டும்.

கிறிஸ்துவின் பிறப்பு இவ்வருடம் புதிய செய்தியைச் சொல்ல வேண்டும். கிறிஸ்து இவ்வுலகில் பிறந்தது தம்மை நமக்கெல்லாம் உடைத்துத் தருவதற்காகவே. போர்க்காலச் சூழ்நிலையில் துன்பங்களும், துயரங்களும்தான் வாழ்வு என்றாகிவிட்ட இந்நாட்களில் கிறிஸ்துவைப்போல நாமும் பிறருக்கு நம்மைப் பகிர்ந்துகொடுக்க ஆயத்தமாவோம்.

இம்மாதக் கேள்விகள் திருத்தூதர்பணியின் 8ம், 9ம் அத்தியாயங்களிலிருந்து தொகுக்கப்படுகின்றன.

1. "நீங்கள் கூறிய கேடு ஏதும் எனக்கு ஏற்படாதவாறு எனக்காக ஆண்டவரிடம் மன்றாடுங்கள்" இவ்வார்த்தைகள் யாரால் யாருக்குக் கூறப்பட்டன?

2. ஆண்டவரின் தூதர் பேதுருவிடம் கூறியது என்ன?

3. பிலிப்பு யாருக்குத் திருமுழுக்குக் கொடுத்தார்?

4. திருமுழுக்கு கொடுத்த பிலிப்பு தண்ணீரைவிட்டு வெளியேறியதும் ஆவியானவர் அவரை எடுத்துச் சென்றார். பின்பு அவர் எங்கே தோன்றினார்?

5. சவுல் எந்த நகரத்தைச் சேர்ந்தவர்?

6. சவுல் பார்வை இழந்தபின் அவரோடு இருந்தவர்கள் அவரை தமஸ்கு நகருக்கு அழைத்து வந்தனர். அவர் தங்கவைக்கப்பட்ட தெரு எது?

7. பார்வையிழந்த சவுலைக் குணமாக்க இறைவனால் அனுப்பப்பட்ட சீடன் யார்?

8. தமஸ்கு நகரில் வல்லமையோடு போதித்த சவுலை கொல்லத் துணிந்து நகர வாயிலைக் காவல் காத்த யூதர்களிடமிருந்து சீடர்கள் எப்படித் தப்புவித்தனர்?

9. ஜெருசலேமுக்கு வந்துசேர்ந்த சவுலை ஏற்றுக்கொள்ள அஞ்சிய சீடர்களிடம் அவரைக் கூட்டிச்சென்று பரிந்து பேசியவர் யார்?

10. ஜெருசலேமிலும் யூதர் சவுலைக் கொல்லத் தேடியதால் அவரைத் திருத்தூதர்கள் எங்கே அனுப்பி வைத்தனர்?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 53 இற்கான கேள்விகளுக்கு 39 பேர் விடை அளித்திருந்தனர்.

### இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:

### ஆ. சுரேகா , 74/6, ஸ்ரீ நகர், பூந்தோட்டம், வவுனியா

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. அ. கில்டா, கட்டையடம்பன்.
2. செ. நிதர்சினி, அளவக்கைப் பங்கு, நானாட்டான்.
3. அ. வதனி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
4. இ. கொர்னேலியா, பொன்தீவுகண்டல், முருங்கன்.
5. நற்குணம் தர்ஷிக்கா, பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.
6. ச. மெரின்ரன் பெனாண்டோ, மன்/ பு.ச. ஆ.தே. பா, மன்னார்.
7. எம். றினோஷன், பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
8. பி. நித்தியானந்தன் குரூஸ், 8ம் வட்டாரம், வங்காலை.
9. சே. நிரோசினி, ஆண்டார் செட்டிவெளி, நானாட்டான்.
10. செ. ஜெசில்டா, இல. சி-08, மடுக்கோவில், மடு.

## அனுபவப் பகிர்வு

# மீட்பர் இயேசு பிறந்த புனித பூமியில் நான் பயணம் செய்த அந்த ஏழு நாட்கள்



திருமதி.
அகத்தா குருஸ்
பிரதான வீதி
சின்னக்கடை, மன்னார்.

எத்தனையோ நாட்களாக நான் ஏங்கித் தவித்த புனித பூமியை தரிசிக்கும் பாக்கியம் இறுதியாக ஒக்ரோபர் 20ம் திகதி எனக்குக் கிட்டியது.

இடது தோளிலே பச்சை நிறத் தோள் பை, வலது கையிலே சில்லுப்பூட்டிய பச்சைநிறப் பயணப்பை. இப்படியாக கட்டுநாயக்கா விமான நிலையமே ஓர் புன்முறுவலுடன் இமை கொட்டாது எம் எண்பது பேரையும் பார்க்க அந்த அதிகாலை வேளையில் விமானத்தில் ஏறினோம்.

முதலில் சாக்கடலை (Dead sea) அடைந்த நாம் அங்கு திரண்டு வந்திருந்த ஏராளமான மக்களுடன் கடலுக்குள் இறங்கி உடலை நனைத்துக்கொண்டோம். தம் பாவங்கள் எல்லாம் அந்த உப்புடன் கரைந்து போகட்டும் என்றோ என்னவோ புனித யாத்திரையின் எல்லா மக்களுக்கும் முதல் கட்டம் அந்த சாக்கடல்தான்.

அடுத்ததாக கானா ஊரில் தண்ணீரை இரசமாக்கி முதல் புதுமை செய்த அந்த இடத்தில் உள்ள தேவாலயத்திற்குச் சென்றோம். அங்கு வருகை தரும் தம்பதியினருக்கு அவர்கள் விரும்பினால் திருமண வாக்குத்தத்தம் புதுப்பித்தல் நடைபெறும். திருப்பலியில் பங்குபற்றிய நாம், புனித பூமியிலேயே இரசம் விற்கும் ஒரேயொரு இடம் அங்குதான் என்பதை அறிந்து அந்தக் கடைகளில் புகுந்துகொண்டோம். அதன்பின் ஜோர்தான் எல்லை. அந்த எல்லையில் எம் நாட்டைப்போன்று இரு இனத்தவரிடையே மனக்கசப்பு! இராணுவக் கெடுபிடி! நாட்டைப் பாதுகாக்க மின்சாரம் பாச்சிய கம்பி வேலிச் சோதனைச் சாவடி போன்றவற்றைக் கடந்து ஜோர்தான் நதிக்கரைக்குச் சென்றோம். நம் அன்பராம் யேசுவுக்கு புனித அருளப்பர் ஞானஸ்நானம் கொடுத்த இடம் அது.

எங்களுடன் வந்த அருட்தந்தை முளங்கால் அளவு தண்ணீரில் இறங்கி நின்று ஒவ்வொருவருக்கும் தலையில் நீர் ஊற்றி எமது திருமுழுக்கு அருட்சாதனத்தைப் புதுப்பித்தார். தூய ஆவியானவரின் பாடல் பாடப்பட்டது. அங்கு என்ன ஓர் ஆனந்தம்! யேசுக்கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்ற நிகழ்வை இறைவார்த்தையுடன் நினைவுபடுத்திக்கொண்டோம்.

பின்பு சிறிய பயணத்தின்பின் ஜெருசலேமை அடைந்தோம். வழியில் தேவமாதா வாழ்ந்த புனித அன்னம்மாளின் வீடு, தந்தை சூசையுடன் தச்சுத்தொழில் செய்த இடம், திருக்குடும்பம் வாழ்ந்த இடம், கபிரியேல் வானதூதர் மங்கள வார்த்தை சொன்ன இடம், எலிசபெத்தம்மாளை மாதா சந்தித்த இடம், இடையருக்கு வானதூதர் தோன்றிய இடம், இப்படியாக ஒவ்வொரு இடத்திலும் அழிவு பாதி, இருப்பது பாதியென அனைத்தும் பாதுகாக்கப்படுவதை அறிந்துகொண்டோம்.

அதன்பின் "Milk Grotto" என்று அழைக்கப்படும் *பால் குகையைச்* சென்றடைந்து அங்கு குழந்தைப்பேற்றின் புதுமைகள் நடக்கும் அதிசயமான இடம் ஒன்றில் பல்லாயிரக் கணக்கான மக்கள் வரிசையில் நின்று அங்கு விற்பனை செய்யப்படும் பவுடரை வாங்க முண்டியடிப்பதை எம் கண்களால் கண்டுகொண்டோம்.

அடுத்ததாக பெத்லேகெம் நகரில் யேசு பாலகன் பிறந்த மாட்டுத் தொழுவத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். பிரமாண்டமான தேவாலயம் மேலே இருந்தாலும் உள்ளே சறுக்கலான சிறிய படிக்கட்டு ஊடாக உள்ளே நுழைந்து மௌனமாக, கவனமாக அமைதியாக வர அறிவுறுத்தப்பட்டோம். முழந்தாட்படியிட்டு ஆரத்தழுவி அந்த இடத்தை முத்தமிட்டு மனம் கலங்கி நிற்கும் பல்லாயிரக்கணக்கான மக்களைக் காணும் போது மனமெல்லாம் உருகிப்போகும் காட்சி. பிரிய முடியாமல் அந்த இடத்தை பிரிந்தோம்.

தொடர்ந்து திபேரியாக் கடல் அங்கு வள்ளத்தில் சுற்றி வந்த மகிழ்ச்சி. சக்கேயுவை அழைத்த இடம், 5 அப்பம், 2 மீன் பெருகிய இடம், மறுரூபமான மலை, மலைப்பொழிவு செய்த மலை, 2000ம் ஆண்டின் ஓலைகள், சுவடிகள் வைக்கப்பட்டிருந்த இடம் ஆகியவற்றைப் பார்வையிட்டோம். ஜெருசலேம் தேவாலயத்தின் பிரமாண்டமான பாறைக் கற்களால் எழுப்பப்பட்ட மதிற்சுவர் (Western Wall) இருந்தது. அங்கு அந்தச் சுவரில் தலையை மோதி அழுது ,குழறி மனம் கலங்கி தமது விண்ணப்பங்களை இடிபாட்டு ஓட்டைகளுக்குள் சொருகத் துடிக்கும் பல்நாட்டு மக்கள் இனத்தையும் கண்டோம்.

(தொடர்ச்சி 18ம் பக்கம்...)

# இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்தினரின் கிறிஸ்மஸ் செய்தி

அமைதியின் அரசனான இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பை கிறிஸ்மஸ் விழா பறைசாற்றி நிற்கின்றது. இறைமகனாகிய இயேசுக்கிறிஸ்து தமது ஆழம்காண முடியாத அன்பை எமக்கு அளிப்பதன் மூலம் எம்முடன் தொடர்புகொள்வதற்கும், எம்மைப் பாவத்திலிருந்து மீட்பதற்கும், எம்மைத் தேடி வருகை தந்ததை நினைவு கூர்ந்து, மகிழ்ச்சியடையும் பாரம்பரியமான ஒரு காலமே இது. இறைவாக்கினரான எசாயா பின்வரும் வார்த்தைகள் மூலம் எமது மீட்பரின் வருகையை முன்மொழிந்துள்ளார். *“ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார். இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம்பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு அவர் இம்மானுவேல் என்று பெயரிடுவார்.”* (எசாயா7:14) மேலும் அவரது சகாப்தம் அமைதியும் செழுமையும் நிறைந்த ஒரு காலமாகத் திகழும் என்று எசாயா கூறுகின்றார். “அவர்கள் தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும், தங்கள் ஈட்டிகளைக் கருக்கரிவாள்களாகவும் அடித்துக்கொள்வார்கள். ஓர் இனத்திற்கு எதிராக மற்றோர் இனம் வாள் எடுக்காது. அவர்கள் இனி ஒருபோதும் போர்ப்பயிற்சி பெற மாட்டார்கள்” (எசாயா 2:4).

நிலையான அமைதி எமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் நாம் மீண்டும் ஒருமுறை கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடுகின்றோம். இலங்கைவாழ் மக்களின் இன்றைய கவலைகள், மனவேதனைகள், அனைத்தின் மத்தியிலும் அவர்கள் அதிமேலான விதத்தில் அமைதிக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றார்கள். எனினும் எமது நாட்டின் அமைதி என்பது இன்னும் நீண்டதூரக் கனவாகவே உள்ளது என்பது உண்மை. கிறிஸ்துவின் பிறப்பை அறிவிக்கும் வானதூதரின் பாடல் அடிகளில் நாம் கேட்பது, “உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக பூமியில் நல்மனதோர்க்கு அமைதி உண்டாகுக” என்பதே. நாம் அனைவரும் ஒரே குரலாக அமைதிக்காகப் பேசும் அதேவேளை இராணுவ யுத்தம் மட்டுமே அமைதிக்கான ஒரே வழி என்பது போன்ற பார்வையையும் கொண்டுள்ளதுபோல் தோன்றுகின்றது.

அதிகளவான வன்செயல்கள், கொலைகள், கொடூரத்தனம் போன்றவை சிறுவர்களைக்கூட அதிகளவு பாதித்துள்ளன. ஒரு உப கலாச்சாரமாகிய கொலையும், வன்செயலும் எமது மக்களின் மத நம்பிக்கைகள் மத்தியிலும் இந்த அழகிய தீவை ஆக்கிரமிப்பதுபோல் தோன்றுகின்றது. எமது நாட்டின் தற்போதைய சூழமைவு பற்றிய எமது பார்வைகள் எத்தகைய வேறுபாட்டைக் கொண்டிருந்தாலும் இங்கு மறக்கமுடியாத ஒரு உண்மை காணப்படுகின்றது. அது பேச்சுவார்த்தை மூலம் ஒரு அரசியல் தீர்வைக் கண்டறிந்து அமைதியை நிலைநாட்டுதல் என்பதேயாகும். எமது நாட்டில் வாழும் அனைத்து மக்களினதும் மனித மாண்புக்கும், சமத்துவத்திற்கும் உத்தரவாத - மளிக்கப்படும்வரை, மொழி, இனம், அன்றேல் மதம் சம்பந்தமான பாகுபாடுகள் நிலவும்வரை, எமது நாட்டில் அமைதியும், இணக்கப்பாடும் நிலவ முடியாது என்பது திண்ணம். இரண்டாம் வத்திக்கான் சங்கம் (1965) கூறியது: “அமைதியைக் கட்டியெழுப்ப வேண்டுமென்றால் அதற்கு முதல் நிபந்தனை மனிதர்களிடையே நிலவும் பிணக்குகளுக்கான காரணங்களை வேரறுத்தலாகும்.” (இன்றைய உலகில் திருச்சபை இல.83) எமது தேசத்தில் பற்றியெரிந்துகொண்டிருக்கும் பிரச்சனைகளிலிருந்து எமது தேசத்தைக் காப்பதற்காகக் கடந்த நான்கு தசாப்பதங்களாக எமது அரசியல் தலைவர்கள் பல்வேறுபட்ட முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். எனினும் இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வை முன்வைத்து ஒரு உடன்பாட்டிற்கு வருவதற்கு உண்மைத்தன்மையான முயற்சிகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்பது எமக்குக் கவலையை அளிக்கின்றது. ஆகவே அமைதியின் அரசரின் பிறப்புவிழாவைக் கொண்டாடும் இந்தப் புனிதமான காலத்தில் நாம் இறைவனின் பெயராலும், எமது மக்களின் பெயராலும் எமது அரசியல் தலைவர்கள் அனைவரிடமும் இரந்து கேட்பது யாதெனில் சுயநலம்மிக்க, இலாப நோக்கைத் தவிர்த்து, தொடரும் அழிவுகளிலிருந்து எமது நாட்டைப்பாதுகாத்து, ஒற்றுமைப்படுத்துவதற்கான செயற்பாடுகளில் தைரியத்துடனும், நம்பிக்கையுடனும் ஈடுபடுங்கள் என்பதே.

ஒற்றுமையின்மை, இணக்கப்பாடின்மை, வன்செயல் கலாச்சாரம், கொலை, ஆகியவற்றை எமது வருங்காலச் சந்ததியினருக்கு முதுசமாக விட்டுச்செல்வது மாபெரும் அநீதி என்பதை நாம் அனைவரும் உணருகின்றோம். எமது ஏனைய அக்கறைகள் அனைத்திற்கும் மேலாக எமது மக்களையும், எமது தேசத்தையும், நிலைநிறுத்தத் திடசங்கற்பம் பூணுவோமானால் எமது நாட்டிற்கான நம்பிக்கை நிலைக்கும். ஒருசிலர் எண்ணுவதுபோல ஆயுதபோராட்டம் மட்டும் எமது தேசத்தின் பிரச்சினையைத் தீர்க்கப் போவதில்லை என்பதை நாம் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகக் கூறிவந்ததுபோல் மீண்டும் கூறுகின்றோம். பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு மட்டுமே அனைத்து மட்டங்களிலும் எமது மக்களின் நியாயபூர்வமான ஆவல்களைத் திருப்திப்படுத்தும். இந்தக்காலத்தின் உடனடித் தேவை இதுவே. இராணுவ வெற்றியின்பால் ஏற்படும் மூடத்தமான ஆர்வத்திற்கோ, அன்றேல் இன, மத, மொழி அடையாளம் ஆகியவற்றிற்கோ இடம்கொடுக்க முடியாது. நாம் இலங்கையர்கள் என்பதை உணர்ந்து இன, மத, மொழி, பாகுபாடுகளைக் கடந்து, நாம் அனைவரும் இலங்கை என்ற குடும்பத்தைச் சார்ந்த சகோதரர், சகோதரிகள் என்ற மனநிலையில் ஒருவர் ஒருவரை ஏற்று வாழும்பொழுது அமைதிக்கான தடைகள் அனைத்தையும் எம்மால் மேற்கொள்ளமுடியும்.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் அதிகளவான ஆண்களும், பெண்களும், சிறார்களும் துன்பத்தை அனுபவிப்பதனால் நாம் இவ்வருடம் வெளிப்படையான ஆடம்பரங்களுடனும், களியாட்டங்களுடனும் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாட முடியாது. ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து தன்னையே தாழ்த்தி, மானிட உடல் எடுத்து, எம் மத்தியில் வந்ததன்மூலம் துன்பப்படுவோர் மட்டில் எமது கவனத்தைத் திருப்புவதற்கு வழிகாட்டியுள்ளார். விசேடவிதத்தில் ஒரு இல்லத்தின் பாதுகாப்பும், அடிப்படைத் தேவைகளும் கிடைக்கப்பெறாது அகதி முகாம்களில் வாடும் சிறார்களின் பக்கமாக எமது கவனத்தைத் திருப்ப வழிகாட்டுகின்றார். வெளிப்படையான கொண்டாட்டங்களுக்கான தேவையற்ற செலவுகளை நாம் தவிர்த்தோமானால் இத்தகைய தியாகங்களின் கனியை, தற்போதைய நிலைமைகளினால் அதிகளவு பாதிப்புக்குள்ளாகியுள்ள. மறைமாவட்டங்களுக்கு, விசேடவிதத்தில் சிறார்களின் நலன்களுக்காக அளிக்க முடியும்.

எமது நாட்டிற்காக இந்தகாலத்தைச் செபத்திலும், தியாகத்திலும் செலவிடும்படி நாம் எமது மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம். இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பாகிய இந்த அழகிய நிகழ்வை நாம் துன்புறும் எமது சகோதரரில் கொண்டுள்ள அன்பினதும், அக்கறையினதும் வெளிப்பாடாகக் கொண்டாடுவோமேயானால் கிறிஸ்மஸ் விழாவின் உண்மையான கனியான உள்ளார்ந்த அமைதி, மகிழ்ச்சி, நம்பிக்கை ஆகியவற்றைத் தந்து இறைவன் எம்மை ஆசீரால் நிரப்புவார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

## மடுத்திருத்தலத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி
# மன்னார் குருக்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

*மன்னார் மறைமாவட்டக் குருக்கள் மடுத்திருப்பதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி கடந்த டிசம்பர் 6ம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களுக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர். அக்கடிதத்தின் முழு விபரத்தையும் இங்கே தருகின்றோம்.*

மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு,

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த குருக்களாகிய நாம் எமது மறைமாவட்ட ஆயருடன் இணைந்து ஜனாதிபதியாகிய தங்களுக்கு இந்த அவசர வேண்டுகோளை விடுக்கின்றோம்.

மடுத்திருத்தலமானது இலங்கையிலுள்ள கத்தோலிக்க மக்களால் மட்டுமல்ல ஏனைய மதங்களைச் சார்ந்த பக்தர்களாலும் மதித்துப் போற்றப்படும் திருத்தலமாகும். தற்பொழுது தமிழீழப் புலிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்குமிடையே மடுத்திருப்பதியின் சுற்றாடலில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பாரிய யுத்தமானது அனைவராலும் போற்றி வணங்கப்படும் இத்திருத்தலத்தினதும், மடு அன்னையின் திருச்சொரூபத்தினதும் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. இதனையிட்டு மக்கள் மிகுந்த வேதனையும், கவலையும் அடைந்துள்ளனர்.

கடந்த இரண்டு நாட்களாக மடுப்பிரதேசத்தைச் சுற்றிலும் அடிக்கடி நிகழ்ந்துகொண்டிருக்கும் பாரிய எறிகணைத் தாக்குதலினால் நாம் மிகுந்த துயரமும் குழப்பமும் அடைந்துள்ளோம். கார்த்திகைத் திங்கள் 13ம் நாள் மாலை 5.00 மணியளவில் மடுத்திருப்பதியைச் சுற்றிலும் எறிகணைகள் விழுந்துகொண்டிருந்தன. அவற்றில் ஒன்று திருத்தலத்திலிருந்து 50 மீற்றர் இடைவெளிக்குள் விழுந்து வெடித்துச் சிதறியது. இதன் காரணமாக பொதுமக்கள் இருவர் பலத்த காயத்துக்குள்ளாகினர். அதில் ஒரு சிறுவன் சிறிது நேரத்தில் உயிரிழந்தான்.



இதனால் மேதகு ஜனாதிபதி அவர்களே! இந்தத் திருத்தலத்தைச் சுற்றிலும் தொடச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் மோதல்கள் காரணமாக இந்தத் திருத்தலத்திற்கோ, மடு அன்னையின் திருச் - சொருபத்திற்கோ எவ்வித தீங்கும் நேரிடாது காப்பதற்கான அக்கறை எடுத்து உடனடியாகச் செயற்பாட்டில் இறங்க வேண்டுமென்று நாம் விநயமாகத் தங்களை வேண்டி நிற்கின்றோம். யுத்தத்தில் ஈடுபடும் இருதரப்பினரதும் இந்தத் திருத்தலத்திலிருந்து 1 1/2 கிலோ மீற்றர் தூரத்திற்கு விலகி இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

மேதகு ஜனாதிபதி அவர்களே! தாங்கள் இந்தத் திருத்தலத்தின்மீது கொண்டுள்ள அக்கறைக்கும், அன்புக்கும் நாம் நன்றி கூறுகின்றோம். எமது வேண்டுகோள் தங்களால் செவிமடுக்கப்பட்டு இந்நாட்களில் இந்தத் திருத்தலம் எந்தவிதமான அழிவுகளிலிருந்தும் பாதுகாக்கப்படும் என்பதில் நாம் நம்பிக்கையாயிருக்கின்றோம். போராட்டத்திலிருந்து விலகியிருப்பதன் மூலம் இந்தத் திருத்தலத்தைப் பாதுகாக்கும்படி நாம் விடுதலைப் புலிகளையும் கேட்டுள்ளோம்.

இதற்கு முன்னர் இலங்கை ஆயர் மன்றத்தினரால் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோளையும், அண்மையில் எமது ஆயரினால் ஜனாதிபதியாகிய தங்களுக்கு விடுவிக்கப்பட்ட வேண்டுகோளையும் இங்கு நினைவுபடுத்துகின்றோம். எமது அன்புக்குரிய தேசத்திற்கு மடு அன்னை அமைதியைக் கொண்டுவருவாரா்க!

## தேசிய மட்ட கவிதைப் போட்டியில் சான்றுபெற்ற கவிஞர்
# அ. மன்னார் மணி



*கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 30.11.2007ல் நடைபெற்ற பிரதேச செயலகங்களுக்கு இடையிலான முகாமைத்துவப் போட்டி பரிசளிப்பு நிகழ்வின்போது பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட அரச சேவையின் அனுபவங்களின் மீள் நிர்மாணம் தொடர்பிலான கவிதைப் போட்டியில் திரு. அ. மரியதாஸ் (மன்னார் மணி) அவர்கள் சான்றினையும், பரிசினையும் பெற்றுக்கொண்டார்.*

*கலாச்சாரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட தேசிய இலக்கிய கலைப்பெருவிழா சிறுகதைப்போட்டி, மற்றும் கவிதைப்போட்டிகளில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மண்ணின் கவிஞரை மன்னா மனமார வாழ்த்துகின்றது.*

*அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் ஏற்பாடுசெய்யப்பட்ட அரசசேவையின் அனுபவங்களின் மீள் நிருமாணம் தொடர்பிலான தேசிய மட்டக் கவிதைப் போட்டியில் பரிசுபெற்ற அந்தக் கவிதையை இங்கே தருகின்றோம்*

## மக்கள் மனங்களில் என்றும் மகிழ்வுடன் குடியிருப்போம்

**- அ. மன்னார் மணி**

இதயங்கள் ஒன்றுகலந்து இன்பமாய் வழிநடந்து
வாழ்வு நலம் புரிந்திட வழிபல சமைத்து நிற்போம்.

நம் விதியை நாமே நிர்ணயிப்போம்
முத்தின விதிதனை நலம்பெறக் கொள்வோம்
மக்கள் சேவகனாய் மக்களால் மக்களுக்காய்
மக்களே மகேசர்களாக தன்னலம் தவிர்த்து
நானிலம் நினைந்து நன்னயம் நல்கிடுவோம்.

மாந்தர் எமை நாடுவர் நலம்செய்வோம் அப்போது - என
வாழாதிருக்காமல் நாமே தேடிச்சென்று
நல்லபல சேவைகளை நயமுடனே செய்வோம்.

பொதுமக்கள் சேவகர்தான் பகிரங்க சேவையாளர்
மக்கள் சேவையாளர்தான் அரசாங்க சேவையாளர்
என்பதை அறிவோம் நாம்.
மக்களின் உடனடித்தேவையை நிறைவேற்றவென்றே
கணணி வந்ததுவே கண்மணியாக.
தகவல் தொழில்நுட்பமதின் துரித வளர்ச்சி அறிந்து
துரித சேவையில் மக்களின் உயர்ச்சி உணர்ந்து
இன்றே செய்வோம் அதனை நன்றே செய்வோம்
வேதனம் பெறுவோம் மக்களின் வேதனை அறிவோம்
வேதனத்திற்காகவா? மக்கள் வேதனையகற்றவே வேலை
அதுவே நம் கடமையென அறிவோம்.

மக்கள் நலமறிந்து உளம் நினைந்து தக்க தருணமறிந்து
அனர்த்தவேளை பார்த்து காலமறிந்து செய்வோம் எனின்
ஞாலம் போற்றுமே நினைந்து.
அரச அலுவலர் யாம் மக்கள் சேவையாளர்தான்
அர்ப்பணிப்போம் எம்மை - மக்களுக்காக நாமாக
நாமே மக்களாக – எனின்
வல்ல தேவனும் மெல்லச் சிரிப்பான்
அள்ளித்தருவான் கிள்ளி எடுப்பான்
உள்ளத்து எம் வேதனைகளை.

மக்கள் மனமறிந்து தன்னார்வத் தொண்டனானால்
மக்கள் மனங்களில் என்றும் மகிழ்வுடன் குடியிருப்போம்.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது

அ. றேகா, மறைக்கல்வி நிலையம், மன்னார்

### அன்னாசி ஐஸ்கிறீம்



**தேவையான பொருட்கள்**

கிறீம் - 400 கிராம் சர்க்கரை – 50 கிராம்
கோழிமுட்டை – 15 அன்னாசிப் பழம் - 1
ஜெலட்டீன் - 8 மே.கர. பைனப்பிள் எசன்ஸ் - 1 ரீ ஸ்பூன்
மஞ்சள் கலர் - 1/4 ரீ ஸ்பூன்

செய்முறை : முட்டையை உடைத்து வெண்கரு, மஞ்சள் கரு எனப்பிரித்து தனியாக அடித்துக்கொள்ள வேண்டும். மஞ்சள் கருவோடு சர்க்கரையைச் சேர்த்துக் கரைய அடிக்க வேண்டும். அன்னாசியை தோல் சீவி, சிறு சிறு துண்டுகளாக வெட்டிக்கொள்ள வேண்டும். ஜெலட்டீனை சிறிது சர்க்கரை சேர்த்து வெந்நீரில் கரைத்துக்கொள்ள வேண்டும். முட்டையின் மஞ்சள் கருவை வெந்நீரில் வைத்து ஆவி வரும்வரை அடிக்க வேண்டும்.

மஞ்சள் கருவோடு ஜெலட்டீனை விட்டுக் கலக்கிக் கொள்ளவும். அன்னாசித் துண்டுகள், எசன்ஸ் உட்பட எல்லாவற்றையும் சேர்த்து கலவையிட்டுக்கொண்டு பிரீஸரில் (கடுங்குளிரில்) கலவையை வைத்துக் கெட்டிப்படுத்த வேண்டும்.

# பெரியப்பா பதில்கள்





கேள்வி : பெரியப்பா விவாகரத்துக்கள் ஏன் ஏற்படுகின்றன?
*- முரளிதரன், . வவுனியா*

பதில் : அலசி அலசி மூன்று காரணங்களைக் கண்டுபிடித்து விட்டேன். முதலாவது காரணம் விவாகம் (விவாகம் ஆனால்தானே விவாகரத்து) இரண்டாவது தவறான யூகம், மூன்றாவது தவறான வியூகம்.



கேள்வி : பெரியப்பா, ஒருவருடைய வாழ்க்கையில் மிக முக்கியமான மூலதனமாக நீங்கள் எதைப் பார்க்கிறீர்கள்?
*- திருமுருகன், செட்டிகுளம்.*

பதில்: "அமைதியான மனமே உங்களின் மிக முக்கியமான மூலதனம்" என்கிறார் விவேகானந்தர்.

கேள்வி : 'வீடு பேறு' என்றால் என்ன?
*- மொழிவரதன், அடம்பன்*

பதில்: வீட்டில் முதலில் இருப்பது 'படி' இது நம்மை படிக்க வேண்டும் என்று கூறுகின்றது.
அடுத்து இருப்பது 'நடை' இது நாம் படித்தபடி நடக்க வேண்டும் எனக் கூறுகின்றது.
அடுத்து இருப்பது, 'கூடம்' அது கூடி வாழ வேண்டும் என்று அறிவுறுத்துகின்றது.
அடுத்து இருப்பது, 'முற்றம்' நம் இலட்சியம் முற்றுப்பெற்றால் மோட்சம் கிட்டும் என்பதை உணர்த்துகின்றது.
இதுவே 'வீடு பேறு' என்பதாகும்.

கேள்வி : இன்றைய இளைஞர் பற்றி?
*- மகேந்தர வர்மன், மன்னார்.*

பதில் : பல இளைஞர்கள் படிப்பில் கெட்டி, காதலில் சுட்டி, வேலையில் மட்டி.

கேள்வி : பெரியப்பா, கடன் வாங்கலாமா?
*- வினோதினி, பண்டிவிரிச்சான்*

பதில் : கடனோடு கவலையையும் வாங்குவதாக இருந்தால் வாங்குங்கள்.


கேள்வி : பிளாஸ்ரிக் பொருட்கள் விடயத்தில் ஒரு குடிமகனின் கடமை என்று எதைக் கருதுகின்றீர்கள்?
*- மரிய வளன், உயிலங்குளம்*

பதில்: காலத்தால் அழியாதவை கல்வெட்டுக்கள் மட்டுமல்ல. பிளாஸ்ரிக்கும்தான். பிளாஸ்ரிக் மனித குலத்திற்கு எதிராக உருவாக்கப்பட்ட மென்மையான எதிரி. இதை நாம் உணர்ந்தால் மாற்றங்கள் தாமாக வரும்.

கேள்வி : இரவுப் பயணத்தில் தூங்கலாமா?
*- புதுமைப் பித்தன், முருங்கன்*



பதில்: இரண்டு பேரைத் தவிர மற்றவர்கள் தூங்கலாம். அந்த இரண்டு பேர் தூங்கினால்தான் பயம். ஒருவர் ஓட்டுனர். மற்றவர் நடத்துனர். ஓட்டுனர் தூங்கினால் நாம் அனைவரும் நிரந்தரமாக தூங்க வேண்டியேற்படலாம்.



கேள்வி : இன்றைய நமது நாட்டின் கல்வி முறைமை-குறிப்பாக உயர்கல்வி முறைமை எப்படி இருக்கிறது?
*- நித்தியா, மட்டக்களப்பு*

பதில் : இன்றைய கல்வி புதைத்த பிணங்களைத் தோண்டி எடுத்து தூசி துடைத்துக்கொண்டிருக்கிறது.

கேள்வி : வாழ்க்கை யாருக்கு உற்சாகமாக இருக்கும்?
*- மல்லிகா, மணலாறு*

பதில்: வியப்பாக வாழ்க்கையைப் பார்ப்பவருக்குத்தான் அது உற்சாகமாக இருக்கும். யாரால் வாழ்க்கையை வியப்பாகப் பார்க்க முடியும் தெரியுமா! இடைவிடாமல் கற்றுக்கொள்கிறவருக்குத்தான் வாழ்க்கை வியப்பாக இருக்கும்!

கேள்வி : பல்வேறு இழப்புக்கள் மத்தியில் மரணமே மோசமானது என நான் கருதுகின்றேன். பெரியப்பா என்ன நினைக்கிறீர்கள்?
*- சத்தியசீலன், வவுனியா*

பதில் : மரணத்தைவிட மோசமானது மறக்கப்படுவது.

# நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 23 - 07 - 1930
உதிர்வு 31 - 12 - 2006

### திருமதி. அ. சூசையம்மா கூஞ்ஞு (தலைமன்னார் மேற்கு)

"சீவியத்தில் உம்மை நேசித்தோம். மரணத்திலும் உம்மை மறவோம்"

பண்பின் உறைவிடமாய், பாசத்தின் இருப்பிடமாய் ஆனந்தம் பொங்கும் இல்லத்தின் அன்புத் தலைவியாய் இருந்து மக்களை நல்மக்களாய் ஆக்கிய ஒளி விளக்கே! உம் பிரிவு ஆண்டு ஒன்றானாலும் உம் நினைவு என்றும் எம்மனதில் நீங்காது. நீர் காட்டிய நல்வழிகள் என்றும் எம்மில் மாறாது.

*என்றும் உம் நினைவுகளுடன்,*
*பிள்ளைகள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*

சகோதரி :அருட்சகோதரி கத்தரின் (பிலிப்பைன்ஸ்)
மருமகள் : அருட்சகோதரி கொரற்றி (யாழ்.)
தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.

## 18ம் ஆண்டு நினைவு



மலர்வு 24 - 12 - 1971
உதிர்வு 02 - 01 - 1990

### செல்வி. மேரி ஜக்குலின் (ஜெயந்தி) (பெரிய பண்டிவிரிச்சான்)

ஆண்டு பதினெட்டு வந்தாலும் உன் அன்பும் பாசமும் புன்னகை முகமும் எம்மைவிட்டு என்றும் மாறாது. என்றும் இறை ஒன்றிப்பில் இணைந்திடப் பிராத்திக்கின்றோம்.

உயிரும் உயிர்ப்புமான இறைவா! உம்மிடம் வந்திருக்கும் ஜெயந்திக்கு நித்திய பேரின்ப வாழ்வை அளித்திட உம்மை மன்றாடுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
*அம்மா, அப்பா, சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.*

தகவல்: றொபேட் குடும்பத்தினர்,
61, பெரிய பண்டிவிரிச்சான்.

## 31ம் நாள் நினைவு



மலர்வு 10 - 04 - 1928
உதிர்வு 06 - 11 - 2007

### திருமதி. அற்புதம் சவிரிமுத்து (ஓய்வுபெற்ற ஆசிரியை) (புத்திரர்கண்டான், முருங்கன்)

*கண்ணை இமை காப்பதுபோல்* என்கின்ற உவமை நீங்கள் எங்களைக் காத்துக்கொண்ட மாதிரிக்குப் பொருந்தாது. ஏன்! எந்த உவமையுமே பொருந்தாது! உள்ளுக்குள்ளே தகித்துக்கொண்டு எங்களுக்கு ஒளி வழங்கி ஒரு அக்கினிச் சூரியனாய் அம்மா நீங்கள்! நீண்ட - சவால்கள் நிறைந்த ஒரு பந்தயத்தில் ஓடினீர்கள். ஓட்டத்தை முடித்துக்கொண்டீர்கள். அமைதியில் நீங்கள் இளைப்பாற எங்கள் நன்றி நிறைந்த செபங்கள்.

*இவரின் பிரிவால் துயருறும், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்*

*தகவல்: செ. றூபன் (பேரன்)*
*"றோஸ் வாசா" புத்திரர்கண்டான்,*
*முருங்கன்.*

## மீட்பராம் என் இறைவன்...

(16ம் பக்கத் தொடர்ச்சி...)

இராயப்பரின் மாமியாரை குணமாக்கச் சென்ற யேசு இறைவனின் சித்தத்தை நிறைவேற்ற அங்கேயே தங்கி இருந்த வட்டவடிவமான சிறிய அறை, சீடர்களைத் தெரிந்தெடுத்த இடம், யூதாஸால் காட்டிக்கொடுக்கப்பட்ட இடம், ஜெஸ்தமனிப் பூங்கா, சிலுவை சுமந்து ஏறிய கரடுமுரடான அந்தக் கல்வாரி மலை போன்றவற்றில் மெய் சிலிர்க்க, உள்ளம் பதற, பாடுகளைத் தியானித்து நாங்களும் அம்மலையில் ஏறினோம்.

உச்சியை சென்றடைந்தால் பிலாத்துவின் அரண்மனை. அரண்மனையில் இருந்து ஓர் ஓட்டை மூலம் யேசுவை கயிற்றேணியில் இறக்கி சிறை வைக்கப்பட்டு நொறுக்கப்பட்ட சிறிய குகை போன்ற காற்றுப்புகாத அறை, மனதை உருக்கும் காட்சி அது. யேசு சிலுவையில் அறையப்பட்ட மலையை ஓர் சிறு துவாரத்தின் மூலம் எம் கையால் தொட்டுக்கொண்டோம். மயான அமைதியுடன் மக்கள் கண்ணீர் மல்க நின்று செபிக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சி!

இப்படியாக எனது புனித பூமியின் பயணம் என் இறைவனாகிய என் தெய்வம் பிறந்து, வாழ்ந்து, போதித்து, புதுமை செய்து, நண்பனால் காட்டிக்கொடுக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு, மரணித்த அந்த மண்ணைப் பார்த்து, அந்தப் பாதையில் பயணம் செய்து, பாடுகளை மனதில் பதித்துவர என் இறைவன் தந்த இந்த மாபெரும் நன்மைத்தனத்திற்கு நன்றி சொல்லும் வேளை இது.

எத்தனை பணம் கொடுத்தாலும் விலைமதிக்க முடியாத சொத்து அது.

## 4ம் ஆண்டு நினைவு



மலர்வு 22 - 08 - 1961
உதிர்வு 02 - 12 - 2003

### பீ. ஸ். நீக்கிலாஸ் லெம்பேட் ஜீவா - (வங்காலை)

மின்னாமல் இடியொன்று வீழ்ந்ததே.
எண்ணாமல் இருக்க கனவொன்று மறைந்ததே.
நிமிர்ந்த மாமலையொன்று சாய்ந்ததே.
பூத்துக் குலுங்கிய மரம் மண்மீது சரிந்ததே
விளை நிலமொன்று காய்ந்ததே.
பசுஞ்சோலையொன்று கருகியதே
ஏங்கி நிற்கின்றோம் ஐயா!
ஆறுதல் கொள்ளும் ஆண்டவன் மடியில்
இறைவனின் பசுமையில் அமைதியாகட்டும் உம் நித்திய ஆன்மா.
சாந்தி!! சாந்தி!! சாந்தி!!

*உங்கள் பிரிவால் துயருறும்*
*மனைவி, ஸ். நீ. ஜானகி,*
*அம்மா, பிள்ளைகள். மருமகள்.*

## 5ம் ஆண்டு நினைவு



மலர்வு 15 - 01 - 1985
உதிர்வு 12 - 12 - 2002

### மத்தியாஸ் சிரான் டயஸ் (தலைமன்னார் கிராமம்)

*"என் உயிரே ஆண்டவரைப் போற்றிடு"*

சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களுக்கு! எத்தகைய சுமைகளை மனிதர்கள் சுமந்து சேர்ந்திருக்கின்றார்கள்?
எம் இளைய இளைஞனே! அன்பின் ஆருயர் உயிரே. அமைதி வாழ்வில் அழைப்பின் சுவை காண சவால்கள் நிறைந்த உன் வாழ்வுக்கு ஆழமானதோர் அர்த்தம் கொடுக்க நீ மறைந்து ஐந்து ஆண்டுகள் ஆகின்றன அப்பனே!
எம் மனதைவிட்டு என்றும் அகலாது உம் நினைவு. உன் ஆன்ம சாந்திக்காய் தினமும் இறைவனை வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
*அன்பு அம்மா, அப்பா, அக்கா, தம்பி, உற்றார், உறவினர்கள்.*

## 45ம் நாள் நினைவு



மலர்வு 16 - 08 - 1928
உதிர்வு 16 - 11 - 2007

### திரு. லாசர் வரப்பிரகாசம் (நீராவிப்பிட்டி, முள்ளியவளை)



எம் அன்பின் இனிய தந்தையே!
அன்பிற்கு இலக்கணமாய்,
பாசத்தின் பிறப்பிடமாய் இருந்து
எம்மை அரவணைத்தீரே.
இன்று நாம் ஆதரவற்று
கலங்குகின்றோம் ஐயா!
உங்கள் அன்பு முகத்தை
எப்படி மறப்போம்?
கலையாத காவியமாய் கண்ணெதிரே நிற்கின்றீரே
உங்களின் ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
*அன்பு மனைவி அக்னேஸ், பிள்ளைகள், சகோதரி, மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.*

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 09 - 09 - 1933
உதிர்வு 22 - 12 - 2006

### செபஸ்தியாம்பிள்ளை சூசைப்பிள்ளை (பாலைக்குளி, நானாட்டான்)

"ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது"

அண்டி வந்தோர்க்கிரங்கிடும் அன்பான ஆண்டவரே. தெண்டனிட்டு வேண்டுகின்றோம் தயைபுரியும் அடியோர்க்கு. மண்ணினின்று விண்ணிற்கு உம் திருவுளப்படி அழைத்துக்கொண்ட உம் மகன் சூசைப்பிள்ளை என்பவருக்கு வான் வீட்டில் இடமளித்து முடிவில்லாப் பேரின்பத்தில் நிலைத்திருக்க அருள்புரியும்.

இவரின் பிரிவால் துயருறும்:
*அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல - 68
## யோபு 1 - 8

உங்கள் விடைகளை 10. 01. 2008க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | 03 | | 04 | | | | | | 05 | |
| | ✱ | | 06 | | 07 | | | ✱ | | |
| | 08 | | | | | 09 | | | | |
| | | 10 | | | | 11 | 12 | | | |
| | | | | | 13 | | | | 14 | |
| ✱ | 15 | | | | | | ✱ | | | |
| | | ✱ | 16 | | | | | 17 | | |
| | | | | | 18 | | | | | |
| | 19 | | | | | 20 | | | | |
| 21 | | | | ✱ | | | 22 | | | 23 |

### இடமிருந்து வலம்

1. கீழை நாட்டு மக்கள் எல்லாரிலும், இவரே மிகப் .................. இருந்தார்.
3. உமது கையைநீட்டி அவனுடைய ..................... சதைமீது கை வையும்.
6. அல்லது ............. பெறாக் கருவைப்போலவும், ஒளியைக் காணாக் குழவியைப்போலவும் அழிந்திருப்பேன். (இறுதி எழுத்து 1வது எழுத்துக்குப் பின்னே நிற்கிறது)
8. எனக்கு ............................ இல்லை, ஓய்வு இல்லை, அமைதி இல்லை, அல்லலே வந்துற்றது.
10. வணிகர் கூட்டம் தம் ................................. மாற்றுகின்றது.
15. தொடரும் ........................ துள்ளி மகிழ்வேன்.
16. கடற்கரை ........................... இப்போது அவை கனமானவை.
19. காட்டுக் கழுதைக்குப் புல் ............... அது கனைக்குமா?
21. உமக்குரிய -------------- மீண்டும் ஈந்திடுவார்.

### மேலிருந்து கீழ்

1. அப்போது திடீரெனப் ................. பாலை நிலத்திலிருந்து வீசி வீட்டின் நான்கு மூலைகளிலும் தாக்கியது.
2. சாத்தானும் ஆண்டவரின் முன்னின்று ...............ப் போனான்.
4. வானத்தை நோக்கித் தங்கள் தலையில் வாரிப்போட்டுக் கொண்டார்கள்.
5. தீவினையை உழுது ..................... விதைத்தவர் அறுப்பது அதையே.
8. .....................ப் பாரும், குற்றமற்றவர் எவராவது அழிந்ததுண்டோ?
11. கடற்கரை ...................... இப்போது அலை கனமானவை.
14. கற்குவியலில் பின்னிடும் அவர்களின் வேர்கள் ................ இடம் தேடும்.
17. உம் செல்வத்திலிருந்து என் பொருட்டுக் ................க் கொடும் என்றோ சொன்னதுண்டோ?

### வலமிருந்து இடம்

2. ஒருநாள் தெய்வப் ................ ஆண்டவர் முன்னிலையில் ஒன்று கூடினர்.
5. நன்மையைக் கடவுளிடமிருந்து பெற்ற நாம் ஏன் ..............ப் பெறக்கூடாது?
9. அதைப் புதையலினும் மேலாய்க் ................. த் தேடுகிறார்கள்.
11. மண் முகத்தே .....................ப் பொழிபவரும் வயல் முகத்தே நீரைத் தருபவரும் அவரே.
13. படுக்கும்போது எப்போது ................ என்பேன்.
14. அடுத்திருப்போர்க்குக் ...................... காட்டாதோர் எல்லாம் வல்லவரையே புறக்கணிப்போர்.
18. இதோ கடவுள் ................ மனிதர் பேறுபெற்றோர் (இறுதி எழுத்து 1வது எழுத்துக்குப் பின்னே உள்ளது)
20. காரணமின்றி அவனை ................... நீ என்னை அவனுக்கு எதிராகத் தூண்டிவிட்டபோதிலும், அவன் தன் மாசின்மையில் உறுதியாக நிலைத்துள்ளான். (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
22. உமக்குரிய உறையுளை ............ ஈந்திடுவார் (3வது எழுத்து 1வது எழுத்துக்குப் பின்னே உள்ளது)

### கீழிருந்து மேல்

7. அது .....................யின் கண்விழிப்பைக் காணாதிருக்கட்டும் (2ம் 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
9. பழுத்த வயதில் தளர்வின்றிக் கல்லறை செல்வீர் பருவத்தே மேலோங்கும் .................... போல். (குழம்பியுள்ளது)
12. அவரது துயரின் ..............க் கண்டு எவரும் ஒரு வார்த்தைகூட அவருடன் பேசவில்லை.
15. இறைப்பற்றில்லாரின் நம்பிக்கை ....................போம்.
17. எளியவரை வலியவரின் ...................... மீட்கின்றார்.
21. இப்பொழுதோ நான் மண்ணுக்குள் .....................ப் போகின்றேன்.
22. என் ............................ மன்னியாதது ஏன்?
23. இருப்பினும் உம் வாயைச் சிரிப்பாலும் ........................ மகிழ்வொலியாலும் நிரப்புவார்.

## மன்னார் மாவட்ட அருட்பணித் திட்டமிடல் மாநாடு...

(2ம் பக்கத் தொடர்ச்சி...)

ஐ) மக்கள் எல்லோரும் சேர்ந்து பாடக்கூடிய விதத்தில் பாடல்களைத் தெரிவு செய்தல். வழிபாட்டிற்கு முன்னர் பாடல்களைப் பயிற்றுவித்தல்.

ஒ) மறைமாவட்ட ஆணைக்குழு ஒவ்வொன்றும் தங்களோடு பணிபுரியும் பணியாளர்கள் மத்தியில் இறைவார்த்தைப் பகிர்வுப் பயிற்சியை வழங்கி அவர்கள் தனியாகவும் குழுவாகவும் இறைவார்த்தையை வாசிக்கவும், செபிக்கவும் உதவுதல்.

ஓ) திருப்பலியில் : முதல் இறைவார்த்தை வாசகத்திற்குப் பின்வரும் தியானத்திற்குரிய திருப்பாடல்களை மாத்திரமே விதிவிலக்கின்றிப் பயன்படுத்தல். தியானத் திருப்பாடல்களுக்கு இலகுவான இசை அமைத்து வழங்கும் திட்டத்தை மறைமாவட்டம் முன்னெடுத்துச் செல்லும்.

**தீர்மானம் : 05**
**மறைமாவட்ட சிறப்புப் பணிக்குழுக்களின் (ஆணைக்குழுக்களின்) செயற்பாடு.**

மறைமாவட்டத்தின் இலக்கையும், எதிர்பார்ப்பையும் கருத்திற் கொண்டு மறைமாவட்ட அருட்பணிக் குழுக்கள் (ஆணைக்குழுக்கள்) பங்குத் தந்தையோடு தொடர்புகொண்டோ அல்லது அவர்களின் வேண்டுகையின்படியோ தங்களது பங்களிப்பை வழங்குவர். இதன் அடிப்படையில்:

அ. திருவழிபாட்டு ஆணைக்குழு தனிநபர், குழுவோடு இணைந்து செயற்படுத்துவதற்கு, இறைவார்த்தை செபப் பங்கேற்றலை அர்த்தமுள்ளதாக்க மேலும் வேண்டிய திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும்.

ஆ. சிறுவர்களுக்கான பயிற்சிக்கு மறைமாவட்ட திருப்பாலர் சபை ஆணைக்குழுவும்.

இ) மாணவர்கள், மற்றும் கல்விசார் பணியாளர்கள், தன்னார்வப் பணியாளர்கள், மறையாசிரியர் ஆகியோரின் பயிற்சிக்கு மறைமாவட்ட கல்வி, மறைக்கல்வி, விவிலிய ஆணைக்குழுவும்.

ஈ) இளைஞர், இளம் பெண்களுக்கான பயிற்சிக்கு மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவும்.

உ) குடும்பங்கள், பக்திச் சபைகள், பங்கு – ஆலய மேய்ப்புப் பணிச்சபை, அரச/ அரச சார்பற்ற பணியாளர்கள் போன்றவற்றிற்கான பயிற்சிக்கு மறைமாவட்ட பொதுநிலையினர் - குடும்ப ஆணைக்குழுவும் உதவியளிக்கும். (வீடுகளில் முக்கியமான நிகழ்வுகளின்போது செய்யப்படும் இறைவார்த்தை செபவழிபாட்டிற்கான வழிகாட்டிகளை இவ் ஆணைக்குழு தயாரித்து வழங்கும்.)

ஊ) மறைமாவட்ட சமூகத்தொடர்பு ஆணைக்குழு இதற்கென பல்வேறு கலை நிகழ்வுகளைத் தயாரித்து பங்குகளிற்குச் சென்று விழிப்புணர்வை ஏற்படுத்தும். பங்குகள் தாமாக இவற்றைச் செயற்படுத்த உதவிபுரியும்.

எ) மன்னா பத்திரிகை இறைவார்த்தையை மையப்படுத்தி தமது ஆக்கங்களை வெளியிட்டு, மக்களின் அனுபவங்களைப் பகிர்ந்து பக்கங்களை இதற்கென ஒதுக்கியும் வேறு வழிகளிலும் சிறப்புப் பணிபுரியும்.

ஐ) அன்பிய ஆணைக்குழு, அன்பிய வழிபாடுகளையும் அதன்வழி தனிச் செபத்தையும் ஆழப்படுத்தக்கூடிய வழிபாட்டுப் படிமுறைகளைத் (Modules) தயாரித்து பயிற்சியளித்து உதவும்.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து




## ஆன் கிறிஸ்சாந்திக்கா (சுமனா)

மன்னார் பனங்கட்டுக்கொட்டு மேற்கில் வசிக்கும் திரு. திருமதி. அன்ரனி சுகுணாவின் அன்பு மகள் ஆன் கிறிஸ்சாந்திக்கா (சுமனா) தனது முதலாவது பிறந்த நாளை 24.12.2007 அன்று தனது இல்லத்தில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அம்மா, அப்பா, அப்பம்மா, அப்பையா, அம்மம்மா, அம்மையா, அண்ணாமார், கொழும்பில் வசிக்கும் தொட்டப்பா, குடும்பம் அன்பு சிஸ்ரர் மாமி எஸ்தர் (கார்மேல் அன்பகம், புத்தளம்) இலண்டனில் வசிக்கும் சுத்தர் மாமா குடும்பம், சவுதியில் வசிக்கும் மாமாமார் குடும்பத்தினர், தலைமன்னாரில் வசிக்கும் யூடி மாமி குடும்பம், மன்னாரில் வசிக்கும் பெரியம்மா, பெரியப்பா, சின்னையா, சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார், மாமிமார், மாமாமார், மாதிரிக்கிராமத்தில் வசிக்கும் சந்திரசேகரன் பெரியப்பா குடும்பம் மற்றும் அனைவரும் செல்வி ஆன் கிறிசாந்திக்காவை குழந்தை யேசுவின் அருள்பெற்று நீடுழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*பனங்கட்டுக் கொட்டு மேற்கு, மன்னார்*

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 66ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:**

**முதலாம் பரிசு:**
தி. காமிற்றா
A/50, மடுக்கரை
நானாட்டான்.

**இரண்டாம் பரிசு:**
அ. அருள் சுரேசா
தரம் 12 கலை (2009)
மன்/ கருங்கண்டல் ம.வி
வட்டக்கண்டல்.

**மூன்றாம் பரிசு:**
வே. ஆனந்தசெல்வி
தி.கு.கன்னியர் மடம்
D8 உருத்திரபுரம்
கிளிநொச்சி.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 149 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 132 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.66ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. ம. டிலூசாந்தி, புதுக்கமம், உயிலங்குளம்.
2. அ. சுபைந்தன், புனித வளனார் மாணவர் இல்லம், மன்னார்.
3. ச. டிலைக்ஷன், நொச்சிக்குளம், உயிலங்குளம்.
4. ஆர். யேசுராஜா, சின்னக்கரிசல், பேசாலை.
5. க. சிறோமி, இலுப்பைக்குளம், நேரியகுளம்.
6. ஏ. மேரி, வேதசாட்சிகள்கோவில், தோட்டவெளி, மன்னார்.
7. ம. சிந்து மொறாய்ஸ், இரத்தினபுரி, வங்காலை.
8. என். ஜனார்த்தனா, மணற்குளம், உயிலங்குளம்.
9. ஐடா றபேக்கா பற்றிக், சின்னக்கடை, மன்னார்.
10. மி. சுதர்சன், முருங்கன் பிட்டி, முருங்கன்.
11. ஜெ. எஸ். லிற்வினியா, மாதா கோவில்வீதி, தலைமன்னார்.
12. நற்குணம் தர்ஷிக்கா, பனங்கட்டுக் கொட்டு கிழக்கு, மன்னார்.
13. பி. றெமூந்துப்பிள்ளை, கங்காணி தீவு, நானாட்டான்.
14. யோ. விஜி, ஜேர்மனி.
15. வ. மதுஷன், பிரதான வீதி, நீர்கொழும்பு.
16. ஏ. அஸ்வின் சுவிஷன், றோத்தறிஸ், சுவிஸ்லாந்து.
17. எஸ். ரி. டியூறின், முதலைகுத்தி, உயிலங்குளம்.
18. ச. நிதன், வஞ்சியன்குளம், வங்காலை.
19. அ. மேரி ஜஸ்மின், இறம்பைக்குளம், வவுனியா.
20. ஜெ. டெல்கின் குரூஸ், சேப்கா வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
21. அ. கவினா டனுஷயா, பு.ச.பெண்கள் கல்லூரி, மன்னார்.
22. றெஜினோல்ட் யேசுராஜ், சாந்திபுரம், மன்னார்.
23. மோ. மேரி காமலிற்றா, பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
24. ட. றோகினி, எமில்நகர், மன்னார்.
25. லீ. டெய்சி, பெற்றா, மன்னார்.
26. வி. விதுஷனா, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
27. பி. நித்தியானந்தன் குரூஸ், 8ம் வட்டாரம், வங்காலை.
28. வே. சியாமளா, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.
29. ஜோ. கிறுசாந்தன், எழுத்தூர், மன்னார்.
30. அகுஸ்தீன் இசைக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
31. அ. கவிதா, தாமோதரம்பிள்ளை வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
32. அ. வேஜின் நிலானி, ஆவணம், நானாட்டான்.
33. அ. கரோலின் கீர்த்திக்கா, பேராலய வீதி, திருகோணமலை.
34. எஸ். ஏ. மொறிஸ், கிடாச்சூரி, வவுனியா.
35. பூவதி தாமோதரம்பிள்ளை, தபால்கந்தோர் வீதி, மன்னார்.
36. செ. ஜெசில்டா, மடுக்கோவில், மடு.
37. ஜெ. அருள் துஷ்யந்தன், காத்தான்குளம், வட்டக்கண்டல்.
38. எட்வின் மரியம் யாழினி, சுவிஸ்லாந்து.
39. ம. றேணுகா, புதுவிளாங்குளம், கனகராயன்குளம், வவுனியா.
40. சே. நிசாந்தினி, ஆண்டார் செட்டிவெளி, நானாட்டான்.
41. அ. தர்ஷினி தற்குரூஸ், தரவன்கோட்டை, மன்னார்.
42. பே. போல் அன்ரனி, மணற்குளம், உயிலங்குளம்.
43. பி. டெய்சி, கொன்னையன்குடியிருப்பு, தாராபுரம்.
44. ஜே. பி. வொசிங்டிளா, பாவிலுபட்டான் குடியிருப்பு, த.மன்னார்.
45. ஜீவரெட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
46. ச. விமலதாஸ், சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்.
47. மேரி கௌசலா, திருக்குடும்ப கன்னியர் மடம், புதுக்குடியிருப்பு.
48. அ. சுபாஜினி, கனகராயன்குளம் தெற்கு, வவுனியா.
49. எம். றினோஷன், பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
50. திருமதி. அ. விஜயகுமாரி, சாளம்பைக்குளம், வட்டக்கண்டல்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 66 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க[1] | த | வு | க | ளை | ல் | கு | ரை | வோ | ழ் | வா[2] |
| மு | வ[3] | சூ | ல் | ✱ | ளி | க் | ம[4] | கி | வே | ழ் |
| த் | ✱ | ள் | ணி | அ[5] | க | லு | க[6] | ட | து | ந் |
| தி | த[7] | லை | மு | றை | ர் | நூ[8] | வி[9] | ழு | ந் | து |
| ன | ர் | ன் | ம[10] | க | க | னி | யை | வி | ஆ[11] | ரி |
| ரா | ஸ் | எ[12] | ர | ளி | ந[13] | ன் | ப | ம் | ல | பு[14] |
| க[15] | டை | சி | மே | ல் | ன் | மு[16] | வ | ந் | த | ழு |
| து | ப[17] | வை | டை | ✱ | நி | லை | பி | ம் | ரு | தி[18] |
| ந் | க | னா | கா[19] | ழ் | யு | த | ந் | ர | ப[20] | யை |
| ரி | லி | ன் | வ | க | ம் | டு | கி | க் | ட | அ[21] |
| பி[22] | ல் | ம[23] | ல் | பு[24] | ✱ | வி[25] | ள | க் | க | ✱ |

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.67 ற்கான முடிவுகளை 2008ம் ஆண்டு ஜனவரி மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.**

# மன்னா

**உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக அல்லேலூயா (லூக்.2.14)**

## மன்னா

**மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை!**

### மன்னாவை மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்

உங்கள் உறவினர் நண்பர்களுக்கு மன்னாவை அறிமுகம் செய்யுங்கள். உங்கள் உறவினர் அல்லது நண்பரின் பெயர் முகவரிகளை தெளிவாக எழுதி சந்தாப்பணத்தையும் எமக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் உறவினர், நண்பரின் வீடுதேடி மன்னா பறந்து செல்லும். உள்நாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 400ஐயும் வெளிநாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக 20 யூரோவையும் (20 யூரோவிற்குரிய இலங்கைப் பணத்தையும்) அனுப்பவும். சந்தாப் பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ அனுப்பலாம். காசோலை மூலம் அனுப்புவதாயின்

வங்கியின் பெயர்: **Hatton National Bank Ltd., Mannar**<br>
பணம் பெறுபவர் பெயர்: **The Editor - MANNA**<br>
வங்கிக் கணக்கு இலக்கம்: **S/A No.02-1678001-5**<br>
என்று குறிப்பிடவும்.

உங்கள் ஆன்மீகப் பசிக்கு உணவாக - உங்கள் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் வகையில் மன்னா இன்னும் புதிய அம்சங்களுடன் புதுமெருகுடன் தொடர்ந்து வெளிவரும்.

### நினைவுகளைப் பிரசுரிப்போர் கவனத்திற்கு

இறந்துபோன உங்கள் அன்புக்கு உரியவர்களின் நினைவுகள், யூபிலி மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றிற்கான கட்டணமாக ரூபா 2000 அறவிடப்படும். இவற்றைக் கலர் பக்கத்தில் பிரசுரிப்பதாக இருந்தால் ரூபா 4000 அறவிடப்படும்.

இந்த நினைவுகள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்களோ, அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

**- மன்னா நிர்வாகம் -**

### அனைத்துத் தொடர்புகளுக்கும்



**பதிப்பாசிரியர்,<br>
மன்னா<br>
புனித வளன் மறைக்கல்வி நிலையம்,<br>
புனித செபஸ்தியார் பேராலய வீதி,<br>
மன்னார்.**

**The Editor,<br>
MANNA<br>
St. Joseph's Catechetical Centre,<br>
St. Sebestian's Cathedral Street<br>
Mannar, Sri Lanka.**

**தொலைபேசி இல. 023 - 2222377/ 060 - 2233276**

### அகில இலங்கை சமாதான நீதவானாக அருட்பணி. எஸ். ஏ. றொஷான் நியமனம்



யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் எஸ். ஏ. றொஷான் அடிகளார் அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் நியமனம் செய்யப்பட்டுள்ளார். தற்போது யாழ். ஆயர் அவர்களின் அந்தரங்க செயலாளராகப் பணியாற்றிவரும் றொஷான் அடிகளாருடைய தன்னலம் கருதா பொதுப்பணியைப் பாராட்டி கௌரவிக்கும் விதமாக அரசினால் இந்த கௌரவ நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சிங்கள மொழி பாண்டித்தியம் பெற்ற அடிகளார் யாழ்ப்பாணத்தின் இன்றைய நெருக்கடி நிறைந்த சூழ்நிலையில் பல்வேறு அவசரத் தேவைகளில் உள்ள பொது மக்களுக்கும், குருக்கள் துறவியருக்கும் சிறப்பான விதத்தில் உதவி புரிந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. காலத்தின் தேவையறிந்து தனது சிறப்பான ஆற்றல்களைப் பயன்படுத்தி நற்பணியாற்றிவரும் றொஷான் அடிகளாருக்கு மன்னாவின் மனம் நிறைந்த வாழ்த்துக்களையும், செபங்களையும் உரித்தாக்குகின்றோம்.

## நீங்காத நினைவுகள்

### 7ம் ஆண்டு நினைவு

மலர்வு 21 . 11 . 1984



உதிர்வு 23 . 12 . 2000

**எல். கிளமென்ற் டிலிசியன்**

**"சீவியத்தில் உம்மை நேசித்தோம்.<br>
மரணத்திலும் உம்மை மறவோம்"**

மல்லிகை மொட்டாகி, மனதுக்குள் நீயிருந்து<br>
பூவாகி மலர்வதற்குள், மறைந்து விட்டாயோ<br>
பூப்பறித்த கூடையிலே தீப்பற்றி எரிந்ததுபோல்<br>
பூப்போல பாலகன் நீ, பூவுக்குள் மறைந்தாயோ<br>
பாசத்தின் பாதையிலே, செல்வமகன் நடப்பான் என்று<br>
காத்திருந்தார் உன் தந்தை.<br>
பாதை தெரிவதற்குள் நீ கண்மூடிவிட்டாயே<br>
வாழ்க்கை நந்தவனத்தில் வண்ணச்சிட்டு பறக்குமென்ற<br>
தாயவளின் ஆசைதனை நோய்கொண்டு சென்றதுவோ.

**என்றும் உம் நினைவுகளுடன்<br>
அம்மா, அப்பா, அக்கா, அத்தான், மருமகன், உற்றார், உறவினர், நண்பர்கள்.**

### ம் ஆண்டு நினைவு

மலர்வு 03 . 11 . 1948



உதிர்வு 01 . 01 . 2007

**சிங்கராயர் மேரி யோசப்**

**(நிர்வாக உத்தியோகத்தர், மடு கல்வி வலயம், மாந்தை)**

**"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்" (யோ.11:25)**

பொழுது கலைந்து புதுவருடம் ஒளிதந்த வேளையிலே<br>
தொழுது எழுந்து மகிழ்கின்ற காலையிலே<br>
அழுது புலம்பி அரற்ற வைத்தீரே,<br>
அன்பான எங்கள் அப்பாவே அமைதியின் பெயர் கொண்டு<br>
அமைதியாய் அடங்கிப் போனாலும்<br>
காலம் வருடம் ஒன்றானாலும்<br>
உங்கள் கனி முகத்தின் நினைவுகள் நித்தம் புத்தம் புதமலராய்<br>
எங்கள் நெஞ்சங்களில் பூத்துக்கொண்டிருக்கும்<br>
உங்கள் ஆன்மா இளைப்பாற இறைஞ்சுகின்றோம்

**என்றும் உம் நினைவுகளுடன்<br>
மனைவி, சகோதரர்கள், சகோதரிகள், உற்றார், உறவினர்கள்.<br>
தகவல்– திரு. எஸ்.எஸ். செல்வமகன் – பிரான்ஸ்**

### நினைவஞ்சலி

**12ஆம் ஆண்டு**



மலர்வு : 18.04.1920<br>
உதிர்வு : 26.12.1995

**செ. சூசையப்பு பீரிஸ் (அதிபர்)**

**11ஆம் ஆண்டு**



மலர்வு : 06.04.1925<br>
உதிர்வு : 16.12.1996

**சூ. அக்னஸ் பீரிஸ் (ஆசிரியை)**

**"ஆண்டவரே உம் வேலைப்பாடுகள் எத்தனை எத்தனை!! நீர் அனைத்தையும் ஞானத்தோடு செய்துள்ளீர்"** (தி.பா.104.24)

பண்பான பாசதீபங்களே! பாசமாய் எம்மை அரவணைத்து<br>
பக்குவமாய் வளர்த்து கருத்தாய் கல்வியளித்து<br>
கடமையில் கண்ணியமாய், கருணையின் வடிவமாய்<br>
கண்ணின் மணிபோல் காத்த எம் தெய்வங்களே<br>
எங்கள் கண்ணீர்ப் பூக்களை உங்கள் பாதமலர்களில் சமர்ப்பிக்கின்றோம்<br>
நித்திய இன்பத்திலிருந்து எமக்காய் நிமலனை வேண்டிடுவீர்.

**நினைவலைகளில் சங்கமிக்கும்<br>
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டன்,<br>
மகன் அருட்பணி. சந்திரன் அஞ்சலிற்றோ (CSSR)**

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பு 14, பிறின்ஸ் ஒப் வேல்ஸ் அவனியூ, 784/1 இலக்கத்திலுள்ள கிறேஸ் என்ரபிறைசஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது